www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

நவம்பர் – 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



## கபட நாடகம்

படிப்பகம்

www.padippakam.com

# பாரதி அவலம்

## வாசகர் கடிதம்

✱ பாரதி குறித்த விமரிசனத்தில் கொஞ்சம் நிதானம் காட்டியிருக்கலாம். தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான ஒரு கவிஞன், போராளி, தான் சார்ந்த மேட்டிமைக் கலாச்சாரத்தினரால் எப்படி ஒடுக்கப்பட்டான் என்றும், அந்தக் கவிஞனை யாரும் இறுதிவரையிலும் புரிந்து கொள்ளவில்லை — என்ற வடிவில் பாரதி சரியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். நீங்கள் சொல்லும் அவனின் அரசியல் விவகாரங்கள் இனியொரு பக்கம். சமூக புறத்தாக்குதல்கள் என்ற திரை வடிவம் ஒவ்வொரு போராளியும் சந்திக்கும் கொடுமையான உண்மையே.

— சாத்தூர் வாசகர்கள்.

✱ பாரதியைப் பற்றிய சமூக மதிப்பீடுகள் அல்ல பிரச்சினை; பாரதியின் சமூகப் புரிதலே எவ்வளவு முரண்பாடுகளுடன் இருந்தது என்பதைக் கட்டுரை வெளிச்சமாக்கியது. பாரதி மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் யாருடன் சேர்ந்திருப்பான் என்ற கேள்வி ''பாரதியைப் பூணூல் போட்டு அழகு பார்க்காதீர், அவன் அக்கிரகாரத்து அதிசயம்'' எனும் 'நந்தன்' வழிகளின் பதைப்பை நாடி பிடித்துக் கேட்டதாய் அமைந்தது.

- நாஞ்சில் இராசாசி, திருவள்ளூர்.

✱ 'பாரதி அவலம்' - எளிமையாய் இவ்வாறு புரிந்து கொள்கிறேன்:

'களத்தில் குமுறிக் கொண்டு சிலர்/சிலரோடு சேர்ந்து பலராவோம்
எரிமலையாய் வெகுண்டெழுவோம்/வெடித்து வரும் பொழுது
தடுக்கும் துணிவு யாருக்கும் வராது/தடுக்கின்ற எதுவும்
உயிரோடிராது.'

— என்கிற ரீதியில் முன்பு கவிதைகள் எழுதினேன். தவறிப் போய் ஒருநாள் 'எழுதுகிறவற்றுக்கு எழுதுகிறவன் உண்மையாய் இருத்தல் வேண்டும்', என்ற மாவோவின் வரிகளை படித்து விட்டேன். இன்று வார்த்தை, தாள், மை எல்லாம் இருந்தும் எழுதுவதை நிறுத்திவிட்டேன். ஒரு கவிஞனைக் கொன்ற பாவம்(!) மாவோவை சும்மா விடாது.

- இராம. கிருஷ்ணன், சென்னை.

✱ நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த டால்ஸ்டாய் மார்க்சிய எதிர்ப்பையும் உள்ளடக்கி பல சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட படைப்புகளைப் படைத்தார். இறுதிக் காலத்தில் ரயில்வே நிலையத்தில் அனாதையாக இறந்து போனார். அதாவது அவலமாக இறந்தார்.

டால்ஸ்டாயைப் பற்றி ரசியாவில் உள்ள முதலாளித்துவ பத்திரிகைகள் புகழ்ந்து கொண்டிருந்த போது, லெனின் அறிவியல்பூர்வமான விமர்சனத்தை எழுதினார். அதில் டால்ஸ்டாயிடம் உள்ள சரியான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே தவறான கண்ணோட்டத்தை விமர்சனம் செய்கிறார்.

பாரதியின் வாழ்க்கைக்கும் படைப்புக்கும் முரண்பாடு இருந்தது; ஆளும் வர்க்கத்தோடு சமரசமும் செய்து கொண்டான். எனினும் அவனிடம் பலமான அம்சமே இல்லையா? பாரதி நினைத்திருந்தால் மற்ற பார்ப்பனர்களைப் போலவே ஒரு அரசனையோ, ஒரு வெள்ளையனையோ அண்டி பிழைத்திருக்க முடியும்.

பாரதியை ஒரு தி.க. தோழர் பார்த்தால் பார்ப்பனனாகத் தெரிவான். ஒரு தமிழ்தேசியவாதி பார்த்தால் இந்திய தேசியவாதியாகத் தெரிவான். இப்படி பல முரண்பாடுகளோடு வாழ்ந்த பாரதியை கம்யூனிஸ்டுகள்தான் அறிவியல் பூர்வமாக பார்ப்பவர்கள். ஆனால் 'புதிய கலாச்சாரத்தின்' பார்வை அறிவியல் பூர்வமானது என்று எனக்குப் படவில்லை.

ஏற்கனவே முனைவர். கோ. கேசவன் சிறு நூலொன்றில் ''பாரதியைப் பற்றி புதிய கலாச்சாரத் தோழர்கள் புதிய அணுகுமுறையைக் கையாளவேண்டும்'' என்று கூறியதுடன் ரசியாவுக்கு டால்ஸ்டாய் மகா கலைஞன் என்று லெனின் கூறினார் என்றால் தமிழ்நாட்டுக்கு பாரதி மகாகவி என்று கூறுவதில் தப்பில்லை என்றார்.

- இ.சி. இராமச்சந்திரன், ஈரோடு.

✱ பாரதியை ஆய்வு செய்துள்ள கைலாசபதி, கேசவன் போன்ற அறிஞர்கள், பாரதியின் முரண்பாட்டை ஒருவகையான விசித்திரம் என்றே கருதுகிறார்கள். மற்றபடி தி.க.வினர், கூட பாரதியை ஒற்றையடியாய் மறுக்கிறார்களேயன்றி, பாரதியின் ஆளுமையை ஆய்வு செய்ததில்லை. பாரதியின் முரண்பாட்டைப் பற்றியும், தனது கவிதையின் உணர்வில் அவனால் ஏன் வாழ முடியவில்லை என்பதையும், பாரதியைச் சிதைத்தது - வீழ்த்தியது சமூகமல்ல அவனிடம் வேர் கொண்டிருந்த சித்தாந்தமும், அவனது நடைமுறையுமே என்பதையும் ஆழமான விவாதங்களுடன் உங்கள் கட்டுரை நிறுவியிருக்கிறது.

மற்றபடி பாரதியின் சமகால அரசியல் - சமூக வாழ்க்கையை ஒரு சித்திரமாகக் காட்டியிருந்தால் கட்டுரை இன்னும் வலுப்படும். ஏனெனில் அன்று பார்ப்பன இந்துமத சமூகத்தின் மேல்தட்டுப் பிரிவு, காலனிய ஆட்சியுடன் கொண்டிருந்த உறவில் - அதாவது தான் தலைமையேற்ற அனைத்து அரங்குகளிலும் — பாரதியின் அவலத்தையே பிரதிபலித்தது. அன்றைய அரசியல் சமூக மேடை பழமைவாத, சீர்திருத்த, முற்போக்கு, பொதுவுடைமை என பல பிரிவுகளாய் பிரிந்திருந்தாலும் அதில் வருணாசிரம தர்மமும் அதன் வாழ்க்கை முறையும் மட்டும் கேள்விக்குள்ளாகப்படவில்லை.

பாரதியை விட கருத்திலும், நடைமுறையிலும் மிகத் தீவிரமாக செயல்பட்டவர் மராட்டியத்தின் சாவர்க்கர். 1857 முதல் இந்திய சுதந்திரப் போரை உணர்ச்சியுடனும், தேர்ந்த ஆய்வுடனும் நூலாக எழுதியிருக்கிறார். அந்நூலில் டெல்லி பகதூர்ஷாவால் ஏற்றப்பட்ட முகலாய அரசின் பச்சை பிறைக் கொடியை தேசியக் கொடி என பெருமிதத்துடன் வருணிக்கிறார். லண்டன் சென்று வெள்ளையர்களின் சிம்ம சொப்பனமாய் விளங்குகிறார். அந்தமான் தனிமைச் சிறை உட்பட இரட்டை ஆயுள் தண்டனை பெற்றிருக்கிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'பூணூல்' சடங்கு செய்திருக்கிறார். இருப்பினும் தமது கடைசி 20 ஆண்டுகளில் கடைந்தெடுத்த இந்துமத வெறியராக மாறி வெள்ளையருடன் உறவு கொண்டு முசுலீம்களை எதிர்த்து இந்து மகா சபை கட்சியை நடத்துகிறார். கோட்சேயின் வழிகாட்டியாகிறார். எதனால் இந்த வீழ்ச்சி?

'சக்கிலியர்களின் குடிசையிலிருந்து புதிய இந்தியா எழட்டும்' என வீறு கொண்டெழுந்த விவேகானந்தரும் தனது முக்கிய லட்சியமாக அறிவித்தது - வேத உபநிடத காலத்திற்கு திரும்பி - புராதன பாரதத்தை படைப்பது, அதற்காக தொண்டு செய்வது என்பதுதான். காங்கிரசு - காந்தி வகையினரும் மிதவாத இந்து சீர்திருத்தத்தையே ஏற்றுக் கொண்டனர். இன்றைக்கும் 'கம்பராமாயண ரசிகர்களாக' இருக்கும் போலிப் பொதுவுடைமை தலைமைக் குஞ்சுகள் - அன்றைக்கும் தலைமையில் மட்டும் இப்படித்தான் இருந்தார்கள்.

எனவே, வர்க்கப் பார்வையோ, சமூக சீர்திருத்தமோ, தேசிய விடுதலையோ எல்லாம் வருணாசிரம வாழ்வின் ஆதாயங்களைத் தக்க வைத்துக் கொண்டே உலவியது, அதை மீறி எதுவுமில்லை. வருணாசிரமத்தை சமூக அரங்கில் மீறிய பெரியாரும், அம்பேத்காரும் கூட, வருணாசிரமத்தைக் காத்து வந்த வெள்ளையர் ஆட்சியை அரசியல் அரங்கில் எதிர்க்கவில்லை. ஆகவே மக்கள் நோக்கிலிருந்து பார்க்கும் போது அன்றைய இந்தியாவின் சமூகத் தலைமை ஒரு புரட்சிகர மாற்றத்தை தடுக்கும் பங்கினையே ஆற்றியது.

எனவே இப்பெரும் நிகழ்வுகளின் பின்புலத்தில் பார்க்கும்போதுதான் பாரதிக்குச் சூட்டப்படும் ஒளிவட்டத்தின் பொருத்தமின்மையையும், ஆபத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

- முருகன், சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 6
• நவம்பர் - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# தீய உள்நோக்கம்!

ஒரு முட்டாள் சர்வாதிகாரியின் அதிகாரமிடுக்கு, பண்ணையாரின் மமதை, இந்து பத்திரிகைக்கு வாசகர் கடிதம் எழுதும் ஓய்வு பெற்ற பார்ப்பன அதிகாரியின் திமிர் - இவையனைத்தையும் ஒருங்கே கொண்டிருக்கும் நபர்கள் நீதிபதி நாற்காலியில் அமர்ந்திருந்தால் என்ன நடக்கும்? அவர்கள் அதிகாரபூர்வமாக வழங்கும் தீர்ப்புகள், அதிகாரபூர்வமற்ற முறையில் நீதிமன்றத்தின் அவர்கள் உதிர்க்கும் மணிமொழிகள் ஆகியவற்றுக்காக எந்தவொரு நீதிபதியையும் ஒரு குடிமகன் விமரிசிக்க முடியாது என்று சட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கியிருந்தால் என்ன நடக்கும்? ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் அதுதான் நடந்திருக்கிறது.

தமிழக, கர்நாடக அரசுகளுக்கெதிராக நீதிபதிகள் பரூச்சா, மொகபாத்ரா, சபர்வால் ஆகியோர் அக்டோபர் 19-ம் தேதி உச்சநீதி மன்றத்தில் எழுப்பிய கேள்விகள் இவை: ''ராஜ்குமாரைப் போன்ற முக்கியமான நபருக்கு அவரே விரும்பாவிட்டாலும், போலீசு பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டும் - தவறியது ஏன்? 51 தடா கைதிகளையும் தமிழகச் சிறையில் உள்ள 5 பேரையும் விடுவித்தால் ராஜ்குமார் விடுவிக்கப்படுவார் என்று உத்திரவாதம் தரமுடியுமா? சத்தியமங்கலம் காடே ஆயுதக் களமாகி இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு நேராது என்பது என்ன நிச்சயம்? சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியாவிட்டால் மூட்டை கட்டுங்கள் - எதற்கெடுத்தாலும் காவிரிப் பிரச்சினை என்று ஏன் பேசுகிறீர்கள்? இந்தக் கடத்தல் விவகாரம் - தடா கைதிகள் விடுதலை ஆகிய எல்லாமே வீரப்பனுக்கு உதவி செய்வதற்காகத் திட்டமிட்டே நடத்தப்பட்ட நாடகம் என்று நாங்கள் ஏன் சந்தேகிக்கக் கூடாது?'' நீதிபதிகள் கேட்டுள்ள இக்கேள்விகள் புதிதல்ல; சோ, தினமலர், இந்தியா டுடே வாசந்தி போன்ற மாசு மருவற்ற நடுநலையாளர்கள் தமிழகத்தில் எழுப்பிவரும் கேள்விகள்தான் இவை.

''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்கிறபோது ராஜ்குமாருக்கு மட்டும் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் என்று நீதிபதிகள் கேட்கவில்லை. கோடீசுவரனான சினிமா நடிகர் ஒருவரின் பண்ணை வீட்டுக்கும், சின்ன வீட்டுக்கும் காவல் இருப்பதைவிட போலீசுக்கு என்ன வேலை என்று குமுறியிருக்கிறார்கள்.

அயோத்தியில் கடப்பாரையுடன் கரசேவை நடத்த அனுமதி வழங்கிவிட்டு, குண்டர் படையின் தலைவரான முதல்வரையே காவலராக நியமித்துவிட்டு, மசூதியின் பாதுகாப்புக்கு உத்திரவாதமும் வழங்கிவிட்டு, பாபர் மசூதி இடிப்பை வேடிக்கை பார்த்த உச்ச நீதிமன்றம், ''தடா கைதிகளை விடுவித்தால் ராஜ்குமாரை விடுவிக்க என்ன உத்திரவாதம்?'' என்று தமிழக அரசை மடக்குகிறது.

டெல்லி சீக்கியர் படுகொலை, அயோத்தி - பம்பாய் முஸ்லீம் படுகொலைகள் ஆகியவற்றை திட்டமிட்டு நடத்திய கொலைகாரர்களுக்கும் வாய்தாவும், விடுதலையும் வழங்கி, நாடே மதவெறியால் சின்னாபின்னமாவதை மேற்பார்வையிட்டு வரும் நீதிமன்றம் தமிழகத்தில் பிரிவினைவாதம் பற்றிக் கவலை தெரிவிக்கிறது.

காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பை - அதாவது சட்டத்தின் ஆட்சியை - அமல்படுத்த மறுக்கும் கர்நாடக அரசைக் கட்டுப்படுத்த முடியாத நீதிமன்றம் ''சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் மூட்டை கட்டு'' என்று மாநில அரசை எகத்தாளம் செய்கிறது. ''சிரித்தால் சிரச்சேதம்'' என்று அஞ்சி வாய்பொத்தி நிற்கும் குடிமக்களிடையே கம்பீரமாக உலா வந்த அம்மண மகாராஜாவை நினைவுபடுத்துகிறார்கள் நீதிபதிகள்.

அடுத்து, கோமாளித்தனம் முடிந்து நீதிபதிகளின் கூர்மதி செயலாற்றத் தொடங்குகிறது. ''வீரப்பனுக்கு உதவுவதற்காகவே நடத்தப்படும் நாடகம்தான் இந்தக் கடத்தல் என்று நாங்கள் ஏன் சந்தேகப்படக்கூடாது?'' என்று கேட்கிறார் நீதிபதி பரூச்சா. தடா கைதிகளை விடுவித்தது செல்லுமா, செல்லாதா என்று மட்டுமே தீர்ப்புக் கூற வேண்டிய நீதிபதி, கடத்தல் உண்மையா, நாடகமா என்ற ஆராய்ச்சியில் இறங்குவதுடன், தமிழக அரசு தீய உள்நோக்கத்துடன் வீரப்பனுக்கு உதவுவதாகக் குற்றம் சாட்டவும் செய்கிறார். இதை வரம்பு மீறிய பேச்சு என்று நாம் கூறலாமெனினும், தன்னிடம் விசாரணைக்கு வந்துள்ள வழக்கை ஆழமாகவும், அகலமாகவும் ஆராய்ந்து நீதியை நிலைநாட்ட ஒரு நீதிபதி மேற்கொள்ளும் ஆய்வு என்றே நாம் நம்புவோம். ஆனால் அவ்வாறு நம்புவதற்கு முன் அதேநாளில், அதே நீதிபதி - பரூச்சா - வேறொரு வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பையும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

**பொ**துத்துறை நிறுவனமான இந்திய எண்ணெய் எரிவாயுக் குழுமத்திற்குச் சொந்த

படிப்பகம்

www.padippakam.com

மான, அரபிக்கடலில் உள்ள பன்னா, முக்தா என்ற இரு எண்ணெய்க் கிணறுகளை ரிலையன்ஸ் அம்பானி - அமெரிக்க என்ரான் கூட்டு நிறுவனத்திற்கு அடிமாட்டு விலைக்கு விற்ற ஒப்பந்தம் செல்லுபடியாகும் என்றும், இதை நீதி மன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமானால் அரசாங்கம் தீய உள்நோக்கத்துடன் (Malafide intention) இந்த ஒப்பந்தத்தைப் போட்டுள்ளது என்று மனுதாரர் நிரூபிக்க வேண்டுமென்றும் நீதிபதி பரூச்சா தலைமையிலான பெஞ்சு தீர்மானித்துள்ளது.

**51 தடா கைதிகளை விசாரணையின்றி ஆண்டுக் கணக்கில் சிறை வைத்திருப்பதில் உள்ள தீய உள்நோக்கத்தை ஆராய முடியாத நீதிபதி, 20,000 கோடி ரூபாய் பொதுச் சொத்தை 12 கோடிக்கு விற்றுவிட்டு, சம்பந்தப்பட்ட கோப்பையே காணவில்லை என்று கூறும் அரசிடம் தீய உள்நோக்கத்தைக் காண முடியாத நீதிபதி, வீரப்பனுக்கு உதவுவதற்காக அரசே இந்தக் கடத்தல் நாடகத்தை நடத்துவதாக உள்நோக்கம் கற்பிக்கிறார்.**

சுமார் 20,000 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய்க் கிணறுகளை வெறும் 12 கோடி ரூபாய்க்கு அரசு விற்பனை செய்துள்ளது என்பதால் இந்த விற்பனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் "மக்கள் இயக்கங்களின்தேசியக்கூட்டணி" என்ற அமைப்பு தொடர்ந்த பொதுநல வழக்கில்தான் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சி.பி.ஐ. (CBI)யின் லஞ்ச ஒழிப்புத்துறை எஸ்.பி.யான ஒய்.பி. சிங் என்பவர் தயாரித்த ரகசிய அறிக்கையின் நகலை ஆதாரமாகக் கொண்டுதான் இவ்வழக்கு தொடுக்கப்பட்டது.

இந்த ஏலம் என்பதே மோசடி என்றும், இரண்டு எண்ணெய்க் கிணறுகள் இனாமாகத் தூக்கித் தரப்பட்டுவிட்டன என்றும் இதன்மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் ஒய்.பி. சிங் இந்த அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் இப்பொதுநல வழக்கு தொடரப்பட்டவுடனே அவர் இலஞ்ச ஒழிப்புத் துறையிலிருந்து தூக்கியெறியப்பட்டார்.

"பொது ஏலமுறையில் நடந்ததாகச் சொல்லப்படும் இந்த விற்பனையில் அம்பானியையும் என்ரான் நிறுவனத்தையும் தவிர வேறு யாருமே கலந்து கொள்ளவில்லை; ஏல அறிவிப்பு கொடுத்த முறையே சரியில்லை; ஏலத்தை நடத்திய அதிகாரிகள் யார் என்றே தெரியவில்லை; மொத்த விவகாரமுமே குழப்பமாக உள்ளது" என்று இவ்விற்பனையைப் பற்றிக் குற்றம் சாட்டியிருக்கிறது தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் (CAG) அறிக்கை.

ஏலம் நடைபெறும் தருவாயில் எண்ணெய் எரிவாயுக் குழுமத்தைச் சேர்ந்த இரு உயரதிகாரிகள் தம் வேலையை ராஜினாமா செய்துவிட்டு அம்பானியின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளனர். 1993-இல் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த சதீஷ் சர்மா அம்பானியிடம் 4 கோடி ரூபாய் இலஞ்சம் வாங்கியதாக அவரது தனி உதவியாளர் சபய்யா சி.பி.ஐ.-இடம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்; பிறகு இல்லை என்று முன்னுக்குப்பின் முரணாகப் பேசியிருக்கிறார்.

அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல, இந்த வழக்குக்கு ஆதாரமான அறிக்கை அடங்கிய கோப்பு காணாமல் போய்விட்டது என்று நீதிமன்றத்தில் சி.பி.ஐ. கூறியிருக்கிறது.

20,000 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய்க் கிணறுகள் (1993 மதிப்பின்படி) வெறும் 12 கோடி ரூபாய்க்கு அம்பானிக்கும் அமெரிக்காவுக்கும் சர்வமானியமாக எழுதித் தரப்பட்ட இந்த அயோக்கியத்தனம் குறித்து நீதிபதியின் முன் வைக்கப்பட்ட விவரங்கள் இவை.

இந்த விவரங்களைப் பார்த்த மாத்திரத்தில் இதில் நடைபெற்றிருக்கக் கூடிய இமாலய ஊழலை ஒரு அடிமுட்டாளோ அயோக்கியனோ கூட மறுக்கத் துணிய மாட்டான். ஆனால் அறிவுக் கூர்மையுடன் இதைப் பரிசீலித்த நீதிபதி, இந்த ஏலத்தில் முறைகேடு நடந்திருப்பதாகத் தெரியவில்லை என்றும், இது குறித்து விசாரணை தேவையில்லை என்றும் தீர்ப்பளித்திருக்கிறார். எண்ணெய்க்கிணறுகளை விற்றதில் அரசுக்குத் தீய உள்நோக்கம் இருந்ததாக மனுதாரர் நிரூபித்தாலொழிய அரசாங்கம் எடுக்கும் முடிவுகளை நீதிமன்றம் மறுபரிசீலனை செய்ய முடியாதென்றும் கூறியுள்ளார்.

**ஜெயலலிதாவின் சொற்படி தான் நீதிபதிகள் பேசுகிறார்கள் என்று கூறுவது நீதிபதிகளை அவமதிப்பதாகிவிடும். நீதிபதிகள் சுதந்திரமாகச் சிந்திக்கும்போது அவர்கள் ஜெயலலிதாவைப் போலவே சிந்திக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்வோம்.**

51 தடா கைதிகளை விசாரணையின்றி ஆண்டுக் கணக்கில் சிறை வைத்திருப்பதில் உள்ள தீய உள்நோக்கத்தை ஆராய முடியாத நீதிபதி, கொலை, கற்பழிப்பு, மனித உரிமை மீறல் ஆகிய குற்றச்சாட்டுக்களுக்குள்ளான தேவாரம், மீண்டும் தன்னை அதிரடிப்படைத் தலைவனாக்கும்படி கோருவதன் உள்நோக்கத்தை ஆராய முடியாத நீதிபதி, 20,000 கோடி ரூபாய் பொதுச் சொத்தை 12 கோடிக்கு விற்றுவிட்டு, சம்பந்தப்பட்ட கோப்பையே காணவில்லை என்று கூறும் அரசிடம் தீய உள்நோக்கத்தைக் காணமுடியாத நீதிபதி, வீரப்பனுக்கு உதவுவதற்காக அரசே இந்தக் கடத்தல் நாடகத்தை நடத்துவதாக உள்நோக்கம் கற்பிக்கிறார்.

ஆளும்வர்க்கக் கொடுங்கோன்மையைத் தாங்கி நிற்கும் ஒரு தூண்தான் நீதிமன்றம் என்பது ஒருபுறமிருக்க நீதித்துறை பாசிசம் என்பது எவ்வளவு வெட்கங்கெட்டதாகவும், திமிர்பிடித்ததாகவும் இருக்கும் என்பதற்கு இது ஒரு சான்று.

டான்சி ஊழல் தொடர்பாக முதலமைச்சராகிய தன்மீது வழக்கு தொடர ஆளுநர் சென்னா ரெட்டி வழங்கிய அனுமதி செல்லாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விசாரணையை இழுத்தடிக்க ஜெயலலிதா முயன்றபோது, அவ்வழக்கிற்கு வாய்தா போட்டு, வாய்தா போட்டு பிறகு அரசியல் சட்ட பெஞ்சுக்கு மாற்றி, மொத்தத்தில் சில ஆண்டுகள் விசாரணையை இழுத்தடிக்க காரணமாக இருந்தவர் இந்த நீதிபதிதான் என்ற உண்மை விவரத்தை இந்த சந்தர்ப்பத்தில் நாம் நினைவுபடுத்தினால் அது நீதிமன்ற அவமதிப்பாகிவிடும். நீதிபதிக்கே உள்நோக்கம் கற்பிப்பதாகிவிடும்.

ராஜ்குமார் வழக்கு விசாரிக்கப்பட்ட அதேநாளில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையும் இங்கே குறிப்பிடத்தக்கது. வரவிருக்கும் தேர்தலுக்குப்பின் தமிழக முதல்வராகத் தான் ஆகப்போவதாகவும், அப்போது சத்தியமங்கலம் காட்டில் தனித் தமிழ்நாடு அறிவிக்க வீரப்பனும் கருணாநிதியும் நடத்தும் கூட்டுச் சதிதான் இது என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார். ஜெயலலிதாவின் சொற்படிதான் நீதிபதிகள் பேசுகிறார்கள் என்று கூறுவது நீதிபதிகளை அவமதிப்பதாகிவிடும். நீதிபதிகள் சுதந்திரமாகச் சிந்திக்கும்போது அவர்கள் ஜெயலலிதாவைப் போலவே சிந்திக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்வோம்.

எனவேதான் ஊழல் வழக்கின் தண்டனைகளிலிருந்து உச்ச நீதிமன்றம் தன்னை விடுதலை செய்யும் என்று ஜெயலலிதா ஆணித்தரமாக நம்புகிறார் போலும்!


படிப்பகம்

www.padippakam.com

## ஆர்.எஸ்.எஸ்.—பா.ஜ.க. மோதல்

# கபட நாடகம்

**நாகபுரி, ஆக. 27,** பாரதீய ஜனதா கட்சியின் தேசியக் குழுக்கூட்டம். கட்சியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார், தாழ்த்தப்பட்ட சாதியைச்சேர்ந்த பங்காரு லட்சுமணன். பிறகு தலைமை உரையாற்றினார்.

"1998 மற்றும் 1999 நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. ஒரு தேக்க நிலையை அடைந்ததற்குக் காரணம், அது முஸ்லீம்களின் வாக்குகளைப் பெறத் தவறிவிட்டது. இந்திய முசுலீம்களிடையே வாஜ்பாயி நற்பெயரும் மரியாதையும் பெற்றிருந்தாலும், அவர்கள் பா.ஜ.க.விடமிருந்து விலகியே நிற்கிறார்கள். முசுலீம்கள் நம்முடைய சதையின் சதை; இரத்தத்தின் இரத்தம் என்று நமது முன்னோடித் தலைவர் தீனதயாள் உபாத்தியாயா 1967 கோழிக்கோடு மாநாட்டில் சொன்னார். அதுதான் நமது வழிகாட்டியாக இருக்க வேண்டும்."

தலித் சமூகத்தைச் சேர்ந்த பங்காரு லட்சுமணன் பா.ஜ.க.வின் தலைவராகியிருப்பது தேசிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. கால மாற்றத்துக்கும் புதிய கருத்தோட்டங்களுக்கும் ஏற்ப பா.ஜ.க. புதிய வடிவத்தைப் பெறத் துணிந்திருப்பதற்கு அடையாளம். அவரது நாகபுரி உரை புதிய சிந்தனையைப் பிரதிபலிப்பது, துணிச்சலானது என்று பத்திரிக்கைகள் பாராட்டின.

* * *


**ஆ**க்ரா, அக். 15, ராஷ்ட்ரீய சுயம்சேவச் சங்கத்தின் 77-வது ஆண்டு விழா, மூன்று நாட்கள் நடந்த தேசியப் பாதுகாப்பு முகாமில், அதன் தலைவர் குப்பஹள்ளி சீதாராமையா சுதர்சன் நிறைவுரையாற்றினார்.

"பூர்வீகத்தில் தாங்கள் இந்துக்கள் என்ற கருத்தையும் பிற மதங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் தன்மையையும் முசுலீம்களும் கிறிஸ்தவர்களும் ஏற்றுத் தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும்.

"ஸ்ரீ ராமபிரான், ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆகியோருடைய ரத்தம்தான் தங்களுடைய நரம்புகளில் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை முசுலீம்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். அன்னியப் படையெடுப்பாளர்களான கஜினி முகமது, தைமூர்லாங், பாபர், ஔரங்கசீப் அல்லது புனித தாமஸ் போன்ற மதபோதகர்கள்தாம் தங்களுடைய சகோதரர்கள் என்று சொந்தம் கொண்டாடக் கூடாது. முசுலீம்களின் முன்னோர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அல்ல. எனவே முஸ்லீம்களின் முன்னோர்களில் பெரும்பாலோர் இந்தியர்கள்தான்.

"இந்திய தேசியப் பொது நீரோட்டத்துக்கு வெளியே கிறித்தவ குருமார்கள் தமது விசுவாசத்தை வைத்திருக்கிறார்கள். அனைத்து மதங்களும் சமமானதல்ல, கத்தோலிக்க கிறித்தவத்துக்கு வெளியே இரட்சிப்பு இருக்க முடியாது என்ற போப்பின் அறிக்கை கண்டனத்துக்குரியது இதுபோன்ற கருத்துக்களில் நம்பிக்கை கொண்டுள்ள கிறித்தவ அமைப்புகளை இந்தியாவில் பணியாற்ற அனுமதிக்க முடியாது. மேற்கத்திய வல்லரசுகளின் படையணிகளில் ஒன்றுதான் தேவாலயம்.

எனவே இந்தியக் கிறித்தவர்களும் கத்தோலிக்க தலைமையிடத்தின் ஏற்க முடியாத கருத்தை உதறித் தள்ளிவிட்டு, அதனுடன் உள்ள உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்காக இந்திய மயமாக்கப்பட்ட சுதேசி தேவாலயம் மிகமிக அவசியமாக உள்ளது. தேவாலயத்துக்கு வெளியேயும் கூட ரட்சிப்புக்கு வழியுண்டு என்பதை கிறித்தவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்."



பா.ஜ.க.வுக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் இடையிலான இந்த முரண்நிலைக்கு இரண்டு விதமான காரணங்களும், விளக்கங்களும் தரப்படுகின்றன.

"சில தலைவர்களும் பிரமுர் களும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க: ஆகிய இரண்டு அமைப்புக ளிலும் இருந்தாலும், இரண்டும் வேறுவேறு தளங்களில் பணி யாற்றும் தனித்தனி அமைப்புகள். ஆர்.எஸ்.எஸ். ஒரு அரசியல் கட்சி யல்ல; அது இந்துத்துவா சித்தாந் தத்தை மையமாகக் கொண்ட சமூக கலாச்சார இயக்கம். ஆனால் பா.ஜ.க. ஒரு அரசியல் கட்சி. சமுதா யத்தின் எந்தப் பிரிவையும் தனி மைப்படுத்தாமல், நாட்டின் அனைத்து சமூக - மொழி மற்றும் சம யங்களின் தொகுப்பாக பா.ஜ.க மாறி, புதிய தோற்றத்தையும் - புதிய வடிவத்தையும் பெற விரும்புகிறது. முசுலீம்கள், தலித்துகள், பிற்பட்ட சமூகங்களை வசீகரித்து ஈர்ப்பதன் மூலம் பா.ஜ.க.வின் அடித்தளத்தை விரிவுபடுத்த முயலுகிறது."

இதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. தலைவர்களும் அவர்களு டைய விசுவாசிகள், ஆதரவாள களும் தரும் விளக்கம். பா.ஜ.க.வின் தலைவர் பங்காரு லட்சுமணனே இப்படித்தான் விளக்கமளித்திரு கிறார். "ஆர்.எஸ்.எஸ்.ஸின் கத வுகள் இந்துக்களுக்கு மட்டுமே

www.padippakam.com

திறக்கும். ஆனால் பா.ஜ.க. அனைத்து மக்களுக்கும் பொதுவானது. ஆர்.எஸ்.எஸ். எங்களுடைய மனச்சாட்சியின் காவலன் இல்லை. எங்களுடைய எஜமானனும் இல்லை. நிச்சயமாக, அரசியலைப் பொறுத்தவரை நான்தான் தலைவர்; ஆர்.எஸ்.எஸ். இல்லை'' என்கிறார், லட்சுமணன்.

ஆர்.எஸ்.எஸ்.க்கும் - பா.ஜ.வுக்கிடையிலான முரண்நிலைக்கு வேறொரு விளக்கமும் காரணமும் கூட அளிக்கப்படுகிறது.

''மற்றபிற கட்சிகளைப் போன்றது தான் இட்லரின் தலைமையிலான தேசிய சோசலிசக் கட்சியும், அது ஆட்சிக்கு வருவது குறித்தும், அதன் நாஜிக் கொள்கை, தொண்டர் படை குறித்தும் அச்சப்பட ஒன்றுமில்லை'' ஜெர்மானிய நடுத்தர வர்க்கத்தினரிடையேயும் ஜனநாயக, சீர்திருத்தவாதக் கட்சிகளிடையேயும் உருவாக்கப்பட்ட இந்த அலட்சியமும் சுயதிருப்தியும்தான் நாஜி இட்லர் அடைந்த முதல் அரசியல் வெற்றி.

அதுபோன்றே, பாரதீய ஜனதா கட்சி பற்றியும் வாஜ்பாயி பற்றியும் பொய்யான தொரு தோற்றத்தை உருவாக்கும் முயற்சி கடந்த சில ஆண்டுகளாகவே நடந்து வருகிறது. ''ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகளான விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் முதலியவை போன்று பாரதீய ஜனதாக் கட்சி இந்து மதவெறி தீவிரவாதக் கட்சி அல்ல, மதச் சார்பின்மையை ஏற்றுக் கொண்டுள்ள, சகிப்புத் தன்மை மிக்க மிதவாத ஜனநாயகக் கட்சி; குறிப்பாக பிரதமர் வாஜ்பாயி மிதவாதப் போக்காளர்; மதச்சார்பற்ற ஜனநாயகவாதி என்ற நன்மதிப்பைப் பெற்றவர்; நாட்டின் எல்லாப் பிரிவு மக்களுடைய ஆதரவையும் பெற்றவர்'' என்ற கருத்து திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

அதன் குருப்பீடமாகிய ஆர்.எஸ்.எஸ். மற்றும் இதன் சங்பரிவாரங்களுக்கும் முரண்பாடு இருப்பதாகவும் தோற்றமளிக்கப்படுகிறது. பாரதீய ஜனதா கட்சிக்குள்ளும் அரசுக்குள்ளும் கூட வாஜ்பாய் தலைமையிலான ஒரு பிரிவுக்கும் அத்வானி தலைமையிலான இன்னொரு பிரிவுக்கும் மோதலும் முரணண்பாடும் முற்றி வருவதாகவும் பிரச்சாரம் நடக்கிறது.

இவையெல்லாம் வெறும் நாடகமா? நிஜமா? உண்மையில் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தில் பிளவும், குழப்பமும் நிலவுகிறதா?

உண்மை என்னவென்றால் ஆர்.எஸ்எஸ். - பாஜ.க. பாசிசப் பரிவாரங்களுக்குள் முரண்பாடு - மோதல், குழப்பம் - குழுச்சண்டை என்பதெல்லாம் வெறும் பம்மாத்துத்தான்.

சற்று ஆழமாகப் பார்த்தால் தெரியும், ''இந்திய முசுலீம்களும் கிறித்தவர்களும் தாங்கள் பூர்வீகத்தில் இந்துக்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று சுதர்சன் கூறுவதும், ''இந்திய முசுலீம்கள் நம்முடைய சதையின் சதை, இரத்தத்தின் இரத்தம்'' என்று பங்காரு லட்சுமணன் கூறுவதும் ஒரே பொருளைக் கொண்டதுதான். எதிரியின் கையை முறுக்கிக் காரியத்தைச் சாதிப்பது சுதர்சனின் அணுகுமுறை. உறவு கொண்டாடி வீழ்த்துவது பங்காரு லட்சுமணனின் அணுகுமுறை. இவ்விரு அணுகுமுறைகளின் நோக்கம் மட்டுமல்ல, மூலமும் ஒன்றுதான்.



இசுலாமியர்கள், கிறித்தவர்களின் தனி அடையாளங்களை மறுப்பதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் அடிப்படை - இந்துத்துவா சித்தாந்தம். இதை சுதர்சன் அப்பட்டமாகவே கூறுகிறார். இதை மூடிமறைத்து, முசுலீம்கள், கிறித்தவர்களின் நேச சக்திபோல நாடகமாடி பா.ஜ.க.வுடன் இணையுமாறு அழைப்பு விடுக்கிறார், பங்காரு லட்சுமணன். எதிரியைவிட துரோகி மிகவும் ஆபத்தானவன். பிறப்பால் தாழ்த்தப்பட்டவரானாலும், கடைந்தெடுத்த பிழைப்புவாதியாகி, இந்து மதவெறி பாசிசத்துடன் சங்கமமாகி விட்ட பங்காரு லட்சுமணன் அதற்கு மேலும் விசுவாசமாக நடந்து கொள்வதற்காகப் பச்சையாகப் புளுகுகிறார். பங்காரு லட்சுமன் குறிப்பிடும் தீனதயாள் உபாத்தியாயாவின் கோழிக்கோடு உரையே, உண்மையில் முசுலீம்கள், கிறித்தவர்களின் அடையாளங்களைப் பறிப்பதை நோக்கமாகக் கொண்டதுதான்.

ஆகவே, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. இந்துத்துவா துப்பாக்கியின் இரண்டு குழல்களுக்கிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் என்பவை அவை தமது இந்துத்துவா சித்தாந்தத்தை நிறைவேற்றுவதற்கு எத்தகைய அணுகுமுறையை மேற்கொள்வது என்பதில்தான் உள்ளன.

டி.வி.எஸ். முதலாளி ஒருமுறை சொன்னார், ''ஒரு தொழிற்சாலை என்றால் எப்படியும் ஒரு தொழிற்சங்கம் உருவாகி விடும். அது வெளியிலிருந்து தொடங்கப்பட்டு நிர்வாகத்துக்கு எதிராகச் செயல்படுவதைவிட நாமே ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி நிர்வாகத்துக்கு விசுவாசமாகச் செயல்பட வைத்தால் என்னவென்று கருதினோம். அப்படிக் கருதி உருவாக்கப்பட்டதுதான் குருமூர்த்தி தலைமையிலான ஐ.என்.டி.யு.சி.''

இந்த வேலையைத்தான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. சங்கப் பரிவாரங்கள் செய்கின்றன. அந்த அமைப்புகளே ஆளும் கட்சிகளாகவும் இருக்கின்றன; எதிர்க் கட்சிகளாகவும் இருக்கின்றன. ''நான் அடிப்பதுபோல அடிக்கிறேன் நீ அழுவது போல அழு!'' என்பதுதான் ஏற்பாடு. பா.ஜ.க. அரசு மீது மக்களுக்கு ஏற்படும் அதிருப்திக்கு வடிகாலாக, அதன் சகோதர அமைப்புகளே இருக்கும். ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரங்களின் இந்துமதவெறி பாசிசச் செயல்களுக்குப் பரிகாரம் செய்வதாக பா.ஜ.கவே நடிக்கும்.

ஆளுவோருக்கு இதுவொன்றும் புதிய உத்தி கிடையாது. நேருவும் பட்டேலும் இப்படித்தான் பம்மாத்துச் செய்தார்கள். நேரு ஒரு ஜனநாயக, தாராளவாதி போலவும், பட்டேல் ஒரு தீவிர தேசியவாதி போலவும் நிழல் சண்டை போட்டார்கள். நேருவுக்கு ரோஜா அடையாளமாகவும் பட்டேலுக்கு இரும்பு அடையாளமாகவும் காட்டப்பட்டது.

இந்திராவும் இதே உத்தியைத்தான் கடைப்பிடித்தார். ''இளம் துருக்கியர்கள்'' என்றழைக்கப்பட்ட ஒரு விசுவாசக் கும்பலை கொண்டு தீவிர சோசலிசக் கூச்சல் போட வைத்தார். நாட்டுடைமை

www.padippakam.com

யாக்குவது போன்ற கண் துடைப்பு வேலைகள் செய்து கொண்டே பிற்போக்கு - பாசிச - சர்வாதிகார ஆட்சி நடத்தினார். காங்கிரசுக்குள்ளாகவே இருந்த இளம் துருக்கியர்களுக்கும், பிற்போக்காளர்களுக்கும் இடையே சரிக்கட்டி திறமையான ஆட்சி நடத்துபவர்போல இந்திரா பம்மாத்து செய்தார்.

"இப்போது நடப்பது தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சிதான்; பா.ஜ.க. ஆட்சி அல்ல. ஆகவே பா.ஜ.க.வின் திட்டத்தை இந்த அரசு அமலாக்குவது; கூட்டணிக் கட்சிகள் ஏற்றுக் கொணடுள்ள தேசியத் திட்டத்தையே இந்த அரசு அமலாக்கும். தேசியத் திட்டம் தவிர எதிர்க் கட்சிகள் கூறுவது போல இரகசியத் திட்டம் ஏதும் எங்களுக்கு இல்லை" என்று வாஜ்பாயி கும்பல் திரும்பத் திரும்பக் கூறுகிறது.

ஆனால், "அயோத்தியில் இராமன் கோவில் கட்டுவதை விரைவிலேயே துவங்கிவிடுவோம். அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது" என்று ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் கும்பல் வெறிக் கூச்சல் போடுகிறது. அயோத்தி கோவிலுக்கான கட்டுமானப் பணிகளைத் துவக்கி நடத்தி வருகிறது.

லாகூர் பேருந்துப் பயண அரசு தந்திரம், காசுமீர் போராளிகளுடன் பேச்சு வார்த்தை, கார்கில் போர், கந்தகாருக்கு கடத்தப்பட்ட விமானத்தின் பணயக்கைதிகளுக்க ஈடாக தீவிரவாதிகள் விடுதலை ஆகியவற்றில் பா.ஜ.க. அரசை ஆர்.எஸ்.எஸ். - அத்வானி கும்பல் கடுமையாக எதிர்த்தாலும், கட்சி மற்றும் அமைச்சரவைக் கூட்டங்களில் ஒப்புதலே அளிக்கிறது. அதேபோலத்தான் இந்தியத் தொழில்களை அந்நியமயமாக்கும் கொள்கையைத் தனது சுதேசி ஜக்ரான் மாஞ்ச் மூலம் கடுமையாக சாடினாலும் இறுதியில் கட்சி மற்றும் அரசுத் தீர்மானங்களில் ஒப்புதல் அளிக்கின்றனர். அதேசமயம், காசுமீருக்குச் சுயாட்சி கோரும் பரூக் அப்துல்லா அரசின் தீர்மானத்தை நிராகரிப்பதில் ஆர்.எஸ்.எஸ். - அத்வானி கும்பலின் நிலையை வாஜ்பாயி - ஜஸ்வந்த் சிங் கும்பல் முழுமையாக ஏற்கிறது.

ஆர்.எஸ்.எஸ்.க்கும் பா.ஜ.க.வுக்கும் உள்ள உறவு கருவிலேயே உருவான உறவு. தொப்புள்கொடி உறவு. என்னதான் ஆனாலும் பா.ஜ.க.வின் பிறவி அடையாளத்தை அழிக்க முடியாது. இன்றைய பா.ஜ.க.வானது அதன் பாரதீய ஜனசங்க அவதார காலத்தில் இருந்தே ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களைத்தான் தலைவர்களாகவும், பிரமுகர்கள் - தொண்டர்களாகவும் பெற்றிருக்கிறது. இவர்களில் எவரும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் அட்டையை இழந்து விடவில்லை. 1977-இல் ஜனதா கட்சியின் அங்கமாகி மத்திய அரசில் பங்கேற்ற பிறகு இரட்டை உறுப்பினர் பிரச்சினை எழுந்து அரசு கவிழ்க்கப்பட்டபோதும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் தகுதியைக் கைவிட மறுத்து விட்டார்கள். பா.ஜ.க. தனது அடித்தளத்தை விரிவுப்படுத்தாமல் தற்போதைய தேக்கநிலையை உடைத்துத் தனியே ஆட்சியைப் பிடிக்க முடியாதுதான். ஆனால் ஆர்.எஸ்.எஸ்.ஸுடன் முரண்பட்டு நின்றால், அது தனது இன்றைய **அடித்தளத்தையும் இழந்து விடும்.**



நாகபுரி பா.ஜ.க. தேசியக் கவுன்சில் கூட்டத்திற்குப் போன வாஜ்பாயி ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்துக்குப் போனார். அங்கிருந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர்களைப் பார்த்து சொன்னார், "நம்மை யாரும் பிரிக்க முடியாது என்பதையே நான் இங்கு வந்தது குறிக்கிறது. நம்மிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதாகப் பத்திரிக்கைகள் மிகைப்படுத்திக் கூறுகின்றன" என்றார்.

அடுத்த சிலவாரங்களில் ஐ.நா. சபையின் சார்பாக நடந்த புத்தாயிரம் ஆண்டு விழாவிலும், அமெரிக்க நாடாளு மன்றத்திலும் உரையாற்ற அமெரிக்கப் பயணம் மேற்கொண்டார் பிரதமர் வாஜ்பாயி. அது அரசுமுறைப் பயணம்தான். என்றாலும் வரம்பை மீறிய அவரும், ஐக்கிய நாடுகள் சபையின் உலக அமைதி மாநாட்டுக்குச் சென்றிருந்த 108 இந்திய மதத்தலைவர்களும், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் விசுவ இந்து பரிஷத்தைச் சேர்ந்த அமெரிக்க வாழ் இந்தியர்களின் ஸ்டேடன் தீவுகளில் நடத்திய பாராட்டு விழாவில் பங்கேற்றனர்.

அப்போது, வாஜ்பாயி தன்னை ஒரு ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்கத்துக்காரன் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டு "நான் எப்போதுமே ஒரு சுயம்சேவக். நான் சுயம்சேவக்காக இருக்கும் உரிமையை என்னிடமிருந்து யாரும் பறிக்க முடியாது" என்று பிரகடனப்படுத்தினர்.

"நான் பிரதமராகவே எப்போதும் நீடித்திருக்க மாட்டேன் அந்த வேலைக்கு வேற ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் நான் சுயம் சேவக்காகவே எப்போதும் இருப்பேன்" என்று அமெரிக்கா வாழும் இந்துவெறியர்களின் சுரமுழக்கத்துக்கிடையே அறிவித்தார். "நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறாமலேயே நாங்கள் இவ்வளவு தூரம் சாதித்துள்ளோம். மூன்றில் இரண்டு பங்கு பலம் கொடுத்தால் நாம் கனவு காணும் இந்தியாவையே கட்டியெழுப்பி விடுவோம்." அதாவது "ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் திட்டத்தை அப்படியே அமலாக்குவோம்" என்கிற "சத்தியம்" செய்தார்.

"வாஜ்பாயினுடைய மிதவாத வேடம் கலைந்து விட்டது; அவரது உண்மை உருவம் தெரிந்து விட்டது" என்று. இங்கே எதிர்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்தனர்.

உடனே விழித்துக் கொண்ட வாஜ்பாயி விசுவாசிகள் வழங்கிய ஆலோசனைப்படி, வாஜ்பாயி தனது உரைக்கே பொழிப்புரை கூறும் படி நேர்ந்தது. "ஸ்டேடன் தீவுகளில் நான் ஆற்றிய உரை தவறாகப் பிரசுரிக்கப்பட்டுவிட்டது; எனது பேச்சுக்குத் தவறான வியாக்கியானம் தந்து விட்டார்கள். அது இந்தியாவில் தேவையில்லாத சர்ச்சைகளைக் கிளப்பி விட்டது. 'இந்தியாவின் முதல் சேவகன்' என்ற முறையில்தான் ஸ்டேடன் தீவுகளுக்கு வந்திருக்கிறேன்; நான் இந்தியாவின், அதன் மக்களின் சேவைக்காக தன்னார்வத் தொண்டனாகத் தான் கருதி வந்திருக்கிறேன். நான் இந்தியாவின் பிரத

தொடர்ச்சி 23-ம் பக்கம்

www.padippakam.com

# ஒலிம்பிக் சில உண்மைகள்



கிரிக்கெட்டையே முழு முதற் கடவுளாகத் தொழுது கொண்டிருக்கும் நம் நாட்டில் ஏனைய விளையாட்டுக்கள் பற்றிய ஆர்வம் குறைவுதான். எனினும் சிட்னி ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு ஒரே யொரு வெண்கலப் பதக்கம்தான் என்பது சாதாரண ரசிகனுக்கு ஒரு அவமானம்; தங்கம் வெல்லவில்லை என்பது ஏக்கம்; தங்கப் பதக்கங்களை அள்ளியிருந்தால் அது தேசியப் பெருமிதம்.

***

ஒரு விளையாட்டு வீரனைப் பொருத்தவரை ஒலிம்பிக்ஸ் அவனது வாழ்க்கைக் கனவு; அதிகபட்ச அங்கீகாரம்; கற்பனையிலும் அடையமுடியாத புகழ்.

தங்களின் உடல் இயக்கத்தைத் தீவிரமான தொடர்பயிற்சியில் வடிவமைத்திருக்கும் அந்த வீரர்கள் நான்காண்டுகள் காத்திருந்து களமிறங்குகிறார்கள். ஒரு நொடியில், ஒரு நொடியின் நூற்றிலொரு பங்கில் வெற்றிக்கைகூடுகிறது அல்லது கைதவறுகிறது.

கடந்த மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற துருக்கியின் பளுதூக்கும் வீரர் சுலைமான்குலு. தன் உடல் எடையைப் போன்று மூன்று மடங்கு எடையைத் தூக்கிய உலகின் இரண்டாவது சாதனையாளர் - இம்முறை தங்கத்தைத் தவறவிடுகிறார். கை நழுவிய எடைக் கம்பியைப் பார்த்து விசும்புகிறார்.

எத்தியோப்பியாவின் ஹெய்லி ஜெபர்சேலஸ் பத்தாயிரம் மீட்டர் தடகளப் போட்டியில் வென்ற தங்கப் பதக்கத்தைத் தம் ஊர்த் தேவாலயத்துக்குக் காணிக்கை ஆக்குகிறார்.

பாரசீகத்துக்கே உரிய அழகான அமைதியுடன், கனமான உடலுடன் நடந்து வரும் ஈரானிய வீரர் உசேன், பளுதூக்கும் பிரிவில் தங்கம் வென்றவுடன் அங்கேயே அல்லாவுக்கு நன்றி செலுத்துகிறார்.

சமனற்ற பார் போட்டியில் கீழே விழுந்து தங்கத்தைத் தவறவிட்ட ரசியாவின் நட்சத்திரம் கோர்க்கினா தங்கத்தை வென்று செல்லும் ருமேனியச் சிறுமிகளை ஏக்கத்துடன் பார்க்கிறார்.

வெற்றிக் களிப்பு, ஏக்கம், பெருமிதம், கண்ணீர், பரவசம் என்று பலவிதமான உணர்ச்சிகளுக்கு வீரர்களும் ரசிகர்களும் ஆளாகிறார்கள். இந்த மனநிலைகள் உண்மைதானா? உண்மையாயிருக்கலாம். விளையாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக உண்மையாக இருக்க வேண்டும் என்றும் நாம் விரும்பலாம்.

ஆனால் இம் மனநிலையை உருவாக்குகின்ற புறநிலைச் சக்திகளின் நோக்கம் வேறு. ஒலிம்பிக்கை நடத்துகின்ற சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் வரலாறு, விளையாட்டல்லாத விபரீதமான, வெட்கக் கேடான ஒரு உலகிற்கு நம்மை இட்டுச் செல்கிறது.

***

இன்றைய நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896-ஆம் ஆண்டில் தான் ஏதென்ஸ் நகரில் (கிரீஸ்) தொடங்கின. முதல் போட்டியில் ஆஸ்திரேலியா, கிரீஸ் மட்டும் கலந்து கொண்டன. பிறகு பங்கேற்கும் நாடுகள் அதிகரிக்க ஆரம்பித்தன. பெண்கள், கருப்பர், இதர ஒடுக்கப்பட்ட நாடுகள் - மக்கள் பங்கேற்பதும், புதிய விளையாட்டுக்கள் சேர்ப்பதும்



ஜெஸ்ஸி ஒவன்ஸ்

படிப்படியாக நடந்தது. 1932 மியூனிச் ஒலிம்பிக்கில் அமெரிக்காவின் கருப்பின வீரர் ஜெஸ்ஸி ஒவன்ஸ், தடகளப் போட்டியில் வென்று நிறவெறியன் ஹிட்லருக்கு கடுப்பேற்றினர். இப்படி ஒலிம்பிக்கின் முதல் 70 ஆண்டு வரலாறு, இனவெறி, தேசவெறி, மதவெறி, பால்வேறுபாடு, கெடுபிடிப்போர், மூன்றாம் உலக துவேசம் போன்றவற்றைப் பிரதிபலித்ததே அன்றி, பொருளாதார ஆதாயம் ஏதுமில்லை.

அன்று பணக்கார நாடுகள் சில தங்கள் வலிமையைப் பறைசாற்றும் வண்ணம் செலவு செய்து ஒலிம்பிக் போட்டிகளை நடத்தின. அப்படி செலவழிப்பதற்கு ஏழை நாடுகளை சுரண்டும் வாய்ப்பிருந்தது என்பது வேறு விசயம். 1976 கனடா - மான்ட்ரீல் ஒலிம்பிக்ஸ் பெரும் நட்டத்தில் முடிந்தது. 1980 - அமெரிக்க ஆதரவு நாடுகள் புறக்கணித்த - மாஸ்கோ ஒலிம்பிக்ஸ் சோவியத் யூனியனுக்கு ரூபிளை ஏதும் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. அன்று போட்டிகளை நடத்தும் நாடுகளை பிடிப்பதற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி மன்றாட வேண்டியிருந்தது.

80-களில் பிறந்த அறிவியல் தொழில் நுட்ப புரட்சி, 70 ஆண்டுகளாய் நீடித்திருந்த ஒலிம்பிக்கின் 'வறுமைக்கு' ஒரு முடிவு கட்டியது. சேவைத் துறை, தகவல் தொடர்பு, நுகர்வு பண்பாடு ஆகியவற்றை உலகமயமாக்கிய வல்லரசு நாடுகள் ஒலிம்பிக்கிற்கும் மறுபிறவியை அளித்தன. 1984 அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்ஸ் போட்டி முதன்முறையாக விண்கோள் வழியாக உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளில் காட்டப்பட்டது. இதன் மூலம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஈட்டிய இலாபம் சுமார் 800 கோடி ரூபாய்.

84 போட்டியை நடத்தக் கோரிய நாடுகள் இரண்டு மட்டுமே. அதன்பின் 88 சியோல், 92 பார்சிலோனா, 96 அட்லாண்டா, 2000 சிட்னி ஆகிய கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு மேற்குலகின் பல்வேறு நகரங்கள் போட்டியிட்டன. ஏறக்குறைய 150 நாடுகள் உறுப்பினராயிருக்கும் ச.ஒ. கமிட்டியில் வாக்கெடுப்பு நடத்தி போட்டிக்கான நகரங்களைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தது. தேர்தலென்று வந்தவுடனே அவர்களது 'ஜனநாயக' வழக்கப்படி அனைத்து முறைகேடுகளும் நடந்தேறின. 80-ஆம் ஆண்டு ச.ஒ. கமிட்டியின் தலைவராகப் பதவியேற்ற ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அன்டோனியோ சாமரன்ஞ் ஒலிம்பிக்கை கோடிகளைக் கொட்டும் மாபெரும் தொழி


படிப்பகம்

www.padippakam.com

லாக மாற்றிக் காட்டியவர். இந்த 'சாதனை' வீரரே இன்று வரையிலும் தலைவராக நீடிக்கிறார்.

சந்தி சிரித்த மாபெரும் 4 ஒலிம்பிக் ஊழல்களை பார்க்கும் போது, நரசிம்மராவ் ஜெயலலிதாக்கள் தேவலாம் எனத் தோன்றுகிற. 96 அட்லாண்டா கோடை ஒலிம்பிக்கின் ஊழல் பற்றிய அறிக்கை இவ்வாறு தொடங்குகிறது. ''ஹங்கேரி, இந்தியா, பனாமா உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாம். ஆப்பிரிக்க பிரதிநிதிகளுக்கு மலிவான பரிசுப் பொருள் போதும். இதர நாடுகளுக்கு ஒரு ஷாம்பையின் பாட்டில், அழகான பெண்கள், விலை உயர்ந்த பரிசுப் பொருள் இருந்தால் முடித்து விடலாம்.'' இப்படித்தான் போட்டியிட்ட ஏனைய நாட்டு நகரங்களை அட்லாண்டா நகரம் தோற்கடித்திருக்கிறது. இந்த மாமா வேலைகளுக்கு அவர்கள் செலவழித்த தொகை 36 கோடி ரூபாய்.

2002-இல் அமெரிக்காவின் 'சால்ட் லேக் சிட்டி'யில் குளிர்கால ஒலிம்பிக் நடைபெறவிருக்கிறது. போட்டியை நடத்தும் இந்நகரக் கமிட்டி உறுப்பினர் ராபர்ட் கார்ஃப் என்ற உள்ளூர் கார் விற்பனையாளர் கூற்றைக் கவனியுங்கள், ''எங்கள் கைகள் சுத்தம் என்று சொல்லவில்லை. ஆனால் இந்த (ஒலிம்பிக்) அமைப்பு முறை, பல ஆண்டுகளாக இப்படித்தான் செயல்படுகிறது. அதனால்தான் சிலரது பார்வைக்கு மட்டும் நாங்கள் குற்றவாளிகளாகத் தெரிகிறோம்.''

98 குளிர் கால ஒலிம்பிக்ஸ் நடத்திய (ஜப்பான்) நகானோ நகரத்தின் லீலைகளைப் பார்ப்போம். இதற்காக முன்முயற்சி எடுத்தவர் யோஷியாகி சூட்சுமி என்ற (ஜப்பானிய) பன்னாட்டு முதலாளி யாவார். 'மாமா' செலவுக்கு ஆன தொகை 300 கோடி ரூபாய். இதை அந்நகர மேயரே ஒத்துக் கொண்டார், ''எங்களுக்கு ஒலிம்பிக் கிடைத்தது, பணத்தினால்தான்!''

இவ்வாண்டு நடந்து முடிந்த சிட்னி கோடை கால ஒலிம்பிக் கதையைப் பார்க்கலாம். சிட்னியுடன் சீனாவின் பெய்ஜிங் நகரம் மோதியது. சிட்னியை வென்று வந்த ஆஸ்திரேலிய அமைச்சர் ப்ரூஸ் பாட் கூறுகிறார், ''ச.ஒ. கமிட்டி உறுப்பினர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக சுமார் 80 கோடி ரூபாயை எங்களிடமிருந்து உறிஞ்சினார்கள்.'' இதே 'தியாகிதான்' வாக்கெடுப்பு நடப்பதற்கு முந்தைய இரவு கென்யா, உகான்டா நாட்டு பிரதிநிதிகளை தலா 1.6 கோடி ரூபாயில் விலைக்கு வாங்கினார்.

பதக்கம் வாங்க வீரர்கள் காட்டும் வெறியைக் காட்டிலும் ஒலிம்பிக்கைத் தமது நாட்டில் நடத்த வேண்டும் என்ற வெறி பெரிதாயிருக்க என்ன காரணம்? இது விளையாட்டுணர்வா? தேசியப் பெருமிதமா? இரண்டுமில்லை.

''சிட்னி ஒலிம்பிக்கின் மிகப் பெரிய வெற்றி எங்கள் சுற்றுலாத் தொழிலுக்குத்தான்', என்கிறார் ஆஸ்திரேலியாவின் சுற்றுலா அமைச்சர். ஒலிம்பிக்கின் மூலம் இவ்வாண்டு சுற்றுலா வருமானம் மட்டும் 4000 கோடி ரூபாய்; அடுத்து ஆண்டு வர இருக்கும் கூடுதலான ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள் சுமார் 2000 கோடி ரூபாயைச் செலவழிப்பார்கள், என்று சுற்றுலாத் தொழில் முதலாளிகள் குதூகலிக்கின்றனர்.

உலகமெங்கும் பல்லாயிரம் சிறு நிறுவனங்கள் ஒலிம்பிக்கை ஸ்பான்சர் செய்கின்றன. அதற்கு மேல் கோகோ கோலா, விசா, ஐ.பி.எம்., டைம் வார்னர்ஸ், நைக் ஷூ போன்ற பிரபல 12 பன்னாட்டு நிறுவனங்கள் மட்டும் ஒரு ஒலிம்பிக் போட்டிக்கு சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் உதவி அளிக்கின்றன. பதிலுக்கு ஒலிம்பிக்கின் அதிகார்வபூர்வ வாட்ச், கோலா, தொலைபேசி, செருப்பு, குடி, டி.வி. என தமது பொருள்களின் முத்திரையை உணர்ச்சிமயமான ஒலிம்பிக் ரசிகர்களிடமும் - மக்களிடமும் ஒன்றச் செய்கின்றனர்; விற்பனையையும் பெருக்குகின்றனர்.

செய்தி நிறுவனங்களைப் பொருத்தவரை ஒலிம்பிக்கின் நேரடி ஒளிபரப்பு, முக்கிய நிகழ்ச்சிகளின் தினசரிப் பதிவுகள், புகைப்படங்கள், கட்டுரைகள், பிரபல வீரர் பேட்டிகள் என தங்கள் பங்கிற்கு ஒரு பெருந்தொகையினை அள்ளுகின்றன. ஒலிம்பிக்கை உணர்ச்சிமயமான




சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் அன்டோனியா சாமரன்ஞ்.

திரைக்கதையாக இவர்கள் வடிவமைப்பதிலேயே ஒலிம்பிக்கின் செல்வாக்கும் வெற்றியும் அடங்கியுள்ளது.

நாடுகளின் அரசாங்கங்களைப் பொறுத்தவரை தத்தமது பிற்போக்கையும், அடக்குமுறையையும் மறைத்து தேசியப் பெருமிதத்தை உப்ப வைக்கின்ற நவீன கருவியாய் விளையாட்டும் ஒலிம்பிக்கும் பயன்படுகின்றன. அமெரிக்காவின் சிறைக் கைதிகளில், ஏழைகளில், சேரிகளில், வன்முறையால் கொல்லப்படுவோரில் கருப்பின மக்களே அதிகம். ஆயினும் அமெரிக்க கருப்பின உரிமைக்காக போராடும் எத்தனை தலைவர்களின் பெயரைக் கடந்த 50 ஆண்டுகளில் கேள்விப்பட்டிருக்கிறோம்? மாறாக கூடைப்பந்தின் ஜோர்டான், காஃல்ப்பின் டைகர் வுட்ஸ், ஒலிம்பிக்கின் மரியன் ஜோன்ஸ், மாரிஸ் கிரீன், மைக்கேல் ஜான்சன் போன்ற விளையாட்டு வீரர்களே உலகமெங்கும் தொலைக்காட்சி பிம்பங்களாய் கருப்பின, அமெரிக்க ஹீரோக்களாய் உலா வருகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் பூர்வகுடி வீராங்கனை கதே ப்ரிமேன் சிட்னி ஒலிம்பிக் உருவாக்கிய நாயகிகளில் ஒருவர். கடந்த 250 ஆண்டுகளாக வெள்ளையர்கள் - ஆஸ்திரேலிய பூர்வகுடி மக்களுக்கு இழைத்த கொடூரங்கள் பயங்கரமானவை. 'இழந்த



**கதே ஃப்ரீமென்**

'இழந்த தலைமுறை' என்றழைக்கப்படும் ஆஸ்திரேலிய பூர்வகுடி மக்களுக்கு வெள்ளையர்கள் இழைத்த கொடுமைகள் பயங்கரமானவை. இவ்வடக்குமுறையை விசாரிக்க வரும் ஐ.நா. குழுவை மிரட்டிவரும் ஆஸ்திரேலிய அரசு - மறுபுறம் ஃப்ரீமெனை தேசிய நாயகியாய் கொண்டாடுகிறது.

www.padippakam.com

தலைமுறை' என்றழைக்கப்படும் இம்மக்கள் மீதான அடக்குமுறையை தற்போது விசாரிக்க வரும் ஐ.நா. குழுவை ஆஸ்திரேலிய அரசு மிரட்டுகிறது. மறுபுறம் 'கதே ஃப்ரீமெனை' தேசிய நாயகியாய் கொண்டாடுகிறது.

எத்தியோப்பியா, கென்யா, மேற்கிந்தியத் தீவுகள் நாடுகளின் வீரர்கள் கூட சிட்னியில் தங்கம் வென்றனர். இந்நாடுகளில் விவசாயத்தை அழித்து, இயற்கை வளங்களை உறிஞ்சி ஆயுதங்கள் கொடுத்து, இனமோதல்களை உருவாக்கி எலும்புக் கூடுகளின் தேசங்களாக மாற்றிய அதே அமெரிக்கா இந்நாட்டு வீரர்கள் சிலருக்கு பயிற்சி கொடுக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஆனால் அந்த ஆப்ரிக்க நாடுகளின் மக்களோ தங்கம் வென்ற பெருமிதத்தைக் கொண்டாடுகின்றனர்.



சிட்னி, குத்துச் சண்டையில் தங்கம் வென்ற கியூபாவின் பெலிக்ஸ் சேவியான். 'அமெச்சூர் குத்துச் சண்டையின் வரலாறே இவர்தான்,' என்கிறார், இவரிடம் தோற்றுப்போன அமெரிக்க வீரர் ஒருவர். பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் தொழில்முறை குத்துச்சண்டை வாய்ப்பை மறுத்ததோடு, 'பணத்துக்காக விளையாட்டை விலை பேசுவது கேவலமான செயல்' என்கிறார் சேவியான். ஒலிம்பிக் வீரர்களில் ஒரு உண்மையான வீரர்.

வீரர்களைப் பொறுத்த வரை ஒலிம்பிக் போட்டி கடுமையான பயிற்சியை மட்டும் கோருவதில்லை; அளவிறந்த வருமானத்தையும், புகழையும் அளிக்கின்றது. பணக்கார நாடுகளின் வீரர்கள் நவீன அறிவியல் தொழில்நுட்ப உதவியுடன் தமது பயிற்சியின் தரத்தை உயர்த்தி அதீத உடலாற்றலுடன் விளங்குகின்றனர். மேலும் இவ்வீரர்களில் சிலர் சோதனையில் கண்டுபிடிக்க முடியாதபடி தடைசெய்யப்பட்ட மருந்துகளை பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

இன்றைய உலகில் தனிநபராக அதிக வருமானம் ஈட்டுபவர்களில் விளையாட்டு வீரர்களே முதன்மையானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஒலிம்பிக்கின் விறுவிறுப்பைக் கூட்ட வேண்டும், போட்டி முழுவதும் பரபரப்பாக இருக்க வேண்டும் என்ற ச.ஒ. கமிட்டியின் விருப்பத்தை வீரர்களே பூர்த்தி செய்கின்றனர். பரபரப்பின் பண ஆதாயம் முதலாளிகளுக்கென்றால் சாதனையின் விளம்பர ஆதாயம் வீரர்களுக்கும் போய் சேருகிறது.

சிட்னி ஒலிம்பிக்கில்தான் ஏறக்குறைய எல்லா விளையாட்டுப் பிரிவுகளிலும் பெண்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். ஆயினும் உருவப்படும் துணியில்தான், பெண் வீராங்கனைகளின் அழகும், விளம்பரமும் அங்கே விலை போனது. ரசிய ஜிம்னாஸ்டிக் வீராங்கனை கோர்க்கினா முன்பு ப்ளேபாய் பத்திரிகையில் நிர்வாண புகைப்படத்தின் மூலம் சம்பாதித்தவர். ரசியாவின் கிரிகோரினா சிட்னி தடகளப் போட்டியின் போல்வால்ட்டில் வெள்ளி வாங்கினார். சொந்தமாக ஒரு வீடு கூட இல்லாதவர் இப்போது 'செக்ஸ் மாடலாக' ஒப்பந்தம் செய்யப்பட்டு வருடத்திற்கு 4.5 கோடி சம்பாதிக்கப் போகிறார். கடற்கரை வாலிபால் போட்டியில் பங்கேற்ற நீச்சல் உடை வீராங்கனைகளை வைத்து, 'பேவாட்ச்' தொடர் போல ஒன்று தயாரித்து விற்பனை செய்தனர்.

ஒலிம்பிக் வீரர்கள் வீராங்கனைகளின் நிலை இதுதான். வீரர்களுக்கும் விளம்பர மாடல்களுக்கும், வீராங்கனைகளுக்கும் விலை மாதர்களுக்கும், நீச்சல் உடைக்கும் அரை நிர்வாண நடன உடைக்கும் இடையிலான வேறுபாட்டை டாலர் களைந்து விட்டது.

விளையாட்டின் மூலம் தனது அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்தும் மனித உடலை விற்பனைப் பண்டமாக்குகிறார்கள் வீரர்கள். சர்வதேசச் சகோதரத்துவம் வாழ்க என்று உயர்த்தப்படும் ஒலிம்பிக் சுடரில் சர்வதேசச் சந்தை வாழ்க என்று கூறி சுருட்டு பற்ற வைக்கிறார்கள் பன்னாட்டு முதலாளிகள். ஒலிம்பிக் சங்கத் தலைவரோ தரகு வேலை பார்க்கிறார். பெண்ணிய முகமூடி அணிந்த சிட்னி ஒலிம்பிக்ஸ், விளம்பர உலகிற்கு அழகிகளை சப்ளை செய்கிறது.

இந்தக் கேலிக் கூத்துகளுக்கிடையில் தத்தம் தேசியக் கொடியுடன் விளையாட்டரங்குகளில் கூத்தாடுகிறார்கள் ரசிகர்கள். நம்மூர் விளையாட்டு ரசிகர்களோ பதக்கப் பட்டியலைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார்கள். நம்முடைய வீரர்கள் எதற்கும் லாயக்கில்லை என்று சபிக்கிறார்கள்.

இன்னொரு புறம் மல்லேசுவரிக்கு பீகார் அரசு 10 லட்சம், ஆந்திரா 10 லட்சம், மராட்டியம் 25 லட்சம், ஹரியானா 25 லட்சம் ஹூண்டாய் கார் என்று வெண்கலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. ரசிகர்கள் விரும்புவது போல 10 தங்கப் பதக்கங்கள் வாங்கியிருந்தால் இன்னொரு கார்கில் பெருவிழா நடந்திருக்கும்.

இந்தியா பதக்கம் வாங்க முடியாமற் போனது பற்றிய ஆய்வு, தேர்தல் தோல்வி குறித்து த.மா.கா. நடத்திய ஆய்வை ஒத்திருக்கிறது. வீரர்களைத் தெரிவு செய்வதில் பாரபட்சம், அவர்களுக்கு உதவுவதில் ஓரவஞ்சனை, அதிகார வர்க்க ஊழல்கள், விளையாட்டுக்கான அரசு ஒதுக்கீட்டை அதிகாரவர்க்கம் அனுபவித்து விடுவது என்பதாகக் காரணங்கள் பட்டியலிடப்படுகின்றன. கேட்டுச் சலித்துப் போன தீர்வுகளே மீண்டும் மீண்டும் பட்டியலிடப்படுகின்றன.

பள்ளிகளே இல்லாத கிராமங்கள் பல ஆயிரம். விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகள் மேலும் பல்லாயிரம். இருக்கின்ற மைதானங்களோ கோடை காலத்தில் பொருட்காட்சிக்கும் மழைக்காலத்தில் பன்றிகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன. நகர்ப்புறத்தின் பொது இடங்களோ மேட்டுக் குடியினரின் கேளிக்கை நிலையங்களாகின்றன. இந்த நிலைமையில் எந்த மாற்றமும் இல்லாதபோது தங்கம் எப்படி கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும்?

இன்றும் ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் ரசியாவும், சீனாவும் அமெரிக்காவுடன் போட்டி போட முடிவதற்குக் காரணம், அவற்றின் பழைய சோசலிச மரபுதான். சிட்னியிலும் முன்னாள் சோவியத் யூனியனின் நாடுகள் வாங்கிய தங்கப்பதக்கங்களை கூட்டினால் அது அமெரிக்காவை விட அதிகம் வரும். பல விளையாட்டுகளில் இறுதிச் சுற்றில் சீனா, ரசியாவை சேர்ந்த பலர் வருகின்றனர். ஆம். சோசலிச நாடுகளில்தான் பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் விளையாட்டுப் பண்பு வளர்க்கப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டதனால் அவர்களிடமிருந்து எண்ணிறந்த வீரர்கள் தோன்றினார்கள்.

நம்மிடமிருந்தும் சிறந்த வீரர்கள் வருவார்கள். மாஞ்சோலை மலைகளில் தலைச்

www.padippakam.com

சுமையுடன் ஓடும் பெண்களிடமிருந்து தடகள வீராங்கனைகள் வருவார்கள்; பறந்து போகும் புறாவை கவட்டைக் கல்லாலேயே குறி தவறாமல் வீழ்த்தும் குறவர்களிடமிருந்து துப்பாக்கிச் சுடும் வீரர்கள் வருவார்கள்; அரபிக் கடலலையின் ஆளுயர சீற்றத்தோடு ஒற்றையடிக் கம்புடன் மிதந்து வரும் மீனவச் சிறுவர்களிடமிருந்து நீச்சல் வீரர்கள் வருவார்கள். உண்டு கொழுத்த பக்தர்களை தோளிலே சுமந்து கடுங்குளிரிலும் விரைந்து செல்லும் பத்ரிநாத் முசுலீம் தொழிலாளிகளிடமிருந்து பளுதூக்கும் வீரர்கள் வருவார்கள்; கிரிக்கெட்டில் மயங்கியிருக்கும் நாட்டிலே கால்பந்தை நேசிக்கும் வடகிழக்கு இளைஞர்களிடமிருந்து சிறந்த கால்பந்து வீரர்கள் வருவார்கள்.

ஒரு லட்சம் தடகள வீராங்கனைகளிலிருந்து, பல்லாயிரம் நீச்சல் வீரர்களிலிருந்து ஒரு சிறந்த வீரன் வரவேண்டும். அதைப் புரட்சியினால் மட்டும் சாதித்துக் காட்ட முடியும்.

இது ஒன்றுதான் வழியா, வேறு வழியே இல்லையா என்று சிலர் அவசரப்படக் கூடும். இன்னொரு வழியும் இருக்கிறது.

தன்து சொந்த நாட்டு வீரனை அமெரிக்க நிறுவனத்திற்குத் தத்துக் கொடுத்து அவன் தயவில் தங்கம் வென்று, ஒட்டிய வயிறும் கழுத்தில் தங்கப் பதக்கமுமாக நிற்கிறதே ஆப்பிரிக்க நாடுகள் - அதன் வழியில் செல்லலாம்.

விஜய் மல்லையா பந்தயக் குதிரை வளர்ப்பது போல கோக், பெப்சி, ஹூண்டாய், ஃபோர்டு, நைக் போன்ற நிறுவனங்களிடம் நமது வீரர்களை ஒப்படைத்து தங்கம் வாங்கலாம்.

ஆனால் சுயமரியாதை உணர்வை விட, விளையாட்டு உணர்வு பெரிதா என்பதே கேள்வி.

● இளநம்பி

---

# ஓசிப் பயணம்

சமீபத்தில் ஊருக்குச் செல்வதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தேன். அருகில் இரண்டு போக்குவரத்து போலீசுக்காரர்களும், ஒரு இன்ஸ்பெக்டரும் வாகனங்களை சோதித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு டி.வி.எஸ். 50 வண்டியில் மூன்று பேர் வந்தவர்கள், போலீசுக்காரர்களைப் பார்த்தவுடன் சிறிது தூரத்திலேயே இறங்கி வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்தனர்.

அவர்கள் வந்ததும், ஒரு போலீசுக்காரர் 'ஏய் வண்டிய நிறுத்து ஒரே வண்டில மூணு பேருவாறீங்க, பாத்தா படிச்சவங்க மாதிரி இருக்கீங்க. டிராபிக் ரூல்ஸ் தெரியாதா?' என்று அதட்டினார்.

'லைசென்ஸ் இருக்கா? ஆர்.சி. புக் இருக்கா? என்று கேட்டுவிட்டு லத்தியால் வண்டியின் இருக்கையை ஓங்கி ஒரு அடி அடித்தார்.

'இருக்கு சார்' பதட்டத்துடன் தேடி எடுத்து காட்டினார் வந்தவர். இன்ஸ்பெக்டர் அதைப் புரட்டிப் பார்த்து,

'யாருய்யா அது ஆறுமுகம்?'

'நாந்தாங்க சார், லைசென்ஸ் ஆர்.சி.புக் இருப்பதால் விட்டு விடுவார் என்ற நப்பாசையில் போலீசின் முகத்தையே பார்த்தார் ஆறுமுகம்.

'த்ரிபிள் ரைடிங். ஒரு நூறு ரூபாய கட்டிட்டு வண்டிய எடுத்துட்டுப் போய்யா' என்று சொல்லி வண்டியைப் பூட்டிவிட்டு சாவியை எடுத்துக் கொண்டு அடுத்த வண்டியைப் பார்க்க சென்று விட்டார், இன்ஸ்பெக்டர்.

ஆறுமுகம் இன்னொரு போலீசுக்காரரிடம், 'சார், சார் இவர் புள்ளைய ஆஸ்பத்திரில சேத்திருக்கோம் சார். அதுக்குத்தான் சார் பணம் இருக்கு. அதுவும் அங்க இங்கன்னு அலைஞ்சு கடன் வாங்கிட்டு வந்திருக்கோம் சார்' என்று கெஞ்சினார்.

'யோவ் ரூல்ஸ் தெரியாம பேசாதய்யா. இங்கேயே பணத்த கட்டுனீங்கன்னா உடனே வண்டிய எடுத்துக்கிட்டு போகலாம், இல்லன்னா நாளைக்கு கோர்ட்டுல வந்து வண்டிய எடுத்துக்கிட்டு போ; முகத்தை மேலும் கடுமையாக்கிக் கொண்டார் அந்த போலீசுக்காரர்.

'பணம் போனாலும் பரவாயில்லை, நாளைக்கு கோர்ட்டுக்கு போனா ஒருநாள் பொழப்பும் போயிடும்ன்னு முணுமுணுத்துக் கொண்டே பணம் கட்ட சென்றார்கள், வண்டியில் வந்தவர்கள்.

சிறிது நேரத்தில் நான் செல்ல வேண்டிய பேருந்து வந்ததால் அதில் ஏறினேன். பேருந்து கிளம்பும் போது அந்த போலிசுக்காரரும் ஓடி வந்து ஏறினார். ஒருவர் எழுந்து அவருக்கு இடமளித்தார். அனைவரையும் செத்த எலியைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு மீசையை நீவியபடி அமர்ந்தார்.

'சார் எங்க போறீங்க' என்றார் நடத்துனர்.

'திண்டுகல்லுக்கு'

'திண்டுகல்லுக்குன்னா டிக்கெட் வாங்கணும் சார்'

'டிக்கெட்டா? எனக்கா?'

'ஆமா சார், ஒரு ஸ்டேஜுக்கு தான் உங்களுக்கு ஃப்ரி. அதுக்கு மேலன்னா கட்டாயம் டிக்கெட் வாங்கனும் சார்.'

'நானும் நாலு வருசமா திருச்சில இருந்து திண்டுகல்லுக்கு போயிட்டு வந்துகிட்டுதான் இருக்கேன். ஒரு நா கூட டிக்கெட் வாங்கல தெரியுமா? மற்றவர்கள் தன்னைக் கவனிக்கிறார்களா என்று ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டார்.

''அது எனக்கு தெரியாது சார். டிக்கெட் வாங்கலன்னா அடுத்து ஸ்டாப்ல இறக்கிக்கங்க.'' நடத்துநர் முன்பு போலீசால் பாதிக்கப்பட்டிருப்பார் போலும். அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அனைவரும் இவர்களை கவனித்ததால் போலிசுக்காரருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. டிக்கெட் வாங்கினால் நடத்துநருக்கு பணிந்து விடுவது போல் இருக்கும். வாங்கவில்லையென்றால் ஓசியில் ஊருக்கு போக முடியாது. நடத்துநரிடம் அதிகாரம் செல்லவில்லை என தெரிந்தவுடன் குரலை சற்று இறக்கி,

'என்னப்பா தெரியாதவன் கிட்டே கேக்குறமாதிரி கேக்குற. உங்களுக்கு எதும் பிரச்சனையின்னா எங்ககிட்ட தான வாறீங்க. அப்பல்லாம் எங்க ஸ்டேசன்ல உக்காரவச்சு டீ, காபியெல்லாம் வாங்கி தாறோம்ல..' போலீசுகாரர் அசடு வழிந்தார்.

'அதெல்லாம் எனக்கு வேணாம் சார், டிக்கெட் வாங்குறதுன்னா வாங்குங்க. இல்லன்னா இறங்கிக்கங்க' போலீசுக்காரரின் பதிலை எதிர்பார்க்காமல் பேருந்தை நிறுத்த விசில் ஊதிவிட்டார். போலீசுக்காரருக்கு மிகுந்த அவமானமாகப் போய் விட்டது. நிச்சயம் அவர் இதை எதிர்பார்த்திருக்க மாட்டார். திடுதிடுவென்று இறங்கி விட்டார்.

நடத்துநர் பேருந்து கிளம்ப விசில் ஊதிவிட்டு 'இவனுங்களுக்கு இதே பொழப்பா போச்சு. பொண்டாட்டி தலையில வக்கற பூவுல இருந்து கால்ல போடுகிற கொலுசு வரை அத்தனையும் ஓசியானச் சென்மங்க' என்றார். போலீசுக்காரர் இல்லை என்பதால் அனைவரும் வாய்விட்டு சிரித்தனர்.

● ஜெசி, திருச்சி.

www.padippakam.com

# காலம் உங்கள் கையில் காசு அவர்கள் பையில்!

"விவசாயி தன் கோதுமையை விற்றால்தான் நெசவாளி தன் துணியை விற்கமுடிகிறது. நெசவாளர் தன் துணியை விற்றால்தான் நம் சூரர் தன் விவிலியத்தை விற்க முடிகிறது. நித்திய ஜீவனின் தீர்த்தத்தை அவர் விற்றால்தான் பிராந்திக் காரர் தன் உயிர்நீரை விற்க முடிகிறது", என்று விவிலியத்தை விற்ற பணத்தில் பிராந்தி வாங்கும் ஆன்மீக ஆதாயத்தின் வழியாக சரக்குப் பரிவர்த்தனைகளின் வலைப்பின்னலை தனது மூலதனம் நூலில் எள்ளலோடு சொன்னார் கார்ல் மார்க்ஸ்.

நம்மூரில் பரிவர்த்தனையாகும் ஆன்மீகச் சரக்கின் வலைப்பின்னலைப் பார்த்தால் கிரகங்களையே விற்று நமது உயிர் நீரைக் குடித்துக் கொண்டிருக்கும் 'ஸ்தானாதிபதிகளை' பார்த்து நாமும் சிரிக்க முடியும், சிந்திக்கவும் முடியும்.

'கோளாறு' பிடித்த கோள்களை எல்லாம் மண்ணிலிருந்து சோதனை ராக்கெட் அனுப்பி சரிப்படுத்த ரசியாவும், அமெரிக்காவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும்போது "கற்பகாம்பிகை க்கு நெய்தீபம் ஏற்றியும், பட்டீசுவரம் கோயிலுக்கு விளக்கு போட்டும் கோள்களைச் சரிபடுத்திக் கொண்டி ருக்கும் ஒரு சரக்கு விற்பன்னரைச் சந்திக்க லாமா? வாருங்கள். தினமணியின் 'காலம் உங்கள் கையில்' பகுதிக்கு.

ஜோதிட பலன் கேட்கும் ஒரு வாச கரின் வாட்டமான கேள்வி இது, கேள்வி: நான் 4.10.98 அன்று வேலை செய்யும் போது மாலை சுமார் 5.00 மணிக்கு கயிறு அறுந்து கிணற்றில் விழுந்து விட்டேன். இதனால் எனது முதுகுத் தண்டில் பாதிப்பு ஏற்பட்டு கால்களில் உணர்ச்சி இல்லாமல், செயல் இழந்து விட்டன. ஒன்றரை வருடம் சிகிச்சைப் பெற்ற பின்பு லேசாக நடக்க முடிகிறது. என் வாழ்வை பிச்சை எடுத் துத்தான் தள்ள வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டேன். எனக்கும் பெற்றோர்கள் இல்லை, என் உடல்நிலை எப்போது பூர ணமாக குணமடையும்? எந்த மருத்துவ சிகிச்சை ஏற்றது? எந்த விதமான பதிலாக இருந்தாலும் தயங்காமல் கூறுங்கள். என் மனதை திடப்படுத்தி ஏற்றுக் கொள்கிறேன். எனக்கு ஜாதகம் இல்லை பிறந்தாள் நேரம் ஆகிய விபரங்களை எழுதி இருக்கிறேன்." டி. ராஜா, சென்னை

(தினமணி 20.10.2000)

ஜோதிட ஆராய்ச்சியாளர் ஏ.எம். ராஜகோபாலரின் பதில்:

"ஜாதகப்படி கூற வேண்டுமெனில், உண்மையிலேயே விபத்து நடந்த தினம் உங்களுக்குக் கிரக நிலைகள் முக்கியமாக அஷ்டமாதிபதி பாதிக்கப்பட்டுள்ளார். அதேசமயத்தில் லக்கினாதிபதியும் பல வீன நிலையில் இருந்திருக்கிறார். கோள்சாராக் கிரக நிலைகளும், விபத்து ஏற்பட்டதற்கு முன்தினம் காலை 10.07-லிருந்து 72 மணி நேரத்திற்குக் கடு மையான கண்டம் ஏற்படும் நேரமாகும். ஆயினும் ஆயிஷ்காரகர் உதவிகரமாக இருந்ததால் உங்கள் உயிர்காப்பாற்றப்பட் டது. ஏனெனில் ஒரு உயிரைக் காக்கும் கடமை ஆயுள்காரரான சனி பகவானுடை யது ஆகும்...

நிற்க, நீங்கள் ஆயுர்வேத சிகிச்சை மூலம் அடுத்துவரும் மூன்று வருடங் களில் படிப்படியாக குணமடைவீர்கள். இத்தகைய தருணத்தில்தான் மன உறு தியும் இறைவனிடம் நம்பிக்கையும் மிக மிக அவசியம். நோயாளியின் மனத்தைரி யமும் ஒத்துழைப்பும் மருத்துவத்துக்கு அவசியமல்லவா? பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட கிரக நிலைகள் 'தசாபுத்திகளின்' படி சிறிதளவும் வாய்ப்பில்லை."

மேலோட்டமாகப் பார்த்தால் பாதிக் கப்பட்டவருக்கு ஆறுதல் அளிப்பது போல தோற்றமளிக்கும் இந்தப் பதிலை கொஞ்சம் நமது சொந்த புத்தியைக் கொண்டுப் பார்த்தால் 'தசா புத்திகளின்' தகிடு தத்தங்களை எளிதாக புரிந்து கொள்ளலாம். திட்டமிடாத நிலையில் நடப்பதுதான் விபத்து என்பதை பாதிக்கப் பட்டவரே உணர்ந்து கேள்வி கேட்ட பிறகும் பதிலளிக்கும் ராஜகோபர்லோ இது கோள்கள், கிரகங்களினால் 72 மணி நேரத்திற்குள் தீர்மானிக்கப்பட்டது என்கிறார். அப்படியானால் இந்த 'திட்ட மிட்ட சதியை' ஆயுள்காரரான சனி பகவான் ஆள் அடிபடுவதற்கு முன்பே தடுத்திருக்கலாம். தினமணியின் இண்டர்நெட் மூலம் ஒரு எச்சரிக்கை செய்தி அனுப்பியிருக்கலாமே? சனியை பிடித்தது யார் ஜாதகமா? இல்லை ஜாத கத்தை பிடித்தது சனியா?

"கயிறு அறுந்ததில்தான் (பலவீனமா னதால்) கிணற்றில் விழுந்தேன் என்ற கேள்வி கேட்டவர் உண்மை நிலவரத்தை சொன்ன பிறகும், "அஷ்டமாதிபதி பாதிக் கப்பட்டுள்ளார். லக்னாதிபதியும் பலவீன நிலையில் இருந்தார்... இதனால்தான் விழுந்தார்" என்றால், அறுந்து விழுந்த அஷ்டமாதிபதியும், லக்னாதிபதியும் எங்கே?

வானில் நடந்த கோளாறுக்கு மண்ணில் மருத்துவம் சொல்கிறார் ராஜ கோபால். "ஆயுர்வேத சிகிச்சை மூலம்" படிப்படியாக குணமாகுமாம். அலோபதி (ஆங்கில வைத்திய முறை) வேண்டாம், ஆயுர்வேத சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள் என்பதனை எதை ஆதார மாகக் கொண்டு சொன்னார்? மருத்துவ அடிப்படையிலா? ஜோதிட அடிப்படை யிலா? குழம்ப வேண்டாம்! இதோ குழப் பத்திற்கு மருந்து அடுத்த குழப்பம் "கட வுளை நம்புங்கள் மருத்துவரிடம் ஒத்து ழைப்பு தாருங்கள்" என்கிறார் மகா ஜோதிடர்.

கவனக்குறைவாக அடிபட்டவரை கவ னமாக ஆராய்ந்து காப்பாற்றுவது மருத்து வ அறிவியல் எனும்போது இடையே ஒன்றுக்கும் உதவாமல் "ஆண்டவன்மேல் பாரத்தைப் போடு" என்பதற்கு ஒரு ஆராய்ச்சி ஜோதிடர் எதற்கு? நீங்களும் சிந்திக்க ஆரம்பித்து விட்டீர்களா? அதற்கும் ஒரு பதில் வைத்திருக்கிறார்கள் இந்த கிரகச் சந்தை வியாபாரிகள் "சோதி டர்கள் கிரகங்களின் அசைவுகளைக் கொண்டு இயன்றவரை பயன்களை முன்கூட்டி அறிவிக்கிறார்கள். ஆயினும் நம்மை படைத்த பிரம்மனைத் தவிர வேறு யாராலும் திட்டவட்டமாக 'இதுதான் நடக்கும்' என்று கூற முடியாது" (ஜோதிட வித்வான் ஸ்ரீ பொத்தேரி ராமய்யங்கார், ஸ்ரீ கிழாத்தூர் ஸ்ரீநிவாஸாசாரியார்.

> *இப்படி ஒன்று இரண்டல்ல அலர்ஜிக்கு பலன், ஆஸ்துமாவுக்கு பலன், அரசாங்க வேலைக்குப் பலன், அரசியலில் சேரலாமா? என்பதற்கு பலன் என்று இருபத்தி யோராம் நூற்றாண்டின் அனைத்து நடைமுறைப் பிரச்சனைகளுக்கும் கிரகங்களைக் காட்டி, மருந்துக் கடைக்கு சீட்டும், மகாசன்னதி களுக்கு ரூட்டும் போட்டுத் தரும் மவுண்ட் ரோடு ஜோதிடத்திற்குப் பெயர்தான் "காலம் உங்கள் கையில்."*

www.padippakam.com

குடும்ப ஜோதிடம் - லிப்கோ வெளியீடு)

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவர்கள் கண்டுபிடித்ததாய் சொல்லும் "சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சந்திரன், சனி, ராகு, கேது" எனும் ஒன்பது கிரகங்களை வைத்து கதை படித்துக் கொண்டிருக்கும் ஜோதிட உலகிற்கு "இந்தா பிடி ஒண்ணு" என்று 1930-ல் புளூட்டோ (சேணாகம்) என்கிற புதுக்கிரகத்தையும் 1987-ல் மேலும் இரண்டு கிரகங்களை கண்டறிந்தும் வானியல் விஞ்ஞானிகள் வழங்கியது மட்டுமல்லாது ராகு, கேது என்று கிரகங்களே கிடையாது என்று விஞ்ஞான ஆய்வு வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

இவர்களின் ஜோதிடத்தில் கண்டறியப்படாத, இல்லாத யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்களை வளர்ந்து வரும் வானியல் அறிவியலே கண்டறிவித்தது. ஆக இல்லாத கிரகங்களையும் சேர்த்து, இருக்கிற கிரகங்களையும் விட்டுவிட்டு இவர்கள் வகுத்திருக்கும் "வானளாவிய" பொய்கள்தான் பல ஆண்டுகளுக்கு முன்பே பிழையில்லாமல் கணிக்கப்பட்ட வானியலாம், விஞ்ஞானமாம்.


இன்னொரு அடிப்படையான விசயம், ஜோதிட சிகாமணிகள் பூமிதான் மையம், அதை சூரியன் சுற்றி வருவதாக வைத்தே கட்டம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விஞ்ஞானமோ பூமியும் ஒரு கிரகம், பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மையை பாடபுத்தகம் வரை கொண்டு வந்துவிட்டது. என்ன செய்வது பஞ்சாங்கப் புலிகளே! விண்வெளி ஓடங்கள் புதிய கிரகங்களில் கால் வைக்க, கால் வைக்க அங்கு இருப்பதாய் நீங்கள் சொன்ன உங்கள் கடவுள்களும் இடத்தை காலி செய்துவிட்டு ஓடும்போது, உங்கள் கற்பனைகள் தங்குவதற்கு ஈரேழு உலகத்திலும் இடமேது!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு போதும்தான் இருந்தாலும் இன்னொரு சோறையும் பதம் பார்க்கலாம்.

கேள்வி: இரு அறைகளே இருக்கும் வீட்டில் படுக்கை அறையும், பூஜை அறையும் ஒன்றாக இருக்கலாமா? (எஸ். விக்கிரமன், தாதிகுளம், தினமணி 15.9.2000)

"காலம் உங்கள் கையில்" பதில்: கூடவே கூடாது! சமையல் அறையில் ஒரு சிறு அலமாரியைப் பூஜை சந்நிதியாக வைத்துப் பூஜிக்கலாம். படுக்கை அறையில் பூஜை அறையை வைக்கக் கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் அந்தத் தவறைச் செய்து விடாதீர்கள்."

படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை இப்படி அனைத்தையும் பத்துக்கு பத்திலேயே வைத்திருக்கும்படி தள்ளப்பட்டுள்ள நகரத்து சராசரி மக்களைப் பற்றி அந்தக் கடவுளுக்கும் கவலை இல்லை போலும்! நாமும் அந்த பத்துக்குப் பத்து ராசிக்காரர்களுக்குச் சொல்வோம். "அந்தத் தவறை (பூஜை சந்நிதி) செய்து விடாதீர்கள். அம்பத்தூர் எஸ்டேட்டில் கூலிக்குப் போகும் பத்துக்குப் பத்துக்களுக்கு 'எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டில் கூலிக்கு பகரும்' ஸ்தானாதிபதிகளால் ஏது பலன்? பரிகாரம், மூல ஸ்தானாதிபதிகளான முதலாளிகளை ஒழிப்பதுதான்.



இப்படி ஒன்று இரண்டல்ல அலர்ஜிக்கு பலன், ஆஸ்துமாவுக்கு பலன், அரசாங்க வேலைக்குப் பலன். அரசியலில் சேரலாமா? என்பதற்கு பலன் என்று இருபத்தியோராம் நூற்றாண்டின் அனைத்து நடைமுறைப் பிரச்சனைகளுக்கும் கிரகங்களைக் காட்டி, மருந்துக் கடைக்கு சீட்டும், மகாசன்னதிகளுக்கு ரூட்டும் போட்டுத் தரும் மவுண்ட் ரோடு ஜோதிடத்திற்குப் பெயர்தான் "காலம் உங்கள் கையில்."

ஏதோ ஒரு தன்னம்பிக்கைத் தொடரைப் போல தென்படும் தலைப்பை நம்பி பின்னே போனால், கடைசியில் எல்லாம் கிரகங்களின் கையில் என்றும், பிறகு அந்த கிரக பரிகாரம், எல்லாம் புண்ணிய ஷேத்திரங்கள் கையில் என்றும் இப்படியே நாம் யார் கையில் என்று தெரியாமல் போய் கொண்டிருக்கும் 'தசா புத்தி'காரர்களுக்கு தெரியுமா? சரிபார்க்கப்பட வேண்டியது ஜாதகம் அல்ல சமுதாயம் என்ற உண்மை. தான் படித்த படிப்புக்கு ஏன் வேலையில்லை என்று சமுதாய அமைப்பை ஆராயத் தெரியாத ஒருவரின் கேள்வி இது: "நான் பி.பி.ஏ. பாஸ். மேல் படிப்புக்காக எம்.ஏ. (டிராவல் ஆண்டு டூரிசம்) எம்.எஸ்.ஸி (இன்பர்மேசன் டெக்னாலஜி) விண்ணப்பித்துள்ளேன் எனது ஜாதகப்படி எந்த துறை எனக்கு அமையும்?

பதில்: "தங்கள் ஜாதகத்தின் லக்கினம், பூர்வ புண்ணியம், வித்யாஸ்தானம் தசா புத்திகள் ஆகியவற்றின் படி தங்களுக்கு ஏற்றது (இன்ஃபர்மேஷன் டெக்னாலஜியே)"

- இதே கேள்வியை மரத்தடி ஜோசியரிடம் கேட்டிருந்தால் இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் என்று பொதுவாக ஒரு போடு போட்டிருப்பார். தினமணி ஜோதிடராயிற்றே, பூவுலகில் என்ன புதுசாய் முளைத்திருக்கிறது, என்பதனைத் தனது 'இன்பர்மேஷன் அறிவைப்' பயன்படுத்தி பலன் சொல்லிவிட்டார். மூளையை கழற்றி வைத்துவிட்டு கேட்டால் முற்றிலும் சரிதான்.

இது ஜோதிடத்தை நம்பாதவர்களின் குதர்க்கவாதமாக பட்டால் வெள்ளிமணி காட்டிய திசையில் நம்பிப் போய் செலவழித்து வெம்பித் திரும்பியிருக்கும் இந்த வாசகரின் கேள்விக்கு நீங்களே விடை தேடுங்கள்.

(செ. அருணாச்சலம், ஈரோடு - தினமணி 26.9.2000)

இரண்டு ஆண்டுகளாகப் பிரதோஷக் காலத்தில் கோயிலுக்குச் சென்று வழிபட்டேன். திருவண்ணாமலைக்குச் சென்று கிரிவலம் வந்தேன். தற்போது நிறுத்தி விட்டேன். ஏனெனில் எவ்வித பலனும் ஏற்படவில்லை, விளக்கம் அளித்தால் நலமாக இருக்கும்."

● துரை. சண்முகம்

www.padippakam.com

பஞ்சவர்ணத்திற்கு சொல்லி முடியாத கவலை. தன் கூட படிக்கிற ஒன்னாம் வகுப்பு பிள்ளைகள் கூட விளையாட வர்றதில்லை. முன்னாலெல்லாம் ரெண்டாப்பு மூணாப்பு பிள்ளைகளெல்லாம் நல்ல சேட்டாளிகளாக இருந்தார்கள். அவளோட கூட்டுக்கு பிள்ளைகளுக்குள் போட்டியாயிருக்கும்.

அதுக்காகவே 'அத்திலி புத்திலி மக்கா சுக்கா பால் பறங்கி ராட்டுனம் கூட்டுனம் அடுமா துடுமா அடைக்கலஞ் சங்கிலி மாலூர் மலைஏறி' என்று வரிசை நிறுத்தி பாடி தன்னோட ஆள் சேர்ப்பாள். கள்ளன் போலீஸ் விளையாட்டுன்னா அவள் போலீஸாயிருந்தா 'நான் போலீஸ் நானும் போலீஸ் நான் பஞ்சவர்ணங்கூட' என்று வந்து ஒட்டிக் கொள்வார்கள். அவள் 'நான் கள்ளன்' என்று சொல்லிவிட்டால் எல்லோரும் கள்ளன் கள்ளன் என்று வந்து தொற்றிக் கொள்வார்கள்.

அவள் கூட்டுதான் ஜெயிக்கும். போய் ஒளிந்து கொண்டால் மாயமாய் மறைந்து போவாள். யாராலும் கண்டுபிடிக்க முடியாது. தேடிப் போனாலும் ஏழுமலை தாண்டியிருந்தாலும் கண்டுபிடித்து விடுவாள். இதில் மட்டுமில்லை. கண்ணாமூச்சி, கிளியா கிளியா, குலைகுலையா முந்திரிக்கா, திரிதிரி பொம்மக்கா எல்லா விளையாட்டிலும் அவள்தான் கெட்டி. பஞ்சவர்ணம் வராத நாள் பிள்ளைகளுக்கெல்லாம் 'சிய்யின்னு' இருக்கும். அப்படியே விளையாடினாலும் ஆட்டம் காமா சோமாவாகத்தானிருக்கும்.

இந்த சிங்கப்பூர்க்காரர் பேரனும் பேத்தியாளும் வெளியூரிலிருந்து வந்து இந்த ஊரில் பிரவேசித்ததிலிருந்து பிள்ளைகளுக்கு விளையாட்டின் பேரில் இருந்த பிரியமே போய்விட்டது. நல்லா விளையாடிக் கொண்டிருக்கும்போது அவர்கள் ரெண்டு பேரும் வந்து பிள்ளைகளுக்கு மத்தியில் நின்று கொண்டு "இன்னக்கி எங்க வீட்ல காளாங் குழம்பு கையெ மோந்து பாரு" என்று உள்ளங் கையை கூப்பி எல்லார் மூக்கிலேயும் வைப்பார்கள். அப்படியொரு ரம்மியமான வாசனையறியாத பிள்ளைகள் 'எங்கே இன்னொரு தரம்' என்று கையை பிடித்து மூச்சை உச்சம் வரை தம்பிடித்து அந்த க்ஷண நேரம் எங்கோ கற்பக வனத்திலிருந்து வந்த தேவதைகளாய் அந்த ரெண்டு பேரையும் சுற்றி சுற்றி வர ஆரம்பித்து விடுவார்கள்.

டி.வி.யில் வர்ற எல்லா டப்பாவும் அவர்கள் வீட்டில் இருக்கிறதாம். மிக்ஸி, ஃபேன், கிரைண்டர், மனோரமா சொல்ற மசால் பொடி முதற்கொண்டு.

அதிலிருந்து பிள்ளைகள் ஓடியாடி விளையாடுவதில் பெரிசாய் ஆர்வங் காட்டுறதில்லை. எல்லோரும் அவரவர்கள் வீட்டில் என்ன குழம்பு யார் கையில் வாசனை அதிகமாய் இருக்கிறது என்று ஒவ்வொருவரும் வாசனை பிடிப்பதில் மும்முரமாயிருந்தார்கள். சிங்கப்பூரார் வீட்டுப் பிள்ளைகள் குழம்பு வாசனைக்கு சர்டிபிகேட் கொடுத்தார்கள் அவர்கள் வீட்டு டி.வி.யில் சொன்ன மசால் பொடி குழம்பையே ரொம்பவும் பீத்திக் கொண்டார்கள்.

சில குழந்தைகள் தொடுகறியை கை வாசம் மூலம் வெளிப்படுத்த முடியவில்லையே என்று ரொம்ப ஏக்கமாயிருந்தன. இப்படி அதிகமாக ஒன்றை சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டதால் கூடுதல் வாசனைக்கு சமமாகி விடலாம் என்ற நினைப்புகள் அந்த கூட்டத்தில் எடுபடாமல் அடிபட்டுப் போயின.

இந்த ஆட்டையில் முற்றிலும் ஒதுங்கிப் போன பஞ்சவர்ணம் அன்றைக்கு எல்லோர்க்கும் முந்தி வந்து உட்கார்ந்திருந்தாள். இந்த பிரச்சனையில் அவளை யாருமே கண்டு கொள்ளாமல் அவர்களுக்குள் பகுத்து கொழிக்க ஆரம்பித்தார்கள். தனியாகவே வந்து போய்க் கொண்டிருந்த பஞ்சவர்ணம் இந்த வட்டத்தில் இன்றைக்கு விட்டால் இனி வாய்ப்பு கிடைக்காது என்று சிநேகம் பிடிப்பதற்கு நின்று கொண்டிருந்தாள். பிள்ளைகள் வரிசை வரிசையாய் நின்று கைகளை நீட்டினார்கள்.

சிங்கப்பூர் வீட்டு பிள்ளைகள் டி.வி.யில் வருகிற குலோப் ஜாமூன், நெல்லுச்சோறு, பருப்பு, நெய் வாசம் எல்லார் முகத்தையும் விரித்து விரித்து காண்பித்தது. அடுத்து கம்மஞ்சோறு, கத்திரிக்கா புளிக்குழம்பு, கேப்பைக் களி, தட்டாம் பருப்பு, சோளச் சோறு, மகிழி கீரை, குதிரைவாலி சோறு ரசம் வரிசையாய் பெரிய வீட்டுப் பிள்ளைகளிடம் அங்கீகாரம் ஆகிக் கொண்டிருந்தன. தன் சேக்காளிகள் அவர்களிடம் ஒட்டிக் கொண்டது நியாயம்தான் என்று அவளுக்குப் பட்டது. தனக்கு இன்று அங்கீகாரம் உறுதி என நம்பினாள். பஞ்சவர்ணம் ரொம்ப வெட்கத்தோட அந்தப் பிள்ளைகளைப் பார்த்து நின்று கொண்டிருந்தாள்.



இன்று அவர்கள் எல்லோரையும் விட தான் ரொம்ப ஒசத்தி என்று அவளுக்கு நம்பிக்கை. அந்த புதுப்பிள்ளைகள் போடும் சட்டைகளும், பேச்சும், அவர்கள் நிறமும் அவளுக்கு பக்கத்தில் போக சங்கோஜமாகவும் பயமாகவும் இருந்தது. 'எங்க வீட்டுல நான் முட்டை பொரிச்சு சாப்புட்டு வந்தேன்.' உடம்பை நெளித்து கையை முதுகுக்கு பின்னாடி மறைத்தாள். 'கொண்டா பாப்பம்' சிங்கப்பூரார் பேரன் வலிய கையை பிடித்து முகர்ந்து பார்த்து 'த்தா... புளிச்ச கஞ்சி வாடை அடிக்கி' என்று மூக்கைச் சுருக்கவும் பிள்ளைகளெல்லாம் சிரிச்சதுகள்.

பஞ்சவர்ணத்துக்கு ரொம்ப கேவலமாயிருந்தது. கஞ்சி வாடைதான் அடிக்குதா பொரிச்ச முட்டை வாடை ஏன் அடிக்கலை. 'எங்க அம்மா அறிய சத்தியம் எங்க வீட்டுல வேணுணா வந்து பாருங்க இன்னும் மிச்சமிருக்கு.' தன் கூட்டாளிகளை

'எங்க வீட்டுல நான் முட்டை பொரிச்சு சாப்புட்டு வந்தேன்.' உடம்பை நெளித்து கையை முதுக்குக்கு பின்னாடி மறைத்தாள் பஞ்சவர்ணம். 'கொண்டா பாப்பம்' சிங்கப்பூரார் பேரன் வலிய கையை பிடித்து முகர்ந்து பார்த்து 'த்தா... புளிச்ச கஞ்சி வாடை அடிக்கி' என்று மூக்கைச் சுருக்கவும் பிள்ளைகளெல்லாம் சிரிச்சதுகள்.

www.padippakam.com



யெல்லாம் மீண்டும் தன் பக்கம் இந்த முட்டை பொரியல் மூலம் கொண்டு வந்து விடவேண்டும் என்று பிள்ளைகளை வீட்டிற்கு வேகமாய் கூட்டிக் கொண்டு வந்தாள்.

தூரத்தில் வரும்போதே அக்காவிடம் அம்மா தன்னைத் திட்டுவது வந்திருந்த எல்லோர் காதிலும் விழுந்தது.

"இந்த சின்னவா எங்கடி போனா? வரட்டும் இன்னக்கி, ஓங்க அய்யா காட்டு லருந்து ரெண்டு கௌதாரி முட்டைய கொண்டு வந்தாருன்னு அந்த மனுசனுக்கு வெஞ்சனத்துக்கு பொரிச்சா வச்சா இவெ தின்னுட்டு போயிட்டா! வெறுங்கஞ்சி எறங்கலையோ சின்ன முன்டெக்கி, வரட்டும் வரட்டும் அந்த வாய கிழிக்கேன்". அம்மாவுக்கும் அய்யா வுக்கும் சின்ன சின்ன விசயத்துக்கெல்லாம் சண்டை. ரெண்டு நாளைக்கொருதரம் கஞ்சிப் பானையை நாய் உருட்டிட்டுப் போறதில் அய்யாவுக்கு அம்மா மேல ரொம்ப வெழம். இதுலே இந்த வெஞ்சன விவகாரம் வேறயா. அதுதான் பஞ்சவர் ணத்திற்கு சொல்லி முடியாத கவலை.

• • •

அன்றைக்கு மழை 'சொரு சொரு'வென்று ஊத்திக் கொண்டிருந்தது. அய்யாவு, நல்லம்மா ரெண்டு பேருக்கும் வேலையில்லை. பெரிய வீட்டார் வீட்டில் போய் அய்யாவு தாங்கி தடுக்கி மூணுபடி தவசம் வாங்கி வர நல்லம்மா அதை குத்தி உலை வைத்து கஞ்சி காய்ச்சினாள்.

"ஏட்டி பஞ்சவர்ணம் சூடா கஞ்சிய குடி அடை மழைக்கி நல்லாருக்கும், குழம்புத் தண்ணி வக்கெ ஒண்ணும் வகையில்லை."

"எனக்கு கஞ்சி வேண்டாம். பசிக் கெல." முகட்டைப் பார்த்து மூஞ்சியை திருப்பிப் படுத்துக் கிடந்தாள்.

"இப்பொ ஒரு பத்து நாளா சரியா ஆகா ரம் பாக்காம கெடக்கயாமே அக்கா சொல்றா. மூஞ்சிய உம்முன்னு தொங்கப் போட்டுக் கிட்டு... ம் சேட்டமில்லையா தாயி"

புறங்கையால் தலையிலும் கழுத்துப் பக்கமாவும் மாறி மாறி தடவிப் பார்த்தாள். அம்மாவை அப்படியே கழுத்தை சேர்த்து பிடித்த பஞ்சவர்ணம், "அம்மா அம்மா மந்தையிலெ பஞ்சாயத்து போர்டுக்கு எதுத்தாப்புல கார வீடு இருக்குல்ல. அந்த வீட்டு பிள்ளெக சொல்றாக அவுக வீட்டுல என்னக்கி பாத்தாலும் ஆட்டுக்கறி கோழிக் கறி பொரிச்ச மீன் அவிச்ச முட்டை டி.வி.யில திங்கிற மாதிரி....

"ஹக்கும் போதும் போதும். அப்படி சம்பாத்யமில்லெ நம்ம வீட்டுல கொட்டுது. டி.வி.யில திங்கிற மாதிரி ரெண்டு கையிலெயும் கோழி சப்பைய எடுத்து திங்கெ. இங்கே தன்னால வருசத் துக்கு ஒரு நா கவுச்சு எடுக்க முடியலெ. என்ன கிரகந்தான் நடக்கோ எப்பொ விடி யுமோ தெரியலெ. பயபுள்ளெ நீயி அத நெனச்சிகிட்டுதான் சாப்பிடாம கெடக் கியா? சரி சரி! ஒங்க அய்யாவே வாய் செத்துப் போயி எங்கிருந்தோ ஒத்த சிட்டுக் குருவியை கொண்டாந்து அத பக் குவம் பாத்து ஒத்த வத்த வச்சி அரச்சி தாளிக்கிற கரண்டியில வேகவச்சு கொடுன் னாரு. கொடுத்தேன். அத வச்சி கஞ்சிய ஊத்தி குடிச்சிட்டு மழையோட போறாரு."

பஞ்சவர்ணத்திற்கு பளிச்சென்று யோசனை ஓடியது. கண்களை விரித்து சுழற்றி பார்த்தாள். தாளிப்பு கரண்டி சல தாரை ஓட்டை பக்கமாய் குப்புற கிடந்தது. குடுகுடுவென்று ஓடிப்போய் கரண்டியை எடுத்து முகர்ந்து பார்த்தாள். குழம்பு மணத்தில் அவள் சந்தோசம் திக்குமுக்காடி யது. கைகள் ரெண்டையும் கரண்டியில் துழாவி தோய்த்தாள். வெளியில் மழை விட்டு கொஞ்சமாய் சிணுங்கிக் கொண்டி ருந்தது.

ஓட்டமாய் மந்தைக்குப் போய் பஞ்சா யத்து போர்டு திண்ணையில் நின்று கொண்டாள். அங்கிருந்து பார்த்தால் சிங்கப்பூரார் வீடு நன்றாகத் தெரியும். ஜன்னல் வழியே அந்தப் பிள்ளைகள் வீதியைப் பார்த்தவாறு சூடாக வடையை தின்று கொண்டும் மேலும் கீழுமாய் போட்டும் விளையாடிக் கொண்டிருந்தன.

பஞ்சவர்ணம் அவர்களைப் பார்த்து கையை கையை ஆட்டினாள். ரெண்டு கையையும் முகர்ந்து காட்டி வாங்க வாங்க என்று கையசைத்து வரச் சொல்லி மேலும் கீழும் குதித்தாள். ரொம்ப நேரமாய் அவர் களை வரவழைக்க முயற்சி செய்தும் அவர்கள் வந்தபாடில்லை. பதிலுக்கு ஆட்காட்டி விரலை மடக்கி வடையை தின்று கொண்டே 'ஞம் ஞம் ஞம்' மென்று வக்கலம் வேறு காட்டினார்கள். பஞ்சவர் ணத்திற்கு கை வாசம் பூராவும் போன மாதிரி தெரிஞ்சது. பழையபடி மழ்ை

*சிறுகதை:*

# கரிநாள்

★ இலட்சுமணப் பெருமாள்

www.padippakam.com

வலுக்கத் தொடங்கியது. ஒரு பிள்ளை களையும் காணோம். சாட்சிக்கு கூட யாருக்கும் முகர காட்ட முடியாமல் மழையில் நனைந்து கொண்டே வீட்டுக்குப் போனாள். பாவம் அவளுக்கு வருத்தமான வருத்தம்.

அன்றைக்கு கடைசி ஆடி. குழந்தைகள் விளையாடுகிற மந்தை முழுவதும் திடீரென்று கடைகள் முளைத்திருந்தன. ஆட்டை உரித்து தலைகீழாய் தொங்க விட்டு சுற்றியிருக்கிற ஆட்கள் கேட்க கேட்க ஈரல், குடல், கரி, ரத்தம் எலும்புக் கறியென்று முண்டத்தில் வைத்து பொடிதாய் நறுக்கி வாழை இலையில் பூக்கடையில் பூவை சுற்றி கொடுத்த மாதிரி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

எதிர்தரப்பில் கறிக்கோழியை வெந்நீரில் போட்டு சுத்தம் செய்து வில்லைகளாய் நறுக்கி கிலோவுக்கு நாலு முட்டை ஓசி என்று பாலிதீன் பைகளில் போட்டி போட்டு கொடுத்து கொண்டிருந்தார்கள். சாயங்காலம் மூணுமணி வரையில் பஞ்சவர்ணத்திற்கு அங்கேயே பொழுது போனது.

அவள் வீட்டிற்கு வருவதை அய்யாவிடம் நல்லம்மா காண்பித்து சொன்னாள். 'பாருங்க பிள்ளெ இந்நேரம் வரைக்கும் அங்கனயே கெடந்து வாரா. இப்பொ ஒரு பத்து பன்னண்டு நாளா இதே நெனப்புத்தான்... நான் சொல்ற மாதிரி செஞ்சிருவோம் இதுலெ என்ன ரோசன வேண்டிக்கிடக்கு.'

நல்லம்மாள் 'வெளிக்கிருக்க' வேலிப் பக்கமா போனபோது எதுத்த வீட்டு பலகாரக்கார அம்மா கொக்குநோய் வந்து செத்துப் போன கோழியை வேலியிலே எறிந்து விட்டு வந்தாள். நல்ல வெடை கோழி ரெண்டு முட்டையோ மூணு முட்டையோ தான் இட்டது. அதைத்தான் புருசனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். 'இப்பத்தான் அஞ்சு நிமிசமிருக்கும். ரொம்பநேரமெல்லாம் ஒண்ணும் ஆகீறல. செத்த நேரஞ்செண்டு ஆள் நடமாட்டம் குறையவும் நான் எடுத்திட்டு வந்திர்றேன். அரைசெலவு சாமான் மட்டும் எந்தக் கடையிலாவது கெஞ்சி பெறக்கி வாங்கியாந்துருங்க. பிள்ளைகளும் நீங்களும் இன்னைக்காவது எலும்பு கடிச்சிகிடுவீகள்ல.'

நல்லம்மா நடுசாமம் வரையில் வேலிக்கும் வீட்டுக்குமாய் அலைந்து கொண்டிருந்தாள். ஆள் அரவம் ஒடுங்கணமே. அதற்குள் நாய் ஏதாவது போய் வாய் வைத்து விட்டால்? பஞ்சவர்ணம் முழித்துக் கொண்டேயிருந்தாள்.

அம்மா வீட்டிற்குள்ளேயே அரக்க பரக்க ஓடிக் கொண்டிருந்தாள். சிம்னி விளக்கில் திரியை பொட்டுப் போல சுருக்கி வைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு தெரிந்து விடாமல் சுற்றி சுழன்று கொண்டிருந்தாள்.

அம்மியில் அவள் அரைக்க ஆரம்பித்தவுடன் அந்த ரம்மியமான வாசனையில் பஞ்சவர்ணம் அந்தரத்தில் பறப்பது போல் குதூகலமாய் சிரித்து கிடந்தாள். இந்த ஊரு பூராவும் அந்த வாசனை நிறைந்து இருப்பதாக சந்தோசத்தில் புரண்டு புரண்டு படுத்தாள். அய்யா அரிவாள் மனையில் கோழிக்கடைகாரனை விட நேர்த்தியாய் கறியை நறுக்கி சட்டியில் நிரப்பிக் கொண்டிருந்தார்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் கார வீட்டுப் பிள்ளெகெ சொன்ன மாதிரி டி.வி.யில ரெண்டு மூணு கிண்ணத்திலெ போட்டு மாறி மாறி ரெண்டு கையாலும் எடுத்து கடிக்கிற மாதிரி... வாயில் ஊறிய எச்சிலை 'கடக் கடக்'கென்று விழுங்கியவாறு பல மாதிரி யோசனையில் இருந்த பஞ்சவர்ணம் சந்தோசத்தில் பக்கத்தில் படுத்திருந்த அக்காவை கட்டிப் பிடித்து தூங்கிப் போய் விட்டாள்.

கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்த புருசனை தூக்க கலக்கத்தில் எழுந்து வந்த நல்லம்மாள் அவசரமாய் எழுப்பி காதோடு குசுகுசுவென்று சொன்னாள். ''ஐயையோ இப்பாடுபட்டு நாசமா போயிடும் போலருக்கே. உள்ள எந்த நாயோ உருட்டுது. நொழஞ்சி எவ்வளவு நேரமாச்சோ சத்தங்கேட்டு நா இப்பதான் முழிச்சேன். இந்த ஊரு நாய்களுக்கு ஒரு பேதி வரமாட்டேங்குதே.''

தடபுடலாய் எழுந்த அய்யாவு, இருட்டில் நல்லம்மாள் நிற்பதையும் அவள் சொன்ன செய்தியை நிதானிக்கவும் கொஞ்சம் நேரமாகியது.

''சரி சரி சத்தம் போடாதெ. உள்ளதான் இருக்கா பாத்தியா நல்லா?''

துண்டை எடுத்து தலைப்பாகையை கட்டி வேட்டியை எடுத்து கட்டியவர் தேடி துழாவி மூலையில் சாய்த்திருந்த தடியை எடுத்தார்.

நல்லம்மாளுக்கு கைகளால் சைகை காட்டிவிட்டு மெல்ல அடுக்களையில் தலையை மட்டும் நீட்டி இருட்டில் கண்ணை இடுக்கி கூர்ந்து பார்த்தார்.

'ஆமா அந்தா அந்தா சுவத்தோரம் சட்டி பானைகளுக்கு பக்கமா கர்ரேர்ன்னு ஆ! மெல்ல நகருது நகருது... திடுதிடுவென்று உள்ளே பாய்ந்து நிமுர ஓங்கிய தடியை பலங் கொண்ட மட்டும் 'சாகு தாயோழி இன்னையோட' இடிபோல் தாக்கிய மறுவிநாடி,

'அம்மா' என்ற பஞ்சவர்ணத்தின் நெடிய அலறல், இருளை கிழித்துக் கொண்டு ஊரின் அமைதியை உடைத்துக் கொண்டு, அவள் சுற்றித் திரிந்த பக்கமெல்லாம் பட்டு எதிரொலித்தது. ●

## ரஜினி பலூன்

சென்னை கடற்கரை - தாம்பரம் புறநகர் இரயில் வண்டியில் புதிய கலாச்சாரம் இதழை பிரச்சாரம் செய்து விற்பனை செய்வது வழக்கம். அப்படி ஒரு மாலை நேரத்தில் வீரப்பன் பிரச்சினை குறித்து (செப்டம்பர் '2000 இதழ்) பேசிக் கொண்டிருந்தோம். நடிகர் ராஜ்குமாருக்காக கசிந்துருகும் ரஜினியை அம்பலப்படுத்தி பேசிய போது, ஒரு இளைஞர், 'ரஜினி பற்றி பேசாதே, மீறினால் உதைபடுவாய்' என்றார். 'சரி, ரஜினியைப் பற்றி நாங்கள் பேசவில்லை, உன் தலைவனின் யோக்கியதையை, சமூக உணர்வைப் பற்றி நீ பேச வேண்டும்' என்றோம்.

'நான் ஏன் பேசவேண்டும் எனக்கு ஒன்றும் தலைவிதியில்லை' என்றார் அந்த ரசிகர். 'ரஜினியைப் பற்றி பேசுவதற்கு உன்னிடம் எதுவுமில்லை. ஆனால் உன் அபிமான நடிகரின் வேடத்தை விளக்கி மக்களிடம் பேச வேண்டிய கடமை எங்களுக்குண்டு' என்றோம். 'என்ன மக்கள், மயிறு மக்கள்' ரசிகர் சீறினார். 'மக்களைத் திட்டினால் உதைப்போம்' என எச்சரிக்கை செய்தோம்.

இந்த அமளியை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர், ''எதாக இருந்தாலும் என்னிடம் பேசுடா, அவங்க என்ன தப்பா பேசினாங்க?'' என ரசிகரிடம் குறுக்கிட்டார். மற்றும் சில பயணிகள், 'உன் ரஜினி உள்ளிட்டு தப்பு செய்யும் எல்லா அரசியல்வாதிகளையும் எதிர்க்கிறார்கள், அது சரிதானே என்றார்கள். இன்னொரு இளைஞர் 'என்ன அவன் ரஜினிக்கு பிறந்தவன் போல பேசுறான், அவனை உதைக்கணும்யா' என்று பேசியவுடன் மற்றொரு இளைஞர் ஓடிப்போய் ரஜினி ரசிகரைப் பிடித்துத் தள்ளினார். நிலைகுலைந்த ரசிகரை மக்கள் கேள்விகளால் துளைத்தெடுக்க ரசிகரோ பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

கோடம்பாக்கத்தால் ஊதிப் பெருத்த ரஜினி பலூனை கோடம்பாக்கத்ினூடாகச் செல்லும் இரயிலேயே உடைக்க முடியும் என மக்கள் அளித்த உற்சாகத்தில் அந்த மாலைப் பொழுது நிறைவுற்றது.

— ம.க.இ.க., சென்னை.

www.padippakam.com



# பூம் பூம் மாட்டுக்காரரும் மனுநீதிச் சோழனும்

**கு**ட்டிக் கதைகள் சொல்வது, உவமைக் கதைகள் சொல்வது, சங்க இலக்கியக் குறிப்புகளை வைத்துக் கொண்டு சண்டமாருதம் செய்வது என்பதிலெல்லாம் கைதேர்ந்தவர் முதலமைச்சர் கருணாநிதி. ஆனால், 'நெஞ்சுக்கு நீதியா, குலக்கொழுந்தா?' என்ற பிரச்சனையில் கதைவிட முடியாத அளவுக்கு சிக்கிவிட்டார் முதலமைச்சர் முத்தமிழ் வித்தகர்.

இந்த விசயத்திலோ ஒரு முதலமைச்சருக்கான தகுதியைப் பெற்று விட்டார் ஒரு பூம்பூம் மாட்டுக்காரர். மூளைக்கு வேலை கொடுப்பவர்கள் கீழ்க்காணும் இருவேறு சம்பவங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.

"மு.க. அழகிரியிடம் கழக உடன்பிறப்புகள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது" என்று தி.மு.க.வின் மேலிடத்து ஆணை அறிவிக்கப்பட, மதுரை 'பத்தினி தெய்வம்' அழகிரியின் மாசறு தன்மையை நிருபிக்க உடன் பிறப்புக்கள் உடனே ஏழு பேருந்துகளைத் தீக்குளிக்க வைத்தனர். "பற்றி எரிகிறது மதுரை" என்று பத்திரிகைகள் சான்று பகர, முதலமைச்சரோ இது குடும்பப் பிரச்சினை என்று முரசொலித்தார்.

குடும்பத்தில் சண்டை என்றால் தன் வீட்டுப் பொருட்களை எடுத்து வீசுகிற தறுதலைப் பிள்ளைகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் குடும்பத்தில் பிரச்சினை என்றால் அடுத்தவன் வீட்டுப் பொருட்களை நாசப்படுத்தி, அரசு சொத்துக்களை எரிக்கின்ற 'கெட்டிக்கார' பிள்ளையைப் பெற்றிருக்கிறார் கருணாநிதி.

கரும்பு விவசாயிகளும் தேயிலை விவசாயிகளும் தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக போராட வீதிக்கு வந்தால் பொது அமைதிக்கு பங்கம், பொதுச் சொத்துக்கு சேதம் என்று கூப்பாடு போட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவியும், தெருவிலேயே ஆடைகளை உருவி அடித்தும் விரட்டுகிற 'செங்கோல்' வளையாத கருணாநிதி ஆட்சி, நான்கு நாட்களாக மதுரையம்பதியைத் தீக்கிரையாக்கிய மு.க. அழகிரியின் வெஞ்சினத்தை வேடிக்கைப் பார்த்து நின்றது.

'வீரம் மூன்றெழுத்து அது விளைகின்ற 'களம்' மூன்றெழுத்து என்று நாக்கை வளைத்து கதைவிடத் தெரிந்த தலைவனைப் பார்த்து இது என்ன தலையெழுத்து — என்று குழம்பிப் போய் நின்ற தொண்டர்களுக்கு 'உடன் பிறப்பே நெஞ்சம் எரிகிறது' என்று இரண்டு சொட்டு மை, ஒரு சொட்டு கண்ணீரோடு நாடகத்தை முடித்து வைத்தார் மனுநீதிச் சோழர். பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்குத்தான் ரசிக்க முடியவில்லை. இது முதலமைச்சர் வீட்டு பிரச்சனை முச்சந்திக்கு வந்து பத்திரமாக வீடு திரும்பிய கதை.

**த**ன் மகனாயினும் "திருட்டுக்குத் தண்டனை; சிரச்சேதம்" என்று முச்சந்தியில் தீர்ப்பு வழங்கும் ஒரு சாதாரண பூம்பூம் மாட்டுக்காரரின் நெஞ்சுக்கு நீதியை நிரூபித்த இன்னொரு சம்பவத்தைக் கேளுங்கள்.

வந்தவாசி தாலுக்காவைச் சேர்ந்த பெரும்பாக்கம் என்ற ஊரில் பூம்பூம் மாடு வைத்து பிழைப்பவர் கன்னியப்பன். தனது ஒரே மகன் சங்கருக்கு அவன் விரும்பிய பெண்ணையே மணமுடித்து வைத்து ஒழுங்காக வாழ வழி செய்து கொடுத்தார். ஆனால் சங்கரோ தீய பழக்கங்களால் சீரழிந்து திருடும் பழக்கத்திற்கு ஆளானான். இதனால் மனம் வேதனைப்பட்ட தந்தை பலமுறை எச்சரித்தும் உழைத்து வாழ உதவி செய்தும் வந்தார்.

ஆனால் ஒரு ரூபாய் சம்பளத்தில் ஊரையே வாங்கும் முதலமைச்சரும், தோளில் உதறிப் போட்ட துண்டோடு அரசியல் வாழ்க்கைக்கு வந்து பன்னாட்டுக் கம்பெனிகளின் அளவுக்கு முன்னேறிய முதலமைச்சரும் வாழும் நாட்டில் சங்கர் போன்ற சாதாரண மனிதர்கள் மட்டும் உழைத்து வாழவா விரும்ப முடியும்?

மீண்டும் சங்கர் ஒரு வீட்டில் இரண்டு மாடுகளைத் திருட, ஊர் பஞ்சாயத்து கூடியது. விசயத்தைக் கேள்விப்பட்டவுடன் வெட்கித் தலைகுனிந்த கன்னியப்பன் "இப்படி ஊருக்கு இடைஞ்சல் செய்யும் திருந்தாத திருட்டு மகன் வாழ்வதைவிட சாவதே மேல்" என்று முடிவுக்கு வந்தவராய் தூங்கிக் கொண்டிருந்த தனது மகனின் தலையை வெட்டி தானாகவே போய் காவல் நிலையத்தில் சரணடைந்தார்.

கன்னியப்பன் நினைத்திருந்தால் வட்டச் செயலாளருக்கும் காவல் துறைக்கும் ஒரு வெட்டுவெட்டி, தன் மகனைக் குற்றமற்றவன் என எப்.ஐ.ஆரையே - உடன் பிறப்புக்குக் கடிதமாக மாற்றியிருக்கலாம். ஆனால் கன்னியப்பனோ மானம் பெரிதென்று வாழும் உழைக்கும் மக்களில் ஒருவர்.

தன் மகன் ஊர் சொத்தைக் கொள்ளையிட்டாலும், சமூக விரோதியாக சட்டத்தை கையிலெடுத்து காலித்தனம் செய்தாலும் சட்டப்படிக் கூட தண்டிக்க வக்கில்லாமல் அவன் செய்வதற்கெல்லாம் பூம்பூம் மாடு போல தலையாட்டுபவர், இந்த நாட்டில் முதலமைச்சர். தன் மகன் மாடு திருடியதற்காக அவனது உயிர் வாழும் உரிமையையே மறுத்துவிட்ட நீதியரசர், இந்த நாட்டில் பூம்பூம் மாட்டுக்காரராய்!

இப்போது சொல்லுங்கள் யாரை நம்முடைய பிரதிநிதியாக ஏற்பது? பூம்பூம் மாட்டுக்காரரையா? மனுநீதிச் சோழனையா?

● சுடர்விழி

படிப்பகம்

www.padippakam.com




நூல் விமரிசனம்:

# குடும்பம்

## சீனநாவல்

'குடும்பம்' நாவலை எழுதிய பாஜினைக் கேட்டார்கள்? "நீங்கள் ஏன் எழுத ஆரம்பித்தீர்கள்?" அவர் சொன்னார்: "என் இதயம் பற்றி எரியும் போது வடிகால் தெரியாமல் தவிப்பேன். உடனே எழுத வேண்டுமென்று தோன்றும். அப்படித்தான் எழுத ஆரம்பித்தேன்." 1949 - சீன விடுதலைக்கு முன்பு சீன மக்கள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தங்கள் துயரத்துக்கு முடிவு கட்டக் கடுமையாகப் போராடினார்கள்; அதே ஆண்டுகளில் இலக்கியத்தின் வழியாகப் போராட்டத்தில் பங்கு கொண்டவர் பாஜின். சீன மக்கள் கடுமையான சுரண்டலின் கீழ் வாழ்ந்ததைக் கண்டு இதயம் எரிந்து இளைஞர்கள் போராடினார்கள். 'குடும்பம்' நாவலின் வழியாக நாம் அதன் எதிரொலிகளைக் கேட்க முடியும்.

அந்நாளைய சீனச் சமூகத்தில் குடும்பம் என்று சொன்னால் அங்கு வேலை செய்கின்ற அடிமைகளையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்துத்தான் சொல்லப்பட்டது. ஆணாதிக்கம் - குடும்ப உறுப்பினரில் மூத்தவர் மூலமாகக் கோலோச்சியது. "எங்கள் வீட்டில் இத்தனை அடிமைகள் இருக்கிறார்கள்" என்பது அந்நாளைய அந்தஸ்தின் அளவுகோல். அப்படிப்பட்ட நிலவுடமைக் குடும்பங்களும், ஆரம்ப வடிவிலான முதலாளிகளும் கலந்திருந்த காலம் அந்தக் காலம். கதைக்களத்தின் காலம் 1920-களும், 1930-களும்.

காவோ என்ற முதியவரின் கூட்டுக் குடும்பம். மூன்று மகன்கள், பேரன் பேத்திகள். பெரிய மகனுக்கு மூன்று பையன்கள், ஜூக்சின், ஜூமின், ஜூகு. வீட்டு வேலைகளுக்கு அடிமைகள். பெரிய மகன் இறந்த பிறகு பேரன் ஜூக்சினின் தலையில் வீட்டு நிர்வாகம் விழுகிறது. தன் அத்தை மகள் 'மீ'யைக் காதலிக்கிறான்; ஆனால் 'சர்வாதிகாரி' காவோ அவனுக்கு வேறு இடத்தில் ருஜூ என்ற பெண்ணைப் பார்த்து வைக்கிறார்; அவனுக்கென்று ஒரு கம்பெனி வேலையும் ஒதுக்கித் தருகிறார். மீயும் தானும் கருத்தொருமித்துக் காதலித்ததும், திருமணம் கூடாததும் ஜூக்சினை வாழ்நாள் பூராவும் வாட்டுகின்றது.

ஜூக்சின் தன் உணர்வுகள் வடிவம் பெறுவதற்காகக் குடும்பச் சர்வாதிகாரத்தை எதிர்க்கத் துணியாதவன்; அவனுக்கு அடுத்தவன் ஜூமீன், உறவினர் வீட்டுப் பெண் குயினை நேசிக்கிறான்; இளையவன் ஜூகுவோடு சேர்ந்து மாணவருக்கான போராட்டப் பத்திரிக்கை நடத்துகிறான்; காதலுக்காகக் குடும்பத்தில் போராட வலுவில்லாமல் நிற்கும்போது, ஜூகு துணை நின்று திருமணம் நிறைவேற வழி செய்கிறான். அரசியல் ஆர்ப்பாட்டங்களில் ஜூகு, ஜூமீன் பங்கு கொள்வதை தாத்தா கண்டிக்கிறார்; ஜூகுவை வீட்டுச் சிறை வைக்கும்படி உத்தரவிடுகிறார்.

ஜூகு வித்தியாசமானவன். வேலைக்காரர்கள் தங்குமிடத்தில் வைக்கோலின் மீது படுத்துக் கதை கேட்டு அவர்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்கிறான். தாத்தா, சித்தி மற்றும் சித்தப்பாக்களின் உத்தரவுகளை அவன் ஒதுக்குகிறான்; அடிமைகள் சுமக்கும் பல்லக்கில் ஏற மறுக்கிறான்; மிங் பெங் என்ற அடிமைப் பெண்ணைக் காதலிக்கிறான் - அவள் அவனுக்குப் பிரச்சனை ஏற்படும் என்று எச்சரிக்கிறாள், ஆனால் அவளும் அவனை விரும்புகிறாள்.

கிழட்டு நண்பர் ஒருவருக்கு மிங் பெங்கை வைப்பாட்டியாக அனுப்ப ஏற்பாடு செய்கிறார் காவோ. மிங்பெங் ஜூகுவிடம் முறையிட வந்தும் பேச முடியாமல் போய் விடுகிறாள். ஏரியில் குதித்து ஒரேயடியாகத் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். ஜூக்சின் மூலமாக மிங்பெங்குக்கு நேரவிருந்த கொடுமையை அறிந்து ஜூகு அவளைத் தேடுகிறான். அதற்குள் காவோ ரகசியமாக அவளை அடக்கமும் செய்து விடுகிறார்.

காதல் ஜூகுவைத் தகிக்கிறது. அதற்காக அவன் புலம்பிக் கொண்டிராமல் குடும்பத்தை விட்டு வெளியே போகிறான். வெளியிலிருந்து கொண்டே வீட்டுக்கு வந்து போகும் ஜூகு குடும்ப உறுப்பினர்களில் வேலையாட்கள், ஜூமின் - குயின் ஜோடி, ஜூக்சினின் மனைவி ருஜூ, குழந்தைகள் எல்லோருடனும் பல விதமான நட்புகளை வளர்க்கிறான்.

ஜூகு மெள்ள மெள்ள சமூகப் போராட்டங்களில் இறங்குகிறான்; நாளேட்டில் எழுதுகிறான்; போராட்டங்களுக்கு உதவுகிறான். அன்றைய காலகட்டத்தில் யுத்தப் பிரபுக்கள் தெருச் சண்டை போடுகிறார்கள் - இதை எதிர்த்த சன்யாட் சென்னின் ஜனநாயக இயக்கம் சூடுபிடிக்கிறது.

பிரிட்டிஷ் - மற்றும்பிற ஏகாதிபத்திய ஏஜெண்டுகளின் அரசியல் குறுக்கீடுகள், இவற்றுக்குச் சற்றும் சம்பந்தமில்லாதது போல நிலப்பிரபுத்துவச் சடங்கு, சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகள், குரூரமான அடக்குமுறைகள், பாலியல் வக்கிரங்கள், பெண் அடிமைத்தனம், அடிமை உடமையின் மிச்ச சொச்சங்கள் ஒருபுறமும், இந்தச் சீரழிவை எதிர்த்து ஜனநாயக இயக்கங்களின் எழுச்சி, அவற்றின் மீது அடக்குமுறை ஆகியவை எதிர்ப்புறமுமாக மோதிக் கொண்ட முப்பதுகளின் கொந்தளிப்பான சூழலின் அறிமுகத்தோடு முடிகிறது நாவல்.

'நாளை என்ற ஒன்று இல்லாத, நேற்று என்ற ஒன்று மட்டுமே உள்ள' மீ ஜூக்சினின் கண் எதிரேயே இறந்து போகிறாள்; அவனது சித்தப்பா வேசியுடன் சுற்றுகிறார், போதைக்கு அடிமையாகிறார். தாத்தா, குடும்பம் அழிவதைக் கண்டு வெருண்டு போகிறார். அந்தத் தாத்தா அடிமைகளைப் பெண்டாளுமை செய்து வந்தவர் தான்; வேசியோடு இருப்பவர்தான்; குடும்ப விழாக்களில் பெரிசிலிருந்து சிறிசுவரை 'தண்ணி' அடிக்க வைத்து தானும் தண்ணி அடிப்பவர்தான்; அதே விழாக்களில் நண்பர்கள் ஆட்டக்காரிகளோடு சரசமாடுவதைக் கண்டு சிரித்துக் களித்தவர்தான்; ஒருதார மணமும் - வேசித்தனமும் ஒரே கோட்டில்

**'குடும்பம்' நாவல் நிலப்பிரபுத்துவக் கூட்டுக் குடும்பம் ஏன் அழிக்கப்படவேண்டுமென்ற நியாயத்தை உள்ளிருந்து தருகின்ற கதைப் பாத்திரங்களை முக்கியமாக வைத்திருக்கிறது.**

www.padippakam.com

இணைந்த சமூகத்தில் வாழ்ந்து கொண்டு, தன் மகனை மட்டும் ஒழுக்க சீலனாக்க விரும்பும் கோமாளித் தாத்தாவுக்கு இதயம் முறிந்து போகிறது.

சாகும் தறுவாயில் தாத்தா ஜூகுவை அழைத்து நல்லாசி கூறித் தன் ஆதரவைத் தெரிவிக்கிறார்; ஜூமீனுக்கும் அவன் காதலுக்கு எதிராக வேறொரு அயோக்கியனின் பெண்ணை மணம் முடிக்க ஏற்பாடு செய்திருந்ததை ரத்து செய்வதாகச் சொல்லி ஆசி கூறுகிறார்.

சுமார் 300 பக்கங்களுக்கு நீண்டு செல்லும் நாவல் எல்லாப் பாத்திரங்களையும் யதார்த்தமாகச் சித்தரிக்கிறது. பின்னாளில் குடும்பத்தை விட்டு வெளியேறும் ஜூகு கூட குடும்பத்தில் கூட்டணி வைத்துக் கொண்டு, எல்லோருடனும் உணர்ச்சிக் கொந்தளிப்போடு சம்பந்தப்படும் போதெல்லாம் அலைபாய்வதும், தன்னையே விமரிசித்துக் கொண்டு நங்கூரம் போட்டு நிலைநிற்பதும், ஒரே திசையில் தன்னை அமைத்துக் கொண்டு முன்னேறுவதும் யதார்த்தமானவை.

இந்தியா என்றால் மேலை நாட்டவருக்கு பாம்பாட்டிகள், பிச்சைக்காரர்கள், சாமிகள், சடங்குகள், சாமியார்கள்; சீனா என்றால் - இரும்புச் செருப்பைக் காலில் இட்டு வளர்ந்த பெண்கள், சடங்குகள், பாம்பைத் தின்பவர்கள். ஆனால் சீனாவின், சீனப் பணக்காரக் குடும்பங்களின் உள்ளும் புறமுமான வாழ்க்கை இப்படி ஓரிரு சொற்களில் அடங்கி விடக்கூடியதல்ல.

புத்தாண்டின் ஒன்பதாவது நாள் வீட்டு ('கோட்டை') வளாகத்திற்குள் நடக்கும் 'பறக்கும் பாம்பு' எரிக்கப்படும் நிகழ்ச்சியையும், காவோ இறந்து சடங்குகள் நடந்த நாட்களில் கருத்தரித்த ஜூக்சினின் மனைவி ருஜூ ஊரின் மூலைக்குத் தனியே விரட்டப்படும் வக்கிரமும், அங்கே அவள் உடலும் மனமும் நொந்து, குழந்தையைப் பெற்றுக் கொடுத்துக் கேட்பாரில்லாமல் செத்துப் போகும் கோரத்தையும் படித்தால் அச்சமூகத்தை ''அழிந்து போ'' என்றுதான் சபிக்கத் தோன்றும். ஐந்து அத்தியாயங்களை இதற்காகவே ஒதுக்கியிருக்கிறார் நாவலாசிரியர்.

ஒன்பது துண்டுகளாக மூங்கில் கட்டமைப்பு, அதன்மேல் வண்ணத்தாள் ஒட்டி வடிவமைத்த பாம்புக் கூட்டுக்குள் புகுந்து நடனக்காரர்கள் ஆடுவார்கள். பேரிகை, மத்தளம் முழங்கத் தொடங்கியதும் உண்மையான பாம்பு போலவே நீண்டும், படுத்தும், சுருண்டும், புரண்டும் நெளிந்தும் நடனமாடத் தொடங்கிவிடும் - அந்த 'மனித'ப் பாம்பு. வெடிச் சத்தம் எழ எழ பாம்பு கொடூரமாக ஆடும். வெடி பொருள், இரும்பு, பித்தளைக் குண்டுகள் நிரம்பிய மூங்கில் குழாய்கள் பற்ற வைக்கப்பட்டு தீப்பொறிகளைப் பாம்பின் மீது வீசுவார்கள். பறக்கும் பாம்பு பைத்தியம் பிடித்து ஆடும். வேடிக்கை பார்க்கும் மக்கள் ஆரவாரிப்பார்கள். தீப்பிழம்புகள் வீசப்பட, வீசப்பட பாம்பு எரிகிறது; நடனக்காரர்கள் அலறுகிறார்கள்; தலை முதல் கால் வரை வெந்து வடிந்து அரைப்பிணமாய் அக்கலைஞர்கள் வெளியேறுகிறார்கள்...

பணம் கொடுத்து ஒரு மனிதனை எரித்துக் கொல்லலாமா? பணக்காரக் குடும்பத்தின் வக்கிரத்துக்காக இப்படி ஒரு கலையா? - ஜூகு அண்ணன் ஜூமினைக் கேள்விகளால் துளைத்தான்; நடனமாடும் ஏழைக் கலைஞர்கள் மேல் இரக்கம் தோன்றவில்லையா என்று கேட்கிறான்.

காவோ இறந்த பிறகு, ருஜூவின் மரணத்தால் கோபமும் துயரமும் ஒன்றாய் அடைந்த ஜூகு அந்நகரத்தை விட்டு பீஜிங் சென்று போராட்டத்தில் இணைய முடிவெடுக்கிறான், ஜூக்சின் தம்பியைத் தடுக்கிறான்; ஜூமின் தன் காதலி குயினோடு ஒதுங்கி விடுகிறான். புது வாழ்க்கை, புதிய நடவடிக்கை, புதிய நண்பர்களை நோக்கி ஜூகு செல்கிறான்.

ஒரு பழைய சமூகத்தை வெறுப்பது புதிய ஒன்றைப் படைப்பதற்காக என்று குறிப்பாக உணர்த்திவிட்டு முடிக்கிறார் பாஜின்.

இந்த நாவலில் இளைஞர்கள் பத்திரிக்கை நடத்துவது, தங்கள் முரண்பாடுகளை வெட்ட வெளிச்சமாகச் சுயவிமரிசனம் செய்து பேசுவது போன்ற இடங்களும், நாவலின் சமூக விமரிசனமும் முக்கியமான பகுதிகள்.

'குடும்பம்' நாவல் நிலப்பிரபுத்துவக் கூட்டுக் குடும்பம் ஏன் அழிக்கப்படவேண்டுமென்ற நியாயத்தை உள்ளிருந்து தருகின்ற கதைப் பாத்திரங்களை முக்கியமாக வைத்திருக்கிறது.

சாதி எதிர்ப்புக்கான காரணங்களை, தலித் ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்கான அடிப்படைகளை 'மேல்சாதி' கதாபாத்திரங்களின் வாழ்க்கை ஊடாக, அங்கிருந்து தோன்றும் ஜனநாயக மாந்தர்களின் அனுபவத்தின் ஊடாக சித்தரிப்பதற்கு இந்நாவல் ஒரு தூண்டுதலை நிச்சயம் கொடுக்கும்.

● இராசவேல்

நூல் : குடும்பம்
ஆசிரியர் : பாஜின்
தமிழாக்கம் : நாமக்கல் சுப்பிரமணியம்
வெளியீடு : அலைகள்,
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-24.
விலை : ரூ. 85/-

கிடைக்குமிடம்:
கீழைக்காற்று, சென்னை-2.




# தமிழ் மக்கள் இசை விழா

எட்டாம் ஆண்டு

சனவரி - 6, 2001
சனிக்கிழமை
தஞ்சை - திருவள்ளுவர் திடலில்
(திலகர் திடல்)

காலை முதல் மாலை வரை
கருத்தரங்கம்

மாலை முதல்
கலை நிகழ்ச்சிகள்
இசை நிகழ்ச்சிகள்

மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு

www.padippakam.com

தொடர் கட்டுரை: 10

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்



# வங்கதேச முசுலீம் அகதிகள் விரட்ட வேண்டியவர்களா?

*"பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுத்து விட்டோம். பாக்கிஸ்தான் ஒரு புதிய தந்திரம் பண்ணியது. பாக்கிஸ்தான், பங்களாதேஷ் எல்லைப் பகுதிகளில் இருந்த முசுலீம்களைப் பசி, பட்டினி போன்ற காரணங்களைக் காட்டி 'எங்கள் நாட்டில் வறுமை, பிழைக்க வழியில்லை', என்று சொல்ல வைத்து பாரதத்திற்குள் ஊடுறுவிய அந்த அன்னியர்கள் சுமார் இரண்டரை கோடி பேர் பாரதத்தில் உள்ளார்கள். ஏற்கனவே இருக்கிற தலைவலி போதாது என்பது போல் வெளியிலிருந்து இறக்குமதி செய்கின்ற இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.*

*உலகில் ஒவ்வொரு நாடுமே தங்கள் நாட்டிற்குள் அதிகப்படியாக மற்ற நாட்டின் குடிமக்களை அனுமதிப்பதில்லை. எல்லா நாடுகளும் இப்படி கட்டுப்பாடுகளை விதித்திருக்கும் போது நமது நாடு மட்டும் என்ன சத்திரமா? எவர் வேண்டுமானாலும் வரலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை மிகக் கொடுமையானது."*

— "இந்துக்களுக்கு உரிமையே கிடையாதா?"
இந்து முன்னணி, வெளியீடு,
பக்கம் - 26.

முதலில் பொய்களைக் கவனிப்போம். இரண்டரைக் கோடிப் பேர் அகதிகளாக வந்தார்கள் என்பது எந்தவித ஆதாரமும், அடிப்படையும் இல்லாத வடிகட்டிய பொய். அடுத்து பாக்கிஸ்தானிலிருந்து அகதிகள் வருகிறார்கள் என்பதும் முழுப் பொய்தான். காசுமீர் பிரச்சினை தீவிரமடைவதற்கு முன்பேயே, பாக்குடன் நடந்த மூன்று போர்களையொட்டி எல்லையை கடுமையாக கவனித்து வருகிறது இந்திய அரசு! சாதாரண வாழ்க்கைத் தேவைகளுக்காக எல்லை மாறும் இரு நாட்டு எல்லையோற கிராம மக்கள் பலர் இந்திய மற்றும் பாக். இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கின்றனர். இதனால் பல கிராமங்கள் வருடத்தில் பாதி நாட்கள் காலியாகத்தான் இருக்கின்றன.

எனில் இந்தியாவில் அகதிகள் என்ற நிலையில் இருப்பவர்கள் யார்?

இங்கே அரசின் சட்டபூர்வ பாதுகாப்பைப் பெற்ற அகதிகளும், பெற முடியாத பரிதாபமான அகதிகளும் இருக்கின்றனர். இந்திய அரசின் பிராந்திய வல்லரசு என்ற நலனுக்கேற்ப அகதிகளைக் கவனிக்கும் முறை வேறுபடுகிறது.

### துரத்தப்படும் சக்மா அகதிகள்

வங்க தேசத்தில் புத்த மதத்தைச் சேர்ந்த 'சக்மா' எனும் பழங்குடியினர் இருக்கின்றனர். இவர்களது நிலத்தையும், வாழ்வையும் பறித்துக் கொண்ட வங்க தேச அரசு இராணுவத்தின் மூலம் தொடர்ந்து அடக்கியும் வருகிறது. அதனால் வேறு வழியின்றி மேற்கு வங்கத்திற்கும், அஸ்ஸாமிற்கும் சில ஆயிரம் பேர் அகதிகளாக வந்தனர். இவர்கள் மூலம் அரசியல் ஆதாயம் ஏதும் இல்லையென்பதால்; கணிசமான சக்மா பழங்குடியினரை மீண்டும் வங்க தேசத்திற்கே விரட்டி வருகிறது இந்திய அரசு.

### சீன எதிர்ப்புக்காக வரவேற்கப்படும் திபெத் அகதிகள்

சீனாவின் தென்மேற்கில் அமைந்திருக்கும் திபத் பீடபூமியில், கடந்த சில நூற்றாண்டுகளாக லாமா எனப்படும் பௌத்த துறவி நிலப்பிரபுக்கள் - பெரும்பான்மை திபத்தியர்களை ஒடுக்கி வந்தனர். 1949-இல் வெற்றி பெற்ற சீனப் புரட்சி இக்கொடுங்கோன்மை பௌத்த நிலபிரபுக்களின் ஆட்சியையும் முடிவுக்கு கொண்டு வந்தது. அதிகாரத்தை இழந்த லாமாக்கள் தலாய்லாமா தலைமையில் 60-களில் இந்தியாவிற்கு ஓடி வந்தனர்.

இங்கே அரசின் சட்டபூர்வ பாதுகாப்பைப் பெற்ற அகதிகளும், பெற முடியாத பரிதாபமான அகதிகளும் இருக்கின்றனர். இந்திய அரசின் பிராந்திய வல்லரசு என்ற நலனுக்கேற்ப அகதிகளைக் கவனிக்கும் முறை வேறுபடுகிறது.

ஹிமாச்சல் பிரதேசத்தின் தர்மஸ்தாலாவிலும், ஏனைய வட இந்திய நகரங்களிலும் பரவிக்கிடக்கும் சில ஆயிரம் திபத்தியர்களை இந்திய அரசு தொடர்ந்து சீராட்டி வருகிறது. தலாய்லாமா கும்பலை தனி அரசாக அங்கீகரித்து, அவர்களும் உலக அரங்கில் சுதந்திர திபெத் நாடு என்று பிரச்சாரம் செய்வதற்கு அனுமதியும், ஆதரவும் அளித்து வருகிறது. இந்திய அரசின் அமெரிக்க ஆதரவு - சீன எதிர்ப்புக் கொள்கையின் காரணமாக இந்த 'திபெத் அகதிகள்' நட்சத்திர அந்தஸ்துடன் வாழ்கின்றனர். இந்து மதவெறியர்களும் ஆதரிக்கின்றனர்.

### பார்ஸிகள், யூதர்கள் அவாளின் ஆதரவாளர்கள்

காலனிய ஆட்சிக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பேயே பாரசீகத்தைச் (ஈரான், ஈராக்) சேர்ந்த பார்ஸிகள் மேற்கு இந்தியாவிற்கு வந்தனர். குஜராத்திலும், பம்பாயிலும் வாழும் இப்பார்ஸிகளும், இவர்களது தரகு முதலாளிகளும் இந்து மதவெறியர்களுக்கு ஆதரவான சமூகப் பிரிவாகவே இருக்கின்றனர். எனவேதான் வெளிநாட்டு பின்னணியும், வேற்று மதச் சடங்குகளும் கொண்ட பார்ஸிகளை இந்து மதவெறியர்கள் முசுலீம்களைப் போல் எதிர்ப்புணர்ச்சி கொண்டு நடத்துவதில்லை.

தமது தாயகத்திலிருந்து துரத்தப்பட்ட யூதர்கள் உலகெங்கும் சிதறியபோது ஒரு சிலர் இந்தியாவிற்கும் வந்தனர். இஸ்ரேல் உருவான பிறகு பெரும்பான்மை யூதர்கள் அங்கே சென்று விட்டாலும் சிறு எண்ணிக்கையிலான யூதர்கள் இங்கே இருக்கின்றனர். அமெரிக்க ஆதரவு, முசுலீம் எதிர்ப்பு கொள்கையிலிருக்கும் இஸ்ரேலிய அரசு இந்து மதவெறியர்களுக்கும், இந்திய அரசுக்கும் நெருக்கமாக இருப்பதால், இந்திய யூதர்களும் பிரச்சினையின்றி நலமுடன் வாழ்ந்து வருகின்றனர்.

### இராணுவத்திற்கும் விபச்சாரத்திற்கும் நேபாள மக்கள்

இமயத்தின் அடிவாரத்தில் அமைந்திருக்கும் நேபாளம் இந்தியப் பிராந்திய வல்லரசு ஆதிக்கத்திற்கு அடங்கி வாழ்ந்து வரும் நாடாகும். தமது வாழ்க்கைத் தேவைகளுக்காக இந்தியாவுடன் பிணைக்


படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டிருக்கும் நேபாள மக்களை இந்திய அரசு தனது தேவைகளுக்கேற்ப் பயன்ப டுத்தி சுரண்டி வருகிறது. அதனாலேயே இந்தியாவிலிருக்கும் நேபாள மக்களை கண்டும் காணாமலும் நடத்தி வருகிறது.

இந்திய இராணுவத்தின் தீவிரமான போரிடும் பிரிவான 'கூர்க்கா ரெஜிமண்ட்'டில் பல ஆயிரம் நேபாள வீரர்கள் இருக்கின்றனர். பம்பாய் விபச்சா ரத்திற்கு ஆயிரக் கணக்கான நேபாள சிறு மிகள் ஆண்டு தோறும் விற்கப்படுகின் றனர். இந்திய ஆளும் வர்க்கங்களின் ஆசி யுடன் இந்திய மாஃபியா கும்பல்கள் நேபா ளத்தை மையமாக வைத்து போதைப் பொருள் வியாபாரத்தையும் வள்மாக செய்து வருகின்றனர். இப்படி இராணு வத்தில் குறைந்த கூலி கொடுத்து பலியி டவும், பம்பாய் சுற்றுலாவில் பணத்தை அள்ளவும் பயன்படும் நேபாள மக்களை இந்து மதவெறியர்கள் அகதிகளாகக் கரு தாமல் இருப்பதன் மர்மம் புரிந்திருக்கும்.

**பகடைக் காய்களாக ஈழ அகதிகள்**

அடுத்து நமக்கு நெருக்கமான ஈழ அக திகள் பிரச்சினையைப் பார்ப்போம். ஈழத் திலிருந்து வெளியேறி உலகமெங்கும் சிதறிக் கிடக்கும் அகதிகளில் பல்லாயிரக் கணக்கானோர், இந்தியாவில் - தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். நேபா ளத்தைப் போல இலங்கையும் இந்தியா வுடன் பல்வேறு உறவுகளில் பிணைக்கப் பட்டிருக்கும் நாடுதான். இந்திய பிராந்திய வல்லாதிக்க கொள்கையின் முக்கியமான அங்கமாக இலங்கை இருப்பதும், ஈழவிடு தலைப் போராட்டம் அதிகரித்திருப்பதன் விளைவாக, அக்கொள்கை இன்னும் முக்கியம் பெறுவதும் நாம் அறிந்ததே.

1983 ஜூலை கலவரத்திற்குப் பிறகு தமி ழகம் வந்த ஈழ அகதிகள் ஆரவாரத்துடன், மைய அரசினால் வரவேற்கப்பட்டனர். ஈழ போராளிக் குழுக்களுக்கு ஆயுதமும், பணமும், பயிற்சியும் தடையின்றி தரப்பட் டன. காரணம், இலங்கையில் தன் தலை யீட்டையும், ஆதிக்கத்தையும் ஏற்படுத்து வதற்கும், உறுதி செய்வதற்கும், இந்திய அரசு அகதிகளையும், போராளிகளையும் இந்திய அரசு வரவேற்று உபசரித்தது.

பின்னர் இந்திய அரசு இலங்கைத் தலையீட்டை உறுதி செய்த நேரத்தில் ஈழத் தமிழர்களும், விடுதலைப் புலிகளும் இந்திய ஆதிக்கத்தை எதிர்த்து, அமைதிப் படையுடன் சமர் புரிந்தனர். அதன்பின்னர் தன் நோக்கம் நிறைவேறிய காரணத்தால், அகதிகளை கைதிகளாகவும், போராளி களைத் தடை செய்தும் நடத்தி வருகிறது இந்திய அரசு. இன்று தமிழகத்தில் ஈழ அக திகள் முகாம்கள் அனைத்தும் சிறைக் கூடங்களாக மாற்றப்பட்டுவிட்டன. சிங்

**வங்கதேசத்தைச் சேர்ந்த 'சக்மா' அகதிகளால், அரசியல் ஆதாயம் கிடை யாது என்பதால் இந்திய அரசு துரத்துகிறது.**



கள அரசால் ஈழத்தமிழர்களுக்கு வழங்கப் பட்டுள்ள உரிமைகள் கூட இங்கே அகதி களுக்கு கிடையாது என்பதே உண்மை.

முன்பு ஈழ அகதிகளுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்த இராமேசுவரம், இன்று மரணப் பள்ளத்தாக்காக மாறிவிட் டது. தலைமன்னாரிலிருந்து புறப்பட்டு பாதி வழியில் கடலில் மூழ்கடித்து கொல்லப்பட்டும், மீறி வந்தால் ஐந்தாம் மணற்திட்டில் இறங்கி பசி - வெயில் - குளிரில் பரிதவித்தும் வாடுவதே அவர் களின் தலைவிதியாகிவிட்டது. பத்தாண்டு களுக்குள் நடந்த இந்தத் தலைகீழ் மாற்றம், அகதிகள் பிரச்சினையில் அரசியல் நல னுக்கேற்ப இந்திய அரசு நடத்தும் இரட்டை வேடத்தை பளிச்செனப் புரிய வைக்கும். அவ்வகையில் இந்து மதவெறி யர்களும் ஈழ அகதிகளை ஒடுக்குவ தையே விரும்பகின்றனர்.

**வங்கதேச அகதிகள் நேற்றும் இன்றும்**

இனி ஆர்.எஸ்.எஸ். கும்பல் விரட்டத் துடிக்கும் வங்கதேச அகதிகளைப் பார்க்கலாம். 80-களில் ஈழத்தமிழ் அகதிக ளுக்கு என்ன நேர்ந்ததோ அதுதான் 70-களில் வங்கதேச அகதிகளுக்கும் நடந் தது. பாக்கிஸ்தானைப் பிளப்பதற்கு தருணம் பார்த்திருந்த இந்திய அரசுக்கு வங்கதேசம் ஒரு கருவியாக வாய்த்தது. இந்திரா காலத்தில் பாக்குடன் நடந்த 1971 போரின் போது வங்கதேசத்திலிருந்து வந்த அகதிகள் வரவேற்கப்பட்டார்கள். பாக்கை எதிர்த்த வங்கதேசத்து ஷேக் முஜிபூர் ரஹ்மான் இந்தியாவால் வளர்க் கப்பட்டார். அவரது 'முக்தி வாஹினி' இயக்கத்திற்கு ஆயுதமும், பயிற்சியும் இந்திய அரசால் அளிக்கப்பட்டன. போரில் பாக். தோல்வியடைந்து, வங்க தேசம் பிரிந்த போது அகதிகளின் வாழ்வும் முடிவுக்கு வந்தது.



**ஷேக் முஜிபூர் ரஹ்மான்**

ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்குப் பிறகு வந்த இராணுவ மற்றும் ஜனநாயக ஆட்சி யாளர்கள் இந்திய ஆதிக்கத்தை எதிர்த்து வருவதால், இங்கிருக்கும் வங்கதேச ஏழைகளை விரட்டுவதற்கு இந்திய அரசும், இந்து மதவெறியர்களும் தீவிரம் காட்டுகின்றனர்.

இன்றைய வங்கதேசமும் (பங்க ளாதேஷ்) இங்கிருக்கும் மேற்கு வங்க மாநிலமும், மொழியால், இனத்தால், பண்பாட்டால் ஒரே மக்கள் வாழும் பிராந் தியமாகும். மேற்குவங்கத்தில் இந்துக் களும், கிழக்கு வங்கத்தில் முசுலீம்களும் பெரும்பான்மையாக இருந்தாலும், இரு மதத்தைச் சேர்ந்தோரும் கணிசமான அளவில் இரு பகுதிகளிலும் வாழ்கின் றனர். வங்க தேசிய இனம் இந்தியாவின் வளர்ச்சியடைந்த ஒரு சில தேசிய இனங் களில் ஒன்றாகும். அதனால் இம்மக்களது நெருக்கமான உறவு அதிகம் விளக்கமா



படிப்பகம்

www.padippakam.com

லேயே புரிந்து கொள்ள முடியும்.

காலனிய ஆட்சியின் போது 1905-இல் கர்சன் பிரபு என்ற வெள்ளைக்கார வைசிராய் வங்கத்தை மேற்குர, கிழக்கு என மதத்தை அடிப்படையாக வைத்து பிரித்தான். ஆயினும் வெள்ளையர்களின் பிரித்தாலும் சூழ்ச்சியை அன்றைய வங்கத்து மக்கள் தீரத்துடன் போரிட்டு முறியடித்தார்கள்.

மதவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வங்க மக்கள் என்ற முறையில் நடத்திய இப்போராட்டம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வாகும். ஆயினும் அதன் பிறகு நாட்டு விடுதலைப் போராட்டம் இந்து மதச்சார்பை எடுத்ததும், அதை வெள்ளையர்கள் ஆதரித்ததும், எதிர் விளைவாக முசுலீம் லீக் தோற்றமும் இறுதியில் வங்கம் மதத்தால் பிளவுண்டு போக காரணமாய் அமைந்தன.

கிழக்கு பாக்கிஸ்தான் என்றழைக்கப்பட்ட வங்க தேசம் பாக்கிஸ்தான் ஒடுக்குமுறையிலிருந்து பிரிந்து வந்தாலும், வறுமையிலிருந்து விடுதலையடையவில்லை. இந்தியாவை விட பின்தங்கியிருக்கும் வங்கதேசம் எவ்வித பொருளாதார முன்னேற்றமும் இல்லாத ஒரு வறிய நாடாகும். ஏற்கனவே துணைக் கண்டத்துடன் நெருக்கமான உறவு கொண்டிருந்த வங்கத்து மக்களில் ஆகக் கடையரான ஏழைகள் பஞ்சம் பிழைக்க கல்கத்தா, டெல்லி, பம்பாய் நகரங்களுக்கு வருகின்றனர்.

இப்படி இந்தியாவின் வறிய பகுதிகளிடமிருந்து பிழைப்புத் தேடி பெரு நகரங்களுக்கு குடிபெயர்வது என்பது இந்நூற்றாண்டு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சியாகும். வங்க தேசத்திலிருந்து இந்தியா வந்து ரூ. 20, 30 என கூலிக்கு வேலை செய்யும் இந்த ஏழைகளை முசுலீம்கள் என்ற ஒரே காரணத்தினால், விரட்டி அடிக்க வேண்டும் என்று இந்து மதவெறியர்கள் கூப்பாடு போடுகின்றனர்.

### உலக பாசிசக் கூட்டணியில் அல்லல்படும் அகதிகள்

அகதிகள் பிரச்சினை என்பது ஆர்.எஸ்.எஸ். கூறுவது போல உலக அதிசயமல்ல. காலனிய நாடுகளை அடக்கி ஆளும் ஏகாதிபத்தியம் தோன்றியதிலிருந்து, நாடுவிட்டு நாடு போகும் அகதிகள் பிரச்சினையும் துவங்கிவிட்டது. அரசியல், பொருளாதார, மத, பண்பாட்டுக் காரணங்களினால் தன் நாட்டில் வாழ வழியின்றி அடைக்கலம் தேடி ஓடுவது என்பது இன்றைய உலகமயமாக்கத்தின் வளர்ந்து வரும் பிரச்சினையாகும். இதற்கு காரணமான வல்லரசு நாடுகளே இதற்கு தீர்வு சொல்ல முடியாத நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன.




**ஜெர்மனி ஆசியர்களையும், கருப்பினத்தவர்களையும் அடித்து துரத்தும் 'புதிய நாஜி' இளைஞர்கள். ஆர்.எஸ்.எஸ்.இன் ஜெர்மானிய அவதாரம்.**

இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கும், வளைகுடாவிற்கும் விசா இல்லாமல் போவது, மத்திய - தென் அமெரிக்க நாடுகளிலிருந்து, அமெரிக்க - ஐக்கிய நாட்டிற்கு (யு.எஸ்.) போவது, ஏழை மத்திய தரைக்கடல் - ஆப்ரிக்க நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு போவது, தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு செல்வது, இந்தோ சீன தீபகற்பத்திலிருந்து அமெரிக்காவிற்கு செல்வது என வேலை - வாழ்க்கை தேடி ஓடும் சட்ட விரோத 'அகதிகளின்' இடமாற்றம் உலகெங்கும் நடந்து வருவதுதான்.

இன்னும் போஸ்னியா, குர்திஸ்தான், செசன்யா, கிழக்கு திமோர், ஈழம், காஷ்மீர் போன்ற அரசியல் அகதிகள் பிரச்சினையும் உலகெங்கும் உள்ளதுதான்.

**அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பான் நாடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் இந்தியாவைக் கூறு போட்டு விற்கும் பா.ஜ.க. இந்து மதவெறிக் கும்பல், ரிக்ஷா இழுத்தும் மூட்டை தூக்கியும் தெருவில் வாழும் வங்கதேசத்து ஏழைகளை தேச விரோதிகள் என்று கூசாமல் கூறுகிறது.**

இப்படி நாடு விட்டு நாடு போகும் இத்தகைய அரசியல் - வாழ்க்கை அகதிகளை அந்தந்த நாட்டு முதலாளிகள் குறைந்த கூலி கொடுத்து சக்கையாய் பிழிந்து சுரண்டியும் வருகின்றனர். இத்தகைய மலிவான உழைப்புச் சுரண்டலுக்காக பல நாடுகள் சட்டவிரோத குடியேற்றத்தைக் கண்டும் காணாமலும் இருந்து வருகின்றனர்.

அதேசமயம் இந்த அகதிகள் அரசியல் ரீதியாக ஒன்று சேர்வதைத் தடுத்து மிரட்டுவது, உள்நாட்டு பிரச்சினைகளுக்கு அகதிகளை காரணம் காட்டி அந்நாட்டு இளைஞர்களை உசுப்பி விடுவது என்ற தந்திரத்தை இந்நாட்டு அரசுகள் பின்பற்றி வருகின்றன.

பிரிட்டனில் ஆசிய நாட்டவரைத் தாக்குவது, அல்ஜீரியர்களை பிரான்சில் தாக்குவது, தென் அமெரிக்கரை அமெரிக்காவில் மிரட்டுவது, ஈழ அகதிகளை ஜெர்மனியில் அடிப்பது, ஆஸ்திரேலியாவில் தெற்காசியரைத் தாக்குவது - இவை சில எடுத்துக்காட்டுக்கள். இந்நிகழ்ச்சிப் போக்கிலிருந்தே உலகெங்கும் பாசிச இனவெறிக் குழுக்கள் தோன்றியுள்ளன. உலகளாவிய இந்த பாசிசக் கூட்டணியின் இந்தியப் பிரதிநிதிகளான ஆர்.எஸ்.எஸ். கூட்டம் வங்கதேச அகதிகளை அடித்து விரட்டுகிறது.

●●●

எனவே அகதிகளுக்காக கண்ணீர் விடுவதும், அவர்கள் உழைப்பைச் சுரண்டுவதும், அவர்களை அடித்து விரட்டுவதும் ஏகாதிபத்தியத்தின் இரட்டை முகங்களாகும். ஐ.நா. சபையின் மனித உரிமை சாசனம் வகுத்திருக்கும் அகதிகளின் உரிமைகள் உண்மையில் ஒரு கேலிக்கூத்தாக மாறிவிட்டது. வல்லரசு நாடுகளின் அரசியல் ஆதாயத்துக்காக பந்தாடப்படும் அகதிகளின் அவலம் இக்கணம் வரை அதிகரித்தே வருகிறது. இந்தியாவிலும் அப்படித்தான்.

அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பான் நாடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் இந்தியாவைக் கூறு போட்டு விற்கும் பா.ஜ.க. இந்து மதவெறிக் கும்பல், ரிக்ஷா இழுத்தும் மூட்டை தூக்கியும் தெருவில் வாழும் வங்கதேசத்து ஏழைகளை தேச விரோதிகள் என்று கூசாமல் கூறுகிறது.

முசுலீம் மக்களை ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டு - அகதி என்று மிரட்டுவதற்கான துருப்புச் சீட்டுதான் இந்த அகதிப் பிரச்சாரம்.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

**7-ஆம் பக்கத் தொடர்ச்சி**

மராக இல்லாமல் போனாலும் கூட அப்படித்தான் இருப்பேன். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றால் இந்திய மக்கள் ஒவ்வொருவரின் கனவையும் நிறைவேற்றுவேன் என்றுதான் பேசினேன். அயோத்தியைக் குறித்து இதைப் பேசவில்லை'' என்று ''வீடியோ'' ஆதாரங்களுக்கு மாறாகப் பச்சையாக வாஜ்பாயி புளுகினார்.

வாஜ்பாயி இப்படிச் செய்தது ஆர்.எஸ்.எஸ்.க்கு அவமானமாகிவிடும் என்பதால் அதற்குச் சரிக்கட்டும் வகையில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஆக்ரா விழாவில் அத்வானி பேசினார். ''ஆர்.எஸ்.எஸ்.க்கு பா.ஜ.க. மீது தார்மீக அதிகாரமுண்டு. பிரதமர் வாஜ்பாயிக்கும் எனக்கும் சங்கத்திடம் வரலாற்று ரீதியான பந்தம் உண்டு'' என்று பிரகடனப்படுத்தினார்.

அத்வானியின் இந்தப் பேச்சு, ஆர்.எஸ்.எஸ். ஆட்டிப் படைக்கும் கருவிதான் பா.ஜ.க. என்பதை உறுதிப்படுத்தியது. இதை மூடி மறைக்க எண்ணி பா.ஜ.க. தலைவர் பங்காரு லட்சுமணன் அத்வானியின் பேச்சுக்கு ஒரு விளக்க உரை அளித்துள்ளார். காந்தியின் கொள்கைகள் நேருவுக்குத் தெரியும்; அவற்றை நேரு அமலாக்கவில்லை. ஆனாலும் காங்கிரசின் மீது காந்திக்கு ஒரு தார்மீக உரிமை இருந்தது. அதைப் போன்றுதான் ஆர்.எஸ்.எஸ்.க்கும் பா.ஜ.க.வுக்கும் உள்ள உறவுபற்றி அத்வானி சொன்னது'' என்று விளக்கமளித்தார் பா.ஜ.க. தலைவர்.

இவையெல்லாம் காட்டுவதென்னவென்றால், ஆர்.எஸ்.எஸ்.க்கும் பா.ஜ.க.வும் இடையே தீராது வளர்ந்து வரும் முரண்பாடும் மோதல்களும் நிலவுவதாக செய்தி ஊடகங்களில் உள்ள ஆர்.எஸ்.எஸ். விசுவாசிகளைக் கொண்டு ஒரு கபட நாடகம் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. மக்கள் இந்தக் கபடநாடகத்தில் மூழ்கடிக்கப்படும் அதேசமயம் பெரிதாக எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், ''இந்துத்துவா'' திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

✸ ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடியாட்படைகளான பஜ்ரங்தள், இந்து சுரக்சா தள் மற்றும் சான்ஸ்கிரிதி சம்ரக்சனா சமிதி ஆகியவற்றின் பொறுக்கிகளைக் கொண்டு கிறித்தவர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. கடந்த இரண்டாண்டுகளில் 400-க்கும் மேற்பட்ட தாக்குதல்களும் இந்த ஆண்டு மட்டும் 57 தாக்குதல்களும் நடந்துள்ளன. குஜராத் சூரத் நகரில் பைபிள் நூல் விநியோகித்ததற்காக ஒரு பாதிரியார் நிர்வாணமாக்கப்பட்டு, அடித்து தெருத் தெருவாக இழுத்துச் செல்லப்பட்டார். இவையெல்லாம் திட்டமிட்டு நடப்பவை அல்ல; தன்னெழுச்சியாக, இயல்பான உணர்ச்சிவசப்பட்ட தேச பக்தர்களின் செய்ல்கள் எனச் சித்தரித்து நியாயப்படுத்துவதும் அரசு பாதுகாப்பு அளிப்பதும் நடக்கிறது.

✸ ''கலாச்சார போலீசு'' என்ற குண்டர் படை உருவாக்கப்பட்டு ''இந்துத்தவா சித்தாந்த''த்துக்கு மாறான நூல்கள், காட்சி ஓவியங்களை தாக்கி எரிப்பது, மாற்றுமத பள்ளிச் சிறுமிகளின் நெற்றியில் பலாத்காரமாக பொட்டு வைப்பது, பள்ளிகளில் சரசுவதி வந்தனப் பாடலை திணிப்பது, ஃபயர் திரைப்பட அரங்கு மீது தாக்குதல், வாட்டர் படப்பிடிப்புக் குழு மீது தாக்குதல், எம்.எஃப். ஹூசைனின் ஓவியங்களை எரிப்பது, பைபிள் - குரான் நூல்களை எரிப்பது போன்ற காரியங்கள் திட்டமிட்டு செய்யப்படுகின்றன. ''பெரும்பான்மை மக்களின் அதாவது இந்துக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக மக்கள் தாமே கொதித்தெழுவதைத் தடுக்க முடியாது'' என்று கூறி அந்த இந்துவெறியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மறுக்கிறது.

**''மற்றபிற கட்சிகளைப் போன்றது தான் இட்லரின் கட்சியும். அது ஆட்சிக்கு வருவது குறித்தும், தொண்டர் படை குறித்தும் அச்சப்பட ஒன்றுமில்லை'' என்று ஜெர்மானிய நடுத்தர வர்க்கத்தினரிடையே உருவாக்கப் பட்ட அலட்சியம்தான் நாஜி இட்லர் அடைந்த முதல் அரசியல் வெற்றி. அதுபோன்றே, பாரதீய ஜனதா கட்சி பற்றியும் ஆர்.எஸ்.எஸ். பற்றியும் பொய்யானதொரு தோற்றத்தை உருவாக்கும் முயற்சி நடந்து வருகிறது.**

✸ வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், தொல்பொருள் ஆய்வு நிறுவனங்களில் ஆர்.எஸ்.எஸ். விசுவாசிகளை நியமிப்பது, பல்கலை ஆராய்ச்சியிலும் கல்வியிலும் சோதிடத்தைப் புகுத்துவது முதல் சரசுவதி வந்தனம் வரை மனிதவள மேம்பாடு என்ற பெயரில் முன்னாள் பா.ஜ.க. தலைவரும் அமைச்சருமான முரளி மனோகர் ஜோஷி இந்துத்துவா திட்டத்தைத் திணிக்கிறார். இந்துத்துவ அடிப்படையில் தேசிய வெறி பரப்புகிறார்.

✸ டெல்லியின் யமுனா நதிக்கரையில் உள்ள குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் இராமாயண - மகாபாரத இதிகாசக் கட்டுக் கதைகளின் அடிப்படையில் ''கதைக் கிராமங்கள்'' கட்டப்படுகின்றன. இதற்காக பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ''இந்து தில்லி''யாக மாற்றிவிட பா.ஜ.க. அரசு திட்டமிட்டு வேலை செய்கிறது.

✸ இவற்றைவிட முக்கியமாக, தில்லியின் ஒவ்வொரு குடும்பமும் சமூகமும் என்னென்ன செய்கிறது என்பதைக் கண்காணிப்பதற்காக பா.ஜ.க. ''அடியாட்கள் குழுக்கள்'' அனைத்து வட்டாரங்களுக்கும் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் 250 குடும்பங்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்துப் பதிவேடுகளில் குறித்து வைத்துக் கொள்ளும். தேவையானபோது குடும்ப விவகாரங்களில் தலையீடு செய்யும், கட்சித் தலைமைக்கும், அரசு அதிகாரிகளுக்கும் அறிக்கை தரும். சட்டம் - ஒழுங்கைக் காப்பது என்கிற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ''அடியாட்கள் குழுக்கள்'' பா.ஜ.க. அல்லாத இந்து அல்லாத குடும்பங்களைக் கண்காணித்துப், பழி வாங்குவதற்காகத்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அரசியலில் நிலைத்த தன்மையைக் காப்பதற்காக தேசியத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே கூட்டுச் சேர்ந்திருப்பதாகக் கூறும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ''மதச் சார்பின்மை'' உரிமை பாராட்டும் தி.மு.க - ம.தி.மு.க - பா.ம.க, சமதா, திரிணாமுல், தெலுங்கு தேசம் போன்ற கட்சிகள், இப்படி இந்துத்துவா கொள்கை அமலாக்கப்படுவதைக் கண்டுகொள்வதே இல்லை. ஆட்சி அதிகாரத்தில் நீடிக்க வேண்டும் என்பதற்காகவே ஆர்.எஸ்.எஸ். மற்றும் பிற இந்துவெறி பாசிச கும்பலின் அப்பட்டமான நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தவே செய்கின்றன.

போலிக்கம்யூனிஸ்டுகள் உட்பட மதச் சார்பற்ற கூட்டணியோ வெறும் அடையாள எதிர்ப்பு, கண்டன அறிக்கைகளோடு சரி. அதுவும் ஓட்டுப் பொறுக்குவதற்காகத்தான். ஒவ்வொரு குடும்பத்தையும் கண்காணித்துத் தாக்குமளவு இந்துமத வெறி பாசிஸ்டுகள் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, ஆழப்படுத்தும் போது, பதிலடி கொடுக்கத் தற்காப்புக் குழுக்களைக் கட்டி, ''அடியாட்குழுக்களை'' அடித்து விரட்ட வேண்டாமா? ஓட்டுக் கட்சி அரசியலுக்குள் முடங்கிக் கிடப்பது எதிரிகளிடம் சரணடைவதாகவே முடியும். அரசியல், பண்பாட்டு உரிமையை மட்டுமல்ல, வாழும் உரிமையையே பறிகொடுப்பதாகவே முடியும்.

● ஆர். கே.

படிப்பகம்

www.padippakam.com



# நான் யார் தெரியுமா, நீ யார் புரியுமா?

***பீரங்கித் தொழிற்சாலையின் முதலாளி அண்டர்ஸாப்டும் அவரது லட்சியம் பேசும் மகன் ஸ்டீபனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திருமதி. அண்டர்ஸாப்ட் உடனிருக் கிறாள்.***

*தந்தை:* நீ பீரங்கித் தொழிலில் ஈடுபட விரும்புவதாக நான் அறிகிறேன்.

*மகன்:* நான் வியாபாரத்தில் ஈடுபடப் போவதில்லை. நிச்சயமாக இல்லை.

*தந்தை:* (கண்களை அகலத் திறந்து மனப்பாரம் குறைந்தவராக) அப்படி யானால்...

*மகன்:* எனக்கு வியாபாரியாகவோ முதலாளியாகவோ விருப்பமில்லை. எனக்குத் தொழில் செய்யும் திறமை இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆர்வமும் இல்லை. நான் ஒரு அரசியல் வாதியாக ஆவதற்கே விரும்புகிறேன்.

*தந்தை:* (எழுந்து) என் அருமை மகனே, உன் விருப்பத்தைக் கேட்கும் போது எனக்கு பெரிய மனப்பாரம் இறங்கியது போலிருக்கிறது. இது நமது நாட்டிற்கும் நல்லதாய் முடியும் என்று நினைக்கிறேன். கட்டாயப்படுத்தி இந்தப் பொறுப்பை உன்மீது திணிக்க முயன்று எங்கே நீ ஒப்புக் கொண்டுவிடப் போகிறாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். (கைகளைப் பிடித்து குலுக்குவதற்காக அவனை நெருங்குகிறார்)

*தாய்:* (எழுந்து அவர்கள் இருவருக்கும் மத்தியில் வந்து) ஸ்டீபன்! அவ்வளவு சொத்து முழுவதையும் இப்படி உதறித் தள்ளிவிட நான் உன்னை அனுமதிக்கப் போவதில்லை.

*மகன்:* (உறுதியாய்) அம்மா நீங்கள் இன்னும் என்னை ஒரு குழந்தை போலவே நடத்திக் கொண்டு வருவதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். (தாய் அவனது குரலில் இருக்கும் கண்டிப்பைக் கண்டு அதிர்ந்து போகிறாள்.) நேற்று வரை நான் உங்கள் நோக்கங்களைப் பற்றி அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவைகளை நான் விளையாட்டாக எடுத்துக் கொண்டு விட்டேன். ஆனால் நான் இப்போதுதான் உணர்கிறேன்.

இத்தனை வருஷங்களாக நீங்கள் எனக்கு எவைகளை விளக்கிச் சொல்ல வேண்டுமோ அவைகளைச் சொல்லாமல் இருட்டறையில் வைத்த மாதிரி வைத்து விட்டீர்கள். இப்போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. இது சம்பந்தமாக மேற்கொண்டு ஏதாவது பேச்சு வார்த்தைகள் தொடர வேண்டு மென்றால் அது எனக்கும் அப்பாவுக்கும் இடையில்தான் இருக்க வேண்டும். நானும் அப்பாவும்தான் சம்பந்தப்பட்ட ஆண் பிள்ளைகள்.

*தாய்:* ஸ்டீபன்! (அவள் மீண்டும் இருக்கையில் அமர்கிறாள். அவளு டைய கண்களில் நீர் மல்கிக் கொண்டிருக் கிறது.)

*தந்தை:* (மிகுந்த அனுதாபத்துடன்) இங்கே பார் அன்பே. பெரியவர்கள்தான் குழந்தைகள் போல் நடத்தப்படுகி றார்கள்.

*மகன்:* வருந்துகிறேன் அம்மா. நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தி...

*தந்தை:* (அவனுடைய பேச்சில் குறுக்கிட்டு) ஆமாம். ஆமாம். அது சரிதான் ஸ்டீபன். இனிமேல் உன் அம்மா உன் விஷயத்தில் தலையிட மாட்டாள். உன்னுடைய சுதந்திரம் நிலை நிறுத்தப் படும். நீ உன்னுடைய சாவியை உன் கையில் வைத்துக் கொள். அதை நழுவ விடாதே. இதற்காக நீ மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை. (இருக்கையில் அமர்கிறார்.)

> *ஓ! அவன் எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கி றானோ அதையே செய்யட்டும். அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதுதான் ஒரு அரசியல் வாதியின் உண்மையான திறமை. எனவே, அவன் அரசியலை தொழிலாக எடுத்துக் கொள்ளட்டும்.*

சரி, தந்தை மகன் என்பது இருக் கட்டும். இப்போது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையில் நடக்கும் பேச்சு போல கேட்கிறேன். மன்னிக்க வேண்டும் மகனே, இரண்டு ஆண் பிள்ளைகளுக்கு இடையே அல்ல, இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் ஒரு பெண்மணிக்கும் இடையில். நீ உன்னு டைய வருங்காலத்தைப் பற்றி என்ன சொல்கிறாய்?

*தாய்:* நான் நீ சொல்வதை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன் ஸ்டீபன். நீ உறுதியாக இருந்தால் உன் எண்ணப்ப டியே செய்.

(ஸ்டீபன் ஒரு நீதிபதியைப் போல ஒரு தீர்க்கமான முகபாவத்துடன் இருக் கையில் அமர்ந்து கொள்கிறான்.)

*தந்தை:* நீ பீரங்கித் தொழிலை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதுதான் முடிவான விஷயமாகி விட்டதே.

*மகன்:* அது முடிவாகி விட்டது என்றுதான் நானும் நம்புகிறேன்.

*தந்தை:* இதோ பார் ஸ்டீபன், பேய் பிடித்தவன் மாதிரி முகத்தில் வெறுப்பைக் காட்டிக் கொள்ளாதே, அது சின்னப் பையன்கள் செய்கிற காரியம். உனக்கு தாராளமாக சுதந்திரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நீ என்னையே பின்பற்ற வேண்டும் என்ற நிர்பந்தம் ஏதும் இல்லை. அதற்குப் பதிலாக நீ உன்னு டைய விருப்பம் போல எந்தத் துறையை தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்பி னாலும் அந்த உரிமையை நான் உனக்கு தாராளமாகக் கொடுக்கிறேன்.

ஆனால் ஒன்று தெரிந்து கொள். நீ உடனே நாட்டின் பிரதம மந்திரியாக ஆகிவிட முடியாது. ஏதாவது ஒரு துறையில் தேர்ச்சி பெற வேண்டும். நீயாக ஏதாவது துறையைப் பற்றி கவனம் வைத்திருக்கிறாயா? இசை, இலக்கியம், ஓவியம், நாடகம் இந்த மாதிரி ஏதாவது?

*மகன்:* என்னிடத்தில் இலக்கியமோ கலையோ சம்பந்தப்பட்ட இயல்பு ஒன்றும் கிடையாது.

*தந்தை:* தத்துவ ஞானத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்? தத்துவ ஞானிக்கு நல்ல மதிப்பு உண்டே?

*மகன்:* தத்துவ ஞானியா? அந்த மாதிரி பாசாங்கு பண்ணும் இயல்பும் என்னிடம் இல்லை. அதை நான் விரும்பவும் இல்லை.

*தந்தை:* அப்படியா? சரி. நாட்டின் பாதுகாப்பு சேவை இராணுவம் இருக்கி றது. கப்பற்படை அல்லது விமானப்

www.padippakam.com





படை இதில் ஏதாவதில் சேர விருப்பமா? இல்லையென்றால் தேவாலய திருச்சபை - இதில் மதிப்பும் மரியாதையும் ஏராளமல்லவா? இல்லாவிட்டால் வழக்கறிஞர் - நீதிமன்றம் நல்ல திறமை மிக்க துறைதான். பத்திரிகைகளில் பேர் வரும்.

*மகன்:* அப்பா நான் சட்டம் படிக்க வில்லை. மேலும் அதற்கெல்லாம் கொஞ்சம் ''தூக்கிவிட'' ஆள் வேண்டும். எனக்கு அப்படித் தூக்கிவிடக் கூடிய ஆள் யாரும் இல்லையே! வாதத் திறமையின் வெற்றியெல்லாம் வாதிடு பவனுக்குநீதிபதியிடத்தில் இருக்கிற செல்வாக்கைப் பொறுத்துத்தான். அதனால்தான் வழக்கறிஞர்கள் கொச்சை யாக ''தள்ளிவிடும்'' சமாச்சாரங்கள் என்கிறார்கள்.

*தந்தை:* உன்னுடைய சமாச்சாரம் ரொம்ப சிக்கலான சமாச்சாரமப்பா. ஒரு துறை பாக்கியில்லை. எல்லாம் சொல்லி யாகி விட்டது. இப்போது பாக்கியுள்ளது திரை உலகம்தான். (ஸ்டீபன் பொறுமை இழந்தவனாய் நகர்ந்து செல்லப் பார்க்கிறான்) சரி. உனக்குத் தெரிந்த அல்லது நீ விருப்பப்படுகிற ஏதாவது துறை இருக்கிறதா? அப்படியானால் அதையாவது சொல்லப்பா.

*மகன்:* (எழுந்து அப்பாவைத் தீர்க்க மாகப் பார்த்துவிட்டு) எனக்கு நல்ல துக்கும் கெட்டதுக்கும் உள்ள வேற்று மையை உணரக் கூடிய சக்தி இருக்கிறது அப்பா.

*தந்தை:* (வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டு) அப்படியா சொல்லுகிறாய்? வியாபாரம் செய்யும் திறமை இல்லை. சட்டத்தைப் பற்றிய படிப்பு இல்லை. தத்துவ ஞானிக்குரிய பாசாங்கும் தெரியாது.

ஆனால் எல்லா தத்துவ ஞானி களையும் பேதலிக்க வைக்கக் கூடிய, எல்லா வழக்கறிஞர்களையும் நம்பிக்கை யிழக்கச் செய்கிற, எல்லா வியாபாரிக ளையும் அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிற அந்த இரகசியத்தைப் பற்றி, அதாவது ''நல்லதுக்கும் கெட்டதுக்கும் உள்ள வேற்றுமை'' பற்றி நீ தெரிந்து வைத்திருக்கிறாயே - இந்த இருபத்து நான்கு வயதிலேயே நீ நிச்சயமாக ஒரு மேதைதானப்பா! ஞானிகளுக்கெல்லாம் ஞானி! குருக்களுக்கெல்லாம் குரு. ஒரு நவீன பகவான்.

*மகன்:* (கோபத்தை அடக்கிக் கொண்டு) நீங்கள் எப்போதும் பிறரை நையாண்டி பண்ணுவதிலே இன்பம் காண்பவர். ஒரு நேர்மையான ஆங்கில கனவான் தன்னுடைய பிறப்புரிமை என்று கூறிக் கொள்கிற இந்த உண்மையைத் தவிர நான் அதிகமாக எதையும் தெரிந்த மாதிரி பாசாங்கு செய்யவில்லை.

*தந்தை:* ஒவ்வொருவருடைய பிறப்புரி மையும் அதுதான். உதாரணத்துக்கு இரட்சணிய சேனையின் ஒரு கிறித்தவ மதக்குழு அந்தப் பெண் ஜென்னி ஹில்லை எடுத்துக் கொள்வோம்.

நீ அந்தப் பெண்ணிடம் போய் ஜென்னி நீ தெருவில் நின்று கொண்டு போகிறவர் வருகிறவருக்குப் பூகோளம் அல்லது இலக்கணம் அல்லது கணக்குப் பாடம் நாட்டியம் சொல்லிக் கொடுக்கி றாயா என்று கேட்டுப்பார்!

உடனே நீ அவளைக் கேலி செய்கிறாய் என்றுதான் அவள் நினைப்பாள். ஆனால் அதே ஜென்னி நடுத்தெருவில் நின்று கொண்டு கிறித்துவ மதத்தைப் பற்றியும், ஒழுக்க நெறிகளைப் பற்றியும் பிரசங்கம் பண்ணுவதற்கு அவளுக்கு என்ன தகுதியிருக்கிறது என்று அவள் உணர்ந்து பார்ப்பதில்லை.

ரொம்பவும் நேர்மையானவர்கள் என்று நினைத்துக் கொள்ளும் நீங்கள் எல்லோரும் ஜென்னியைப் போலத்தான் இருக்கின்றீர்கள். உங்களால் புத்து அங்குல துப்பாக்கியினுடைய குண்டு பாயும் வேகத்தை அளவிட்டுச் சொல்லத் தெரியாது. ஆனால் உணர்ச்சி வசப்படு கிற ஒரு மனிதனுடைய மனோவே கத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குச் சக்தி வாய்ந்த வெடி மருந்துகளை எப்படிக் கையாள வேண்டும் என்று தெரியாது. நீங்கள் நேர்மை, சத்தியம், நீதி இவைகளைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டு அதன் காரணமாக ஒருவரையொருவர் கொன்று



தீர்க்கிறீர்கள். ஆஹா! என்ன தேசம்! என்ன உலகம்!

*தாய்:* (சிரமத்துடன்) ஆண்ட்ரூ! அவன் எந்தத் தொழிலைச் செய்தால் நல்லது என்று நீர் நினைக்கிறீர்?

*தந்தை:* ஓ! அவன் எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறானோ அதையே செய்யட்டும். அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதுதான் ஒரு அரசியல்வாதியின் உண்மையான திறமை. எனவே, அவன் அரசியலை தொழிலாக எடுத்துக் கொள்ளட்டும்.

அவனை ஒரு வட்டச் செயலாளராக ஆக்கக் கூடிய ஒரு அரசியல் பெரும் புள்ளிக்கு அவன் பிரைவேட் செகரட்டரி யாக முதலில் போய்ச் சேரட்டும். பிறகு பாரேன்! அவன் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி வரிசையில் இடம் பிடித்து விடுகிறானா இல்லையா என்று.

*மகன்:* (மீண்டும் எழுந்து) ஐயா, நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். நீங்கள் என் தகப்பனார் என்ற அந்த மரியாதையை நான் மறந்துவிடும்படி நிர்ப்பந்தப்படுத்து கிறீர்கள். என்னுடைய தேசத்தின் அரசாங்கம் கிண்டல் செய்யப்படுவதை நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேன். (அவன் கைகளைக் கோட்டு பைக்குள் விட்டுக் கொண்டே கோபமாய் வெளி யேறுகிறான்).

*தந்தை:* (புலி போல சீறிக் கொண்டு) உன்னுடைய தேசத்தின் அரசாங்கமா? நான்தான் உன் தேசத்தின் அரசாங்கம். நானும் லாசரசும். நீயும் உன்னைப் போன்ற அரை டஜன் கற்றுக் குட்டிகளும் அந்த அரட்டைக் கச்சேரி நடைபெறும் பாராளுமன்ற அறைகளில் உட்கார்ந்து கொண்டு அண்டர்ஷாப்டையும் லாசரசையும் ஆள்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறாயா? இல்லை என் நண்பரே இல்லை.

www.padippakam.com

நாங்கள் இலாபம் பெறுவதற்காகத்தான் நீங்கள் அரசாங்கம் நடத்துகிறீர்கள். எங்களுக்குச் சௌகரியமான சமயங்களில்தான் நீங்கள் யுத்தம் நடத்துகிறீர்கள். எங்களுக்கு சௌகரியம் இல்லாதபோது - அதாவது எங்கள் தளவாடங்கள் எல்லாம் விற்றுத் தீர்ந்த பொழுது நீங்கள் உலக சமாதானத்தைப் பற்றிப் பேசுவீர்கள். தளவாட வர்த்தகமானாலும் வேறு எந்த வர்த்தகமானாலும் அதன் பரிமாணத்தையும் உற்பத்தித் திறனையும் நாங்கள் சொல்கிறபடிதான் நீங்கள் நிர்ணயம் செய்வீர்கள்.

என்னுடைய இலாபத்துக்காக ஏதாவது ஒரு பொருள் தேவை என்றால் நீங்கள் அந்தப் பொருள் நாட்டின் நலனுக்காகத் தேவைப்படுகிறது என்று சொல்லிக் கொண்டு எங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து கூட இறக்குமதி செய்து தருவீர்கள். யாராவது மக்கள் நலம் அது இது என்று சொல்லிக் கொண்டு எங்களின் இலாபம் குறையும் படியான காரியங்களில் ஈடுபட்டார்களேயானால் நீங்கள் உடனே போலீசையும் இராணுவத்தையும் அழைத்து அவர்களை நசுக்குவீர்கள். உங்கள் சொற்படி கேட்பது போலீசும் இராணுவமும்தான். அதுவும் எங்கள் நன்மைக்காகத்தான்.

உங்களின் இந்த சேவைக்கு கைமாறாக எங்களுடைய பத்திரிகைகளும் வார இதழ்களும் உங்களைத் தீவிரமாக ஆதரிக்கும். உங்களைப் பெரிய அரசியல் விற்பன்னர்கள் என்று கருதும்படி பிரச்சாரம் செய்யும். நீங்களும் அந்தக் கற்பனையில் மகிழ்ந்து போவீர்கள்.

உங்கள் தேசத்தின் அரசா? போ பையா! போ! இடத்தைக் காலி பண்ணு. அங்கே போய் உன்னுடைய அரசியல் குழுக்களோடு மகிழ்ச்சியாய்க் கலந்துரையாடல் பண்ணு. அல்லது ஏதாவது பத்திரிகையை எடுத்து அதில் எழுதப் பட்டிருக்கும் தலையங்கங்கள் அல்லது அரசியல் கட்டுரைகளைப் படி. பற்றி எரியும் பிரச்சினைகள், அல்லது விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள், ஊழல் விவகாரங்கள் பற்றிய காரசாரமான விவாதங்களில் கலந்து கொண்டு அந்த அரசியல் விளையாட்டைப் போய் விளையாடு.

நான் என்னுடைய தொழிற்சாலையின் கணக்கு அறைக்குப் போய் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுத்து விட்டு அவர்களுக்கு என்ன வேலை செய்ய வேண்டும் என்று உத்தரவிடப் போகிறேன்.

*மகன்:* (உதட்டிலே புன்முறுவலுடன் அப்பாவின் தோளில் கை போட்டுக் கொண்டு அவருடைய தோழமையை விரும்பியவனாய்) என் இனிய அப்பா! உள்ளபடியே உங்களிடத்தில் கோபப் படுவது என்பது முடியாத காரியம். உங்களை யாரும் வெல்ல முடியாது. உங்களை எதிர்ப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை நான் அறிந்து கொண்டேன்.



*சீன எழுத்தாளர் லூ சூனுடன், பெர்னாட்ஷா.*

நீங்கள் வெகு கடுமையாக உழைத்துப் பெரும் பணக்காரராகி இருக்கிறீர்கள். அதைப்பற்றி நியாயமாகவே நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இன்றைய தேதியில் இந்தத் தேசத்தில் பெரும் பணக்காரர்களில் ஒரு முக்கிய புள்ளி நீங்கள் என்கிற விஷயம் உங்களுக்கு ஒரு உன்னத கௌரவத்தைக் கொடுத்திருக்கிறது உண்மை. உங்கள் பணத்தின் பொருட்டு உங்களுடைய கொள்கைகளை ஒப்புக் கொள்கிறவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றனர்.

*நாங்கள் இலாபம் பெறுவதற்காகத்தான் நீங்கள் அரசாங்கம் நடத்துகிறீர்கள். எங்களுக்குச் சௌகரியமான சமயங்களில் தான் நீங்கள் யுத்தம் நடத்துகிறீர்கள். எங்களுக்கு சௌகரியம் இல்லாதபோது - அதாவது எங்கள் தளவாடங்கள் எல்லாம் விற்றுத் தீர்ந்த பொழுது நீங்கள் உலக சமாதானத்தைப் பற்றிப் பேசுவீர்கள்.*

என்னைப் பொறுத்தவரை நான் பழைய முறையில் இயக்கப்படும் பள்ளிக் கூடத்தில் பயின்று நமது பழைய மரபு பல்கலைக் கழகத்திலேயே பட்டம் பெற்று அந்த முறையிலேயே என் கருத்துகளும் சிந்தனைகளும் இருக்கின்றன. ஆகையால் நீங்கள் பணம்தான். இங்கிலாந்தின் ஆட்சியை நடத்துகிறது என்று நினைப்பது இயற்கையே. ஆனால் நான் உங்களைவிட அதிகம் கல்வி கற்றவன் என்று சொல்லிக் கொள்ள என்னை அனுமதிக்க வேண்டும்.

***தந்தை:*** அப்படியானால் இங்கிலாந்து தேசத்து ஆட்சியை நடத்துவது எது என்று சொல்ல முடியுமா?

***மகன்:*** பண்பு அப்பா பண்பு!

***தந்தை:*** யாருடைய பண்பு என்னுடைய பண்பா அல்லது உன்னுடைய பண்பா?

***மகன்:*** உங்களுடைய பண்பும் அல்ல என்னுடைய பண்பும் அல்ல. ஆனால் இங்கிலாந்து நாட்டின் அருமையான தேசிய பண்பு.

***தந்தை:*** உனக்கு ஏற்ற தொழிலை நான் கண்டுபிடித்துவிட்டேன். நீ ஒரு பிறவிப் பத்திரிக்கையாளன். ஒரு பெரிய வாரப் பத்திரிக்கையை உனக்காக நான் ஆரம்பித்துத் தருகிறேன். ஆமாம். ●

**பெர்னாட்ஷாவின் 'மேஜர் பார்பரா' எனும் நாடகத்தின் சில பகுதிகள்.**

**தமிழாக்கம்: பெர்னாட்ஷா தாசன்.**
**நன்றி: 'கோடு' காலாண்டிதழ்**

மேற்குலக ஜனநாயக நாடுகளின் 'தேசியப் பண்பை' நுட்பமாகவும், எளிமையாகவும் ஒரு அழகான சித்திரமாகவும் உணர்த்துகிறார், பெர்னாட்ஷா. முதலாளித்துவ உலகில் நீதி, அறிவு, ஜனநாயகம், லட்சியம் போன்றவை உண்மையில் எப்படி உலாவருகின்றன என்பதை இப்பாத்திரங்கள் எதார்த்தமாக பேசுகின்றனர். பாராளுமன்ற அரட்டையும், இராணுவப் போரும், தளவாட உற்பத்தியும், உலக அமைதியும், நல்லது - கெட்டதைப் பிரித்தறியும் அறிவுலகமும், விருப்பமான துறையை தேர்ந்தெடுக்கும் சுதந்திரமும், தத்துவப் பாசாங்கும், பத்திரிகைப் பம்மாத்தும் — இறுதியில் முதலாளித் தந்தையிடம் சரணடையும் அறிவு ஜீவி கலைஞனான மகனது நேர்த்தியான சந்தர்ப்பவாதத்தில் விளக்கம் பெறுகிறது. மீண்டுமொரு முறை படியுங்கள். நாடகம் கேலி செய்யும் 'சுதந்திரச் சிந்தனையை' இங்கேயும் நேர்த்தியாக உலாவரும் பல்துறை அறிவுஜீவிக் கனவான்களிடம் சரளமாகக் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

★ 'அமெரிக்க மோகம்' கட்டுரை கணினியின் மாயைகளை விளக்கியது. ஓலைச் சுவடி காலத்தில் அச்சு இயந்திரமும், புறா மூலம் செய்தி அனுப்பிய காலத்தில் தொலைபேசியும், இன்று கணினியும் வளர்ச்சியைக் குறிப்பது உண்மைதான். ஒரு விழுக்காட்டிற்கும் குறைவான நபர்களின் வளர்ச்சிக்கு உதவும் கணினியை நம்பி ஒரு நாட்டின் பொருளாதாரமிருப்பதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி விட்டனர்.

நாம் என்ன செய்ய வேண்டும்? இணைய பயன்பாட்டை புறக்கணிக்காமல், நம் பத்திரிகைகளை அதில் இடம்பெறச் செய்து நம் கருத்துக்களை ஒத்த கருத்துடையவர்களைச் சென்றடைய வேண்டும். ஒரு காலம் வரும். அப்போது கணினியும், இணையமும் எல்லோருடைய வீடுகளுக்கும் வரத்தான் போகிறது. இப்போது பில் கேட்சின் ஏகபோகமும், இந்திய மூளைகளின் அடிமைத்தனமும் முடிவுக்கு வரும்.

**— ந. அப்துல் ரஹ்மான், ஹாங்காங்**

★ கம்யூட்டர் கல்வி கற்கும் சிலரிடம் 'அமெரிக்கமோகம்' கட்டுரையின் கேள்விகளைக் கேட்டபோது,

''புதுமையை வரவேற்க வேண்டும். நாம் பயன்படுத்த வேண்டும். இழப்புகள் இருக்கத்தான் செய்யும். பேரிழப்பு ஏற்படுவதை அரசுதான் தடுக்க வேண்டும், நான் என்ன செய்ய முடியும், எனக்கு வாய்ப்பு இருப்பதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன், மற்றவர்களைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் நான் தோற்று விடுவேன்'' - என்று முழு சுயநல புராணமே பாடினார்கள்.

**- வாசகர் வட்டம், நெய்வேலி**

★ சுயநலனைக் கடந்து, மக்கள் விடுதலை நலனை இலட்சியமாகக் கொண்டு, கம்யூனிச பண்பின் இலக்கணமாகத் திகழும் 'பாபுஷ்கின்' போன்றவர்களது வரலாற்றினைத் தொடர்ந்து எழுதுங்கள்.

**- மகாலிங்கம், உசிலை வட்டம்.**

★ அன்றைய இந்தியாவில் குறுநில மன்னர்கள் கப்பம் கட்டியது போல இன்று மாநில முதல்வர்கள் பில் கேட்ஸ் காலில் தடாலடியாக விழுந்து கிடப்பதால் மீண்டும் இந்திய விடுதலைப் போர் அவசியமாகிறது என புதிய கலாச்சாரம் கணித்திருப்பது கச்சிதமான உண்மை.

**- ஆர்.ஆர். சாமி, திருவண்ணாமலை**

★ சமூகத்தில் பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை சராசரியாக கணக்கிடும்போது, அதில் குடும்பக் கட்டுப்பாடு அறுவையும் அடங்கியிருந்தது. ஆனால் இந்த நிலைமை உயிரைக் காவு கொள்ளும் வரை செல்லும் போது இரக்கமில்லாத ஆண் ஆதிக்கம் உச்சத்தில் நிற்கிறது என்பதை வேள்மதி சிறப்பாக உணர்த்தியுள்ளார்.

**- நிர்மலா, திருச்சி.**

★ வேள்மதி எழுதிய 'ஆணாதிக்கத்தின் தயவில் அரசின் குடும்பக் கட்டுப்பாடு' என்ற கட்டுரையின் இறுதியில், பெண்களை விட ஆண்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்வது நல்லது என்று அறிவியல் ரீதியான கருத்தைச் சொல்லியிருக்கலாம். தி.க. பொதுச் செயலாளர் மான மிகு வீரமணி அவர்கள் இதைத் தீர்மானமாகச் சொல்வார். அவரே இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்து கொண்டவர் என்பதும் முக்கியம். அவலங்களை பெரும்பாலும் எல்லோரும் சொல்வர். அவைகளுக்குத் தீர்வைச் சொல்பவர்கள்தான் நாட்டுக்குத் தேவை. அதைச் செய்பவர்கள்தான் தி.க.வினர்.

**- மணிவண்ணன், சென்னை.**

★ பட்டுப் பூச்சிகளைக் கொன்று பட்டாடை, புலித்தோல் ஆசனம், கொசுவிற்கு 'குட்நைட்', தலைப்பேனுக்கு தனிமருந்து எல்லாம் பயன்படுத்தி பசுவிற்கு மட்டுமே 'ஜீவகாருண்யம்' பேசும் இந்த 'விலங்குகள்' அவ்வப்போது சுப்பனையும், சுப்ஹானையும் மதவெறியால் 'பலி' கொடுப்பதும் உண்டு. அவாளின் நெய் கொழுப்பிற்கு வேண்டுமானால் இறைச்சி தேவைப்படாமல் இருக்கலாம்.

**- அப்துர் ரஹ்மான் ஷிப்லி,**
**தென்காசி.**

★ பசுவதைத் தடுப்பு எனும் பேரில் அவாள்களின் அண்டப் புளுகு, வாயில்லாப் பிராணியின் வாயால் சொல்லும் கவிதை மனதைத் தொட்டது.

**- இந்துமதி, திருச்சி.**

★ மீன்கார தாவுத் சுல்தான் தாத்தாவும் அவரது மனைவியும் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்று 'வலை' கதை முடிகிறது. தற்கொலையை இசுலாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே மற்ற மதங்களைச் சார்ந்தவர்களைவிட மிகக் குறைந்த அளவே முசுலீம்கள் தற்கொலை செய்கின்றனர் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**- சையத் முகமத், நெல்லிக்குப்பம்.**

★ சிவசுப்ரமணிய ஜெயசேகரின் 'வலை' சிறுகதை முசுலீம் சமூகத்திலுள்ள அவலத்தை தெளிவாய் எடுத்துரைத்தது. இவர்கள் இந்த ஏழ்மையில் உழலக் காரணம் யார்? தற்கொலை செய்தவன் நரகத்தில் இருப்பான் என குர்ஆன் கூறியும் இவர்களுக்கு அது தெரியாமல் இருக்கச் செய்தது எது? என் ஊரில் கூட 17 வயது முசுலீம் இளைஞன் ஒருவன் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டான். ஊர் பொதுநல நிதி ஏற்படுத்துவது நபி வழியாக இருந்தும் இது ஏன் அனைத்து ஜமாத்திலும் இல்லை? உழைத்த வர்க்கம் சோறின்றி செத்துக் கொண்டிருக்க மேல்தட்டு முசுலீம்கள் சின்ன காதுகுத்துக்கும், சுன்னத்துக்கும் விருந்து என்று மூட்டை கணக்கில் அரிசியை இறைப்பதும் அதில் ஹஜ்ரத்தும், ஜமாத்தும் பங்கெடுப்பது ஏன்?

'கம்யூனிசசித்தாந்தம் தோற்றுப்போன சித்தாந்தம்' என்று கூறி ரசியாவைக் காட்டுகிறார்கள். ஆனால் அதனை ஆராயாது விடுவது ஏன்? 'சீனா சென்றேனும் கல்வி பெறுக' என்பது நபிமொழி. கம்யூனிச கல்வி பயனுள்ளதாக இருந்தும் அதனை ஆராயாமல் இருப்பது ஏன்? ஏன், ஏன், என்ற கேள்வியை ஓயாது எழுப்பி அவற்றுக்கு தம் சொந்த அனுபவத்திலிருந்து விடை காண்பதன் வாயிலாகவே உழைக்கும் மக்கள் விடுதலை பெற முடியும்.

**- முஹம்மது இல்யாஸ்,**
**திருவிடைமருதூர்.**

★ துரை. சண்முகத்தின் 'மதமாற்றம்' கதையில் நான் இரசிக்கும் அவரது பழைய நடை மீண்டிருந்தது. சிறுகதை ஓட்டமாய் அமைந்திருந்தாலும் 'தற்கொலைப் படை'யைப் போன்று அழுத்தமான உட்கருத்தைக் கொண்டிருக்கவில்லை. கருத்தாழம் முதன்மையாக நிறுத்தப்படுவதுதான் அவசியம் என்று கருதுகிறேன்.

ஜெயசேகரின் 'வலை' கதை உட்கரு ஏழ்மையை நேரிடையாக சொல்வதால், படிக்க சாதாரணமாகவே இருந்தது. ஒவ்வொரு சம்பவமும் அவர் விளக்கும் முன்பேயே தெரிந்து விடுவதால் சலிப்பூட்டியது. வறுமையும், வயோதிகமும் சேர்ந்து வரும்போது பிச்சை அல்லது தற்கொலை என்பது மக்களின் பொது அறிவுக்கு தெரிந்ததுதான். அதனால் கதை தரும் அனுபவத்திலிருந்து புதிதாக உணரவோ சிந்திக்கவோ எதுவுமல்லையென்றாகி விடுகிறது.

**- சிங்காரம், திருச்சி.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER NO. 42647/87
Regd. No. TN/Chief PMG-303 / 2000
www.padippakam.com



# நிறைவேறாத கனவு

நிறைவேறாத கனவு
என்னவாகிப் போகிறது?

வெயிலில் காய்ந்து சுருங்கும்
திராட்சையைப் போல்
உலர்ந்து போகிறதா?

அல்லது
ஒரு புண்ணைப் போல
சீழ்பிடித்துப்
பின் மறையுமோ?
கெட்டுப் போன
மாமிசத்தைப் போல
நாற்றமடிக்குமோ?

அல்லது
பாகு நிறைந்த
இனிப்பைப் போல்
சர்க்கரை பூத்துப் போகுமோ?

ஒரு வேளை
கனமான ஒரு சுமை போல
தளர்ந்து
தொங்கிப் போய்விடும்
போலிருக்கிறது!

அல்லது
கனவு
வெடிக்குமா?

தமிழாக்கம் : இந்திரன்
கவிதை இடம்பெற்றுள்ள நூல்:
'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்'

- லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்
அமெரிக்கா

படிப்பகம்